# சைவ நெறி

6 ஆம் தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ நெறி

## 6 ஆம் தரம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

முதற் பதிப்பு 1975

கல்வி அமைச்சின் சைவ சமய ஆலோசனைக் குழுவினரால் தயாரிக்கப்பட்டு, இலங்கைப் பல்கலைக்கழக கட்டுபெத்தை வளாக அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டு, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நாட்டின் விருத்திக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அயராது உழைப்பதற்குச் சீலமுஞ் செம்மையும் நிறைந்தவர்கள் உருவாகவேண்டும் என்பதை யாவரும் ஒத்துக்கொள்வர். இத்தகைய சமூகத்தை நாட்டில் உருவாக்குவதிற் சமயக் கல்வி முக்கிய இடம் பெறுகிறதென்று நாம் உறுதியாக நம்புகிறோம். இதற்காக தமது பாடசாலைகளிற் சமயபோதனையைத் திருத்தியமைக்குந் திட்டமொன்றைக் கல்வி யமைச்சு கையாண்டு வருகிறது. நாட்டில் நிலவிவரும் ஐம்பெருஞ் சமயங்கள் ஒவ்வொன்றிற்கும் சமயபாட ஆலோசனைக் குழு ஒன்றைக் கௌரவ கல்வி அமைச்சர் ஏற்படுத்தியிருக்கிறார். ஒவ்வொரு குழுவும் அந்தந்தச் சமய அறிவு நிரம்பியவர்களாகவும், கல்வித்துறையிற் கைதேர்ந்தவர்களாகவும், தமது சமயத்தவர்களின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமானவர்களாகவும் உள்ள பெரியார்களை உறுப்பினராகக் கொண்டிருக்கிறது. இக்குழுக்கள் பாடத்திட்டங்கள் தயாரிப்பதற்கும், பாடநூலும் ஆசிரியர் கைநூலும் எழுதுவதற்கும், ஆசிரியர்களுக்குச் சேவைக்காலப் பயிற்சி அளிப்பதற்கும் பொறுப்பேற்றிருக்கின்றன.

இந்துசமயக்குழு பொறுப்புணர்ச்சியோடு பணிபுரிந்து ஆறும் தரத்திற்கான சமய பாடநூலை 1974 ஆம் ஆண்டில் அச்சேற்றுவதற்காகக் கையளித்தது. குழுவுறுப்பினர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக. நூல், முப்பதிற்கு மேற்பட்ட முன்னோடிப் பாடசாலைகளிற் பரீட்சிக்கப்பட்டுச் சமயப் பெரியார்கள் பலரால் துருவி ஆராயப்பட்டதன் விளைவாக வேண்டியவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இது மிகவும் போற்றுதற்குரிய செயலாகும்.

நீண்டகாலமாக நம்நாட்டுச் சிறுருக்குச் சமயக்கல்வி ஒரு பாடமாகப் போதிக்கப் பட்டு வரினும், அதைப் பயிற்றலின் நோக்கம் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியீட்டவில்லை என்பதை யாவரும் ஒத்துக்கொள்வர். சமயக்கல்வித் திருத்தத் திட்டத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட பாடத்திட்டங்கள் பாடசாலைகளுக்கு இவ்வாண்டு முற் பகுதியில் அனுப்பப்பட்டன. இப்பாடத்திட்டங்களின் அடிப்படையிலே மாணவர்களுக்கான பாடநூல்கள் உருவாகிவருகின்றன. பாடநூல்களுக்கான ஆசிரியர் கைநூல்களும் தயாராகிவருகின்றன. இந்நூல் ஆறும் தரத்தில் 1975 ஆம் ஆண்டுதொட்டுப் பயன் படுத்தப்படும். இந்நூலைக் கையாளும் ஆசிரியர்களுக்கு ஏற்கனவே வேண்டிய சேவைக் காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இவற்றின்மூலம் சமயபாடம் போதிப்பதின் நோக்கத்தைப் பெரிதும் பெறுகிறோம் என்பது மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். எமது நோக்கத்திற் பூரண வெற்றி காண்பதற்கு ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் ஒத்துழைப்பைப் பெரிதும் வேண்டுகின்றோம்.

இந்நூலைப் பிரசுரிப்பதற்கு உறுதுணையாயிருந்த சமயக்கல்விக் கிளை அலுவலகத் தாருக்கு எமது நன்றியைத தெரிவிக்கிறோம்.

பிரேமதாச உடகம
கல்வி மா அதிபரும் கல்வியமைச்சின்
செயலாளரும்

நவம்பர், 1974.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எமது சமயம் | 1 |
| 2. | திருக்கோயில் | 2 |
| 3. | திருக்கோயில் வழிபாடு | 4 |
| 4. | திருக்கேதீச்சரம் | 6 |
| 5. | கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீசுவரர் | 8 |
| 6. | வண்ணை வைத்தீசுவரர் | 11 |
| 7. | சிவசின்னங்கள் | 14 |
| 8. | கந்தவிரதம் | 17 |
| 9. | திருஞானசம்பந்தர் | 19 |
| 10. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் | 24 |
| 11. | திருநாவுக்கரசு நாயனார் | 26 |
| 12. | திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் | 30 |
| 13. | சுந்தரமூர்த்தி நாயனார் | 32 |
| 14. | சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் | 37 |
| 15. | மாணிக்கவாசகர் | 39 |
| 16. | திருவாசகம் | 44 |
| 17. | இளையான்குடிமாற நாயனார் | 45 |
| 18. | நமிநந்தியடிகள் | 47 |
| 19. | கண்ணப்ப நாயனார் | 48 |
| 20. | தண்டியடிகள் நாயனார் | 52 |
| 21. | காரைக்காலம்மையார் | 54 |
| 22. | பட்டினத்தார் | 56 |
| 23. | பட்டினத்தார் பாடல் | 58 |
| 24. | மார்க்கண்டேயர் | 59 |
| 25. | சிவபெருமான் சோதிப்பிழம்பானமை | 62 |
| 26. | திருப்புராணம் | 64 |
| 27. | திருப்புகழ் | 66 |
| 28. | குமரகுருபரர் | 68 |
| 29. | சகலகலாவல்லிமாலை | 70 |
| அநுபந்தம் : I | புத்தர் பெருமான் | 75 |
| ,, II | முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) | 78 |
| ,, III | கிறிஸ்தமறையை ஏற்படுத்தியவர் இயேசுக்கிறிஸ்து | 82 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலோசனைக் குழு உறுப்பினர்

### 1973

1. திரு. மு. வயிரவப்பிள்ளை (தலைவர்)
2. சுவாமி பிரேமாத்மானந்தஜீ
3. திரு. கி. லக்ஷ்மண ஐயர்
4. திரு. க. கனகசபாபதி
5. திரு. சி. சிவகுருநாதன்
6. திரு. வ. நடராஜா
7. திரு. வி. கந்தசாமி
8. திரு. சி. உ. சோமசேகரம்
9. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
10. திரு. ந. சண்முகரத்தினம் (செயலாளர்)

### 1974

1. கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் (தலைவர்)
2. சுவாமி பிரேமாத்மானந்தஜீ
3. திரு. மு. வயிரவப்பிள்ளை
4. திரு. க. கனகசபாபதி
5. திரு. கி. லக்ஷ்மண ஐயர்
6. திரு. இர. சிவலிங்கம்
7. திரு. சி. சிவகுருநாதன்
8. திரு. சி. உ. சோமசேகரம்
9. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
10. திரு. ந. சண்முகரத்தினம் (செயலாளர்)

### எழுத்தாளர்கள்

1. திரு. சி. சிவகுருநாதன் M. A., Dip. in Ed.
2. திரு. ந. சண்முகரத்தினம் B.A., P.G.T., Dip. in T.E.F.L

### ஓவியர்

1. திரு. க. இராசரத்தினம்
2. திரு. எஸ். சிவசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. எமது சமயம்

எமது சமயம் சைவசமயம் ஆகும். சைவம் என்றாற் சிவத்தோடு தொடர்புடையது என்று பொருள்படும். சமயம் என்பது வழி. எனவே, சைவசமயம் என்ற சொற்றொடர், எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமானை அடைதற்கான வழி, எனப் பொருள்படும்.

சைவசமயமானது அன்பினால் இறைவனை அடையும் முறையினை விளக்குகிறது. கடைப்பிடித்தற்கு எளிதாகலின் இம்முறையைச் சிறந்ததென்பர். அன்பின் வழியைக் கடைப்பிடித்து, இறைவன் திருவருள் பெற்ற சைவப் பெருமக்கள் பலரின் வாழ்க்கை வரலாறுகளைப் பெரியபுராணத்திலும் பிறவிடங்களிலுங் காணலாம். அவற்றிற் சிலவற்றை நீங்கள் பின்பு படித்து இன்புறுவீர்கள்.

இனிச் சைவசமயம் பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களின் உண்மையினை நியாயத்தோடு மிகவும் விளக்கமாக எடுத்துக்கூறுகிறது.

பதி என்பது முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானைக் குறிக்கும். கடவுள் ஒருவரே என்பது சைவநூற் றுணிபு.

பசு என்பது உயிர்களைக் குறிக்கும். உயிர்கள் எண்ணற்றவை. உயிர்களைத் தொன்றுதொட்டே ஆணவம் என்னும் அழுக்குப் பற்றி நிற்கிறது. இவ்வழுக்கு உயிர்களை மெய்யறிவு பெற்று இறைவனை உணரா வண்ணம் மறைத்திருக்கிறது. இவ்வழுக்கை நீக்கி உயிர்களைப் பக்குவப் படுத்துவதற்காகவே இறைவன் கருணை கூர்ந்து உலகத்தையும், அதன் கண்ணேயுள்ள நுகர்பொருள்களையும், உயிர்களுக்கான உடம்புகளையும் படைத்தருளுகிறான்.

உடம்பெடுத்த உயிர் நல்வினை தீவினைகளைச் செய்கிறது. இவ்வினைகட்கேற்பப் பிறந்தும், இன்பதுன்பங்களை நுகர்ந்தும், இறந்தும் உழல்கின்றது.

இவ்வாறாக உழலுமுயிர் அறத்தின்வழி நிற்குமாயின், அன்புண்டாகும். அவ்வன்பு முதிரவே, அருளுண்டாகும். அருளினால் இறைவனை அடைதற்கான உணர்ச்சியாகிய தவமுண்டாகும். இத்தவம் உயிரைப் பிறவிக் கடலினின்றும் நீக்கிப் பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்கும்.

> தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
> அருளெனுங் குழவியும் அணையும் அங்கவை
> வருவழித் தவமெனும் மாட்சி எய்துமேல்
> தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்

என்றார் கச்சியப்பசிவாசாரியார்.


உயிரைப்பற்றி நிற்கும் ஆணவத்தினையும், ஆணவமுனைப்பினால் உயிர் செய்யும் இருவினைகளையும், இவ்விருவினைகளைத் தொலைத்தற்கு ஏதுவாகிய உடம்பு, உலகம், நுகர்பொருள் ஆகியவற்றையும் பாசம் என்பர். முப்பொருள்களின் இயல்புகளையும், அவற்றின் தொடர்புகளையும், இறைவனை அடையும் வழியினையும் மேல் வகுப்புக்களில் நீங்கள் விரிவாகவும் விளக்கமாகவும் படிப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. திருக்கோயில்

திருக்கோயிலாவது எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டு எழுந்தருளியிருக்குமிடமாம்.



திருக்கோயிலிலே செயற்பாலனவாகிய பிரதிட்டை, பூசனை, திருவிழாக்கள் முதலிய கிரியைகள் எல்லாவற்றையும் விதிக்கும் நூல்கள் சைவாகமங்கள்.

அவற்றை ஓதியுணர்ந்தவர்களே திருக்கோயிற் கிரியைகளை விதிப்படி செய்ய வல்லவர்கள். ஆகமங்களை ஓதியுணர்தற்கு, பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களைச் செய்து, இறைபத்தி குருபத்தி அடியார்ப்பத்திகளில் மேம்பட்டுத் தீட்சை பெற்றவர்களே யோக்கியராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயிற் கிரியைகள் சிரத்தையோடு விதிப்படி செய்யப்படுமாயின், உலகத்திலே மழை தவறுமற் பெய்யும்; நெல் முதலாகிய வளங்கள் பெருகும்; ஆரோக்கியம் உண்டாகும்; நீதி நிலவும்; அறிவு ஒழுக்கமுஞ் சமய பத்தியுந் தழைத்தோங்கும்.

திருக்கோயில்தோறும் வித்தியாசாலை நிறுவி, பிள்ளைகளுக்கு வேதம், ஆகமம், பன்னிருதிருமுறை, மெய்கண்டசாத்திரம் முதலிய நூல்களை மரபுக் கேற்பக் கிரமப்படி கற்பித்தல் வேண்டும். கற்ற பிள்ளைகளுக்குத் தேர்வுகள் நடாத்தி, அவர்களுள்ளே திறமையும் நல்லொழுக்கமும் பத்தியுமுடையவர்களையே திருக்கோயிலுக்கு ஆசாரியர் முதலாயினேராக நியமித்தல் வேண்டும். அவர்களுக்கு ஊண், உடை, உறையுள் முதலியவற்றின் பொருட்டு முட்டுப்பாடில்லாமற் பொருளுதவி செய்யவேண்டும்.

இறைவனுடைய குணமகிமைகளையும், ஆன்மாக்கள் செய்யும் புண்ணிய பாவங்களையும், அப்புண்ணிய பாவங்களின் பயனுகிய சுகதுக்கங்களையும், கடவுளை வழிபடும் முறைமையையும், அவ்வழிபாட்டினுலே பெறப்படும் முத்தியின்பத்தையும் அறியும் அறிவைத் திருக்கோயில்கள் சைவமக்களுக்கு வழங்குதல் வேண்டும். ஆதலினுலே, நல்லொழுக்கமும் பத்தியும் சமயசாத்திர உணர்ச்சியுமுடைய பெரியோர்களைச் சமய போதகர்களாக நியமித்துத் திருக்கோயில்களிலே காலந்தோறுஞ் சைவமக்களுக்குச் சமய நெறியைப் போதிப்பித்தல் வேண்டும்.

சைவமக்களுக்கு இறையன்பு வளர்ந்து பெருகும் பொருட்டுத் திருக்கோயில்களிலே வேதவொலியும், செந்தமிழ்த் திருமுறை ஒலியுமே தழைத்தோங்கும்படி செய்தல் வேண்டும். சைவமரபிற் பிறந்தவரேயாயினும், தேவாரம் முதலிய அருட்பாடல்களை ஓதாதவர் சைவராக மாட்டார். இறையன்பு வளர்தற்கு ஏதுவாகிய பேச்சுக்களும் செயல்களுமேயன்றி, மற்றைப் பேச்சுச் செயல்கள் திருக்கோயிலிலே நிகழாவண்ணம் பாதுகாத்தல் வேண்டும்.

நல்லொழுக்கமும் தெய்வ பத்தியும் ஆகமவுணர்ச்சியும் உடைய பெரியோர்கள் கோயிலதிகாரிகளாய் இருப்பார்களாயின், அவர்கள் பழி பாவங்களுக்குப் பயந்து திருக்கோயிலைச் சிரத்தையோடு விதிப்படி நடாத்திச் சமய பத்தியை வளர்ப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. திருக்கோயில் வழிபாடு

யாவரும் நாடோறும் திருக்கோயிலிற் சென்று சிரத்தையோடு விதிப்படி தரிசனஞ் செய்தல் வேண்டும். திருக்கோயில் வழிபாட்டை நாடோறுஞ் செய்தற்கு இயலாதாயின், புண்ணிய காலங்களிலேனும் தவருமற் செய்தல் வேண்டும்.

ஆலயதரிசனஞ் செய்ய விரும்புவோர் புண்ணிய தீர்த்தத்திலே நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து, அநுட்டானம் முடித்துக்கொண்டு ஆலயத்துக்குப் போதல் வேண்டும்.

திருக்கோயிலுக்குச் செல்லும்பொழுது புனிதமான ஒரு கலத்திலே தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை முதலியவை வைத்து, அரைக்குக் கீழ்ப்படாது உயர்த்திய கையில் ஏந்திக்கொண்டு போதல் வேண்டும். இவைகளுக்குப் பொருளில்லாதவர் பூசைக்குரிய பூக்களையேனும், வில்வம் பன்னீர் முதலிய இலைகளையேனும் கொண்டுபோய்க் கொடுத்து வணங்குதல் வேண்டும்.

திருக்கோயிலைச் சமீபித்த உடனே திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே சென்று பலிபீடத்துக்கு இப்பால் வணங்குதல் வேண்டும்.

ஆடவர் அட்டாங்க வணக்கமும் பெண்கள் பஞ்சாங்க வணக்கமும் செய்தல் வேண்டும்.

வணக்கம் மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் செய்தல் வேண்டும். ஒருதரம் இருதரம் செய்தல் குற்றம்.

வணக்கம் செய்யுமிடத்து மேற்கேயாயினும் தெற்கேயாயினும் கால் நீட்டல் வேண்டும். கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் கால் நீட்டலாகாது.

கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் சிரசை வைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து வணங்குதல் வேண்டும்.

வீழ்ந்து வணங்கி எழுந்து கும்பிட்டுக் கடவுளை மறவாத சிந்தையோடு இரண்டு கைகளையும் இருதயத்திலே குவித்துக் கொண்டு, கால்களை மெல்ல வைத்து வலம் வருதல் வேண்டும்.

சிவபெருமானை மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பதினைந்து தரமாயினும், இருபத்தொரு தரமாயினும் வலம் வருதல் வேண்டும்.

விநாயகரை ஒரு தரமும், சூரியனை இரண்டு தரமும், பார்வதிதேவியாரையும் விட்டுணுவையும் நந்நான்கு தரமும் வலம் வருதல் வேண்டும்.

திருமுழுக்குக் காலத்திலே உள்வீதியிலே வலம் வருதல் வீழ்ந்து வணங்குதல் முதலானவை செய்தலாகாது.

வலம் வந்து சந்நிதானத்திலே வீழ்ந்து வணங்கிவிட்டு, எழுந்து கும்பிட்டுக் கொண்டு உள்ளே போய்க் கடவுளைத் தரிசித்து மனத்திலே தியானித்துச் சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலி செய்து, பத்தியுடன் தேவாரம் முதலிய அருட் பாடல்களை பண்ணிசையுடன் ஓதுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருச்சகரைக்கொண்டு இறைவனுக்கு அருச்சனை செய்வித்துத் தேங்காய் பழம் முதலியவற்றை நிவேதிப்பித்துக் கர்ப்பூர தீபம் காட்டச் செய்து, தரிசனஞ் செய்து அருச்சகருக்கு இயன்ற தட்சிணை கொடுத்தல் வேண்டும்.

இறைவனைத் தரிசனஞ் செய்து கொண்டு, அவருக்குப் புறங்காட்டாது பலிபீடத்துக்கு இப்பால் வந்து மூன்று தரம் வீழ்ந்து வணங்கி எழுந்து, வடக்கு நோக்கி இருந்து இறைவனைத் தியானித்துக்கொண்டு, அவருடைய மந்திரத்தை இயன்ற தரம் செபித்து எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்களாவன : குளிக்காமலும், தோய்த்துலர்ந்த ஆடை தரியாமலும், அநுட்டானம் செய்யாமலும் போதல்; பிறப்பு இறப்பு முதலாம் ஆசௌசங்களோடு போதல்; எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல்; மூக்கு நீர் சிந்துதல்; பாக்கு வெற்றிலையுண்டலும் உமிழ்தலும், உணவு உண்டல்; நீர் குடித்தல்; நித்திரை செய்தல்; மயிரைக் கோதி முடித்தல்; சூதாடல்; தோளிலே சால்வை இட்டுக் கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், சட்டையிட்டுக்கொள்ளுதல், காலணி இட்டுக்கொள்ளுதல்; வாகனமேறிச் செல்லுதல், குடைபிடித்துக்கொள்ளுதல், உயர்ந்த பீடத்திலிருத்தல், ஆசனத்திலிருத்தல்; தூபி, கொடிமரம், பலிபீடம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல்; விக்கிரகத்தையும் நிர்மாலியத்தையும் தீண்டுதல்; பெண்களைத் தீண்டல், பெண்களை இச்சித்துப் பார்த்தல்; ஒரு தரம் இருதரம் வணங்குதலும், வலம் வருதலும், ஓடி வலம் வருதல்; மூலத்தானத்துக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல், அகாலத்தில் தரிசித்தல்; வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், வீண்கீதம் பாடல், வீண்கீதம் கேட்டல்; திருவிளக்கு அவியக் கண்டும் தூண்டாது விடுதல், திருவிளக்கு இல்லாதபோது வணங்குதல்; திருவுலா நிகழும் பொழுது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குதல் முதலானவைகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. திருக்கேதீச்சரம்

எண்ணற்ற சிவாலயங்களுள்ளே சமய குரவர்களின் பாடல்பெற்ற தலங்களே சிறந்தனவாகும். நமது ஈழத்திருநாட்டிலும் தேவாரத் திருப்பாடல்பெற்ற தலங்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று கோணமாமலையில் விளங்கும் திருக்கோணேச்சரமாகும். மற்றையது மன்னார் மாவட்டத்தில் மாந்தை என்னும் ஊரிலுள்ள திருக்கேதீச்சரமாகும். திருக்கேதீச்சரத்திற்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் சுந்தரமூர்த்திநாயனாரும் பாடியருளிய தேவாரத்திருப்பதிகங்கள் உண்டு.

மாந்தை மிகப்பழைய காலத்தில் மாதோட்டம் என்ற பெயர் கொண்டிருந்தது. மாதோட்டம் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கிற்று. இந்தியர், அராபியர், கிரேக்கர், உரோமர் முதலாய பலரும் இங்கே கப்பல்களில் வந்து வியாபாரஞ் செய்து சென்றனர்.

மாதோட்டம் இயற்கை எழில்மிகு நகரமாக விளங்கிற்று. தென்னந்தோப்புக்களும், கமுகஞ் சோலைகளும், வாழைத் தோட்டங்களும் அங்கே மலிந்து கிடந்தன. மயில்களும் மந்திகளும் அவற்றுட் கட்டின்றி உலாவித் திரிந்தன.

மாதோட்டத்தின் வளத்திற்குக்காரணமாயிருந்தது பாலாவி என்னும் ஆறும். அது இன்று ஒரு குளமாகக் காட்சியளிக்கிறது. பாலாவி ஒரு புண்ணிய தீர்த்தம். அதில் தீர்த்தமாடிய அடியார்கள் உற்றநோய் யாவும் நீங்கப் பெறுவர் என்பர். சுந்தரமூர்த்திநாயனார் பாலாவியைத் தாம்பாடிய திருக்கேதீச்சரப் பதிகப்பாடல் ஒவ்வொன்றிலுஞ் சிறப்பித்துள்ளார்.

இப்பாலாவிக் கரையிலேயே திருக்கேதீச்சரநாதர் கௌரியம்பாள் சமேதராய்க் கோயில்கொண்டருளி இருக்கின்றார். ஒன்பது கோள்களுட் கேது என்னுங் கோள் வழிபட்டமையால், திருக்கேதீச்சரம் என்னும் பெயர் பெறலாயிற்று என்பது புராண வரலாறு.

மிகப்பழைய காலந் தொடக்கம் சிறப்புற்று விளங்கிய இத்தலம் தேவார ஆசிரியர் காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தது. இலங்கை சோழப் பேரரசின் ஆட்சிக்குட்பட்ட காலத்தும், யாழ்ப்பாணத்தரசர் காலத்தும் அரச கண்காணிப்பின் காரணமாகத் திருக்கேதீச்சரம் வளம்பெற்று விளங்கியது.

மேலைநாட்டுக் கிறீத்தவர்களாகிய போத்துக்கேயர் இலங்கையின் கரையோரப்பகுதிகளில் தமது ஆட்சியை நிறுவிய காலந்தொட்டு, ஏனைய சைவக் கோயில்களைப்போல், திருக்கேதீச்சரமும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. நாளடைவில் இயற்கையின் சீற்றத்தால் இருந்த இடமே தெரியாது மறைந்தது.

எனினும் தேவாரத் திருப்பாடல்கள் திருக்கேதீச்சர நினைவை சைவமக்களிடையே நிலைபெறச் செய்து வந்தன.

இவ்வாறு ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகள் கழிந்தன. ஈழத்திற் சைவத்தைப் பேணிப்போற்ற நாவலர்பெருமான் தோன்றினார். அவருடைய சிந்தையிலே திருக்கேதீச்சரத்தைத் தேடி மீளவும் அங்கே கோயில் கட்டவேண்டும் என்ற அவா குடி கொண்டது. சைவமக்களை இப்பணியில் ஈடுபடுமாறு பலவாறாக ஊக்கினார். எனினும் அவர் காலத்தில் இதுபற்றி ஒன்றும் நடைபெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துச் சைவப்பெருமக்கள் திருக்கேதீச்சரம் இருந்தது எனக் கருதப்படுமிடத்தை அரசிடமிருந்து பெறப் பல முயற்சிகள் செய்தும் காரியம் கைகூடவில்லை. பின்னர், 1893 ஆம் ஆண்டில் நாற்பது ஏக்கர் பரப்புக் கொண்ட அக்காணி ஏலத்தில் விற்பனைக்கு விடப்பட்டபோது அதனை யாழ்ப்பாணச் சைவப் பெருமக்களதும், ஈழத்தில் வாணிபத்திலீடுபட்டிருந்த நாட்டுக் கோட்டை நகரத்தாரதும் சார்பில் திரு. பழனியப்பாச் செட்டியார் ரூ. 3,100 கொடுத்து விலைக்கு வாங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து 1894 ஆம் ஆண்டு தைமாதம் சைவச்சான்றோராகிய பசுபதிச்செட்டியார் யாழ்ப்பாணத்திலிருந்து குருக்கள்மார் வேலையாட்களுடன் சென்று காடுவெட்டிச் சோதனை செய்தபொழுது பழைய கோயிலிருந்த அடியீட்டு நிலமுஞ் சுற்றுப் பிரதிட்ட இலிங்கமொன்றுங் கண்டுபிடிக்கப்பட்டன. அதே ஆண்டு ஆவணி மாதம் ஒரு சிறு கோவிலை அங்கே நிறுவிவிட்டுச் செட்டியார் மீண்டார்.

இக்கோயிலின் பரிபாலனத்தை மேற்கொண்ட இலங்கையிலிருந்த நாட்டுக் கோட்டை நகரத்தார் சிலவாண்டுகள் கழித்து, 1903 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் நாள் ஒரு கற்கோயிலைக் கட்டி மகாகும்பாபிடேகம் செய்து வைத்தார்கள். அப்போது காசியிலிருந்து கொண்டு வந்த சிவலிங்க அம்பாள் விக்கிரகங்களே இன்றும் எழுந்தருளியிருக்கின்றன.

முதலாம் உலக மகாயுத்தம் (1914-1918) முடிந்த பின் மன்னாரில் அரசு அலுவலகங்களிற் பணிபுரிந்த சைவப் பெரியார் சேர்ந்து கோயிலை மீண்டும் திருத்தி அமைத்தனர். அதுவே மிக அண்மைக்காலம் வரையும் நிலைபெற்று வந்தது.

இக்கோயிலைப் பண்டைப் பெருமைக்கும் சிறப்புக்கும் ஏற்பப் பெரிய கோயிலாகக் கட்டியெழுப்பி, நித்திய நைமித்தியங்களை ஒழுங்காக நடாத்தி வர வேண்டுமென்ற பேரவாவோடு 1948 ஆம் ஆண்டு திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை நிறுவப்பட்டது. இச் சபையார் கோயிற் பரிபாலனத்தைக் கையேற்ற பின்பே, கோயிலும் அதன் சுற்றாடலும் உருவம் மாறத் தொடங்கின.

சிவமணி கந்தையா வைத்தியநாதன் புனருத்தாரணச் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின் அன்னார் செய்த அருமையும் பெருமையுஞ் சார்ந்த பணிகள் மிகப் பலவாகும்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருக்கேதீச்சரத்திற் கௌரியம்மையுடனுறையும் திருக்கேதீச்சரரைச் சென்று வழிபடுதல் ஒவ்வொரு சைவசமயத்தவரதுங் கடமையாகும்.


---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீசுவரர்

மட்டக்களப்புப் பகுதியில் பிரசித்தி பெற்ற சைவத்தலங்கள் பலவுள. அவற்றுள் மிகப் பழமை வாய்ந்த ஒரு சிவத் தலமே கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீசுவரர் ஆலயமாகும்.



சுயம்புலிங்கமாகிய தான்தோன்றியீசுவரர் காலங்கடந்த மூர்த்தியாவர். ஏறக்குறைய கி.மு. 3000 ஆண்டளவிற் பாணமைப்பகுதியில் மும்முலைத்தாடகை என்றொரு அரசி ஆட்சி புரிந்து வந்தாள். அவளுடைய ஆணைப்படி காடுகெடுத்து நாடுதிருத்திய வேடுவர் சிலர் இப்பகுதியிலே கொக்கட்டிய மரநிழலில் அமர்ந்திருந்த இம்மூர்த்தியைக் கண்டனர். அவரைக் கொத்துப் பந்தரிட்டு வழிபட்டு வந்தனர். இவ்வாறு செவிவழக்காக வருங்கதை கூறுகிறது.

இவ்வாறாக, கோணேசப்பெருமானுக்குத் திருப்பணிகள் செய்துகொண்டிருந்த குளக்கோட்டன் தானே தோன்றிய "தான்தோன்றியீசுவரரின்" பெருமையைக் கேள்வியுற்றான். கொக்கட்டிச்சோலைக்கு வந்து தான்தோன்றியப்பருக்குக் கோயில்கட்டி, கோயிற் றிருப்பணிகள் செய்வதற்கு இந்தியாவிலிருந்து ஏழு குடிக்குக மரபினரை இங்கே குடியேற்றினான். கோயிற் பூசைக்கான பணிகள் யாவற்றையும் "கோயிலார்" என்றொரு வகுப்பினர் இன்றுஞ் செய்துவருவதை இங்குக் காணலாம்.

இவ்வாறாக, இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி ஏற்பட்டது. கி.பி. பதினாறாம் நூற்றாண்டிலே போர்த்துக்கேயர் சைவத் திருத்தலங்களையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கினர். டீசூசா என்ற தளபதி தான்தோன்றியீசுவரர் கோயிலை இடிப்பதற்காக வந்தான். அவன், படைகளை வெளியே நிறுத்தி விட்டுக் கோயிலின் உள்ளே சென்றான். அந்த நேரம் கோயிற் பூசகர் மிகப் பயந்து நடுக்கத்தோடு நின்றார். கோயிலின் உள்ளே சென்ற போர்த்துக்கேயன் உள் வாசலுக்கு வெளியே நின்று பூசகரை அழைத்தான். வாயிலுக்கு நேரே படுத்திருந்த 'நந்தி' அவன் கண்ணிற் பட்டுவிட்டது. அர்ச்சகரைப் பார்த்து "அங்கே படுத்திருப்பது என்ன?" என்று கேட்டான். "அது நந்தியெம்பெருமான்" என அவர் விடைகூறினார். "நந்தியா ; நந்தியென்றால் என்ன?" என்று கேட்டான். "மாடு" என்று மறுமொழி கிடைத்தது. "அந்த மாட்டிற்குப் புல்லும் தண்ணீரும் கொடும். அது அதைத் தின்னட்டும்" என்று அந்தப் போர்த்துக்கேயன் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னான். அதற்குப் பூசகர் '' அது இன்று புல் தின்னாது. வருகிற வெள்ளிக்கிழமைதான் புல் தின்னும் '' என்று சொன்னார். '' அப்படியா ? வருகிற வெள்ளிக்கிழமை இந்த மாடு புல் தின்னாவிட்டால் உமது கழுத்தும் போம் ; கோயிலும் தரை மட்டமாகும் '' என்று கூறிச் சென்றான் டீசூசா.

இதனால் மிக்க துன்பம் அடைந்த வராகிப் பூசகர் தான்தோன்றியீசுவரர் பூசையைக் குறைவற முடித்துவிட்டு அன்றிரவு உணவு உட்கொள்ளாது படுத்துவிட்டார். தான்தோன்றியீசுவரர் அவர் கனவில் தோன்றி '' அன்பனே, போர்த்துக்கேயன் துன்பஞ் செய்வான், கோயிலை இடிப்பான் என மனம் வருந்தாதே. வெள்ளிக்கிழமை அவன் குறிப்பிட்டபடி வருவான். நீ அறுகம் புல், மஞ்சள் நீர் முதலியவற்றையும் ஆயத்தஞ் செய்து மூலத்தானத்துள் வைத்துக்கொண்டு மூலத்தானத்துக்குள்ளேயே நில். அவன் வந்து வெளியே நின்று உன்னை அழைத்துப் புல்லைக் கொடுக்கச் சொல்லுவான். அப்பொழுது கர்ப்பக் கிருகத்துள் நின்றபடியே நந்தியைப் பார்த்து '' இந்தா கந்தா '' என்று கூப்பிடு. ''உன் விருப்பம் நிறைவேறும்'' என்று கூறி மறைந்தருளினார். இதனாற் சந்தோஷங்கொண்ட பூசகர் தான்தோன்றிப்பெருமானின் கருணையை நினைந்து பூரிப்படைந்திருந்தார்.

வெள்ளிக்கிழமை டீசூசா என்ற தளபதி படைகளை வெளியே நிறுத்திக் கோயிலின் உள்ளே சென்று பூசகரை அழைத்துப் புல்லைக் கொடுக்குமாறு கூறினான். மூலத்தானத்துள்ளே நின்றபடியே பூசகர் நந்தியைப் பார்த்து '' இந்தா கந்தா '' என அழைத்தார். என்ன ஆச்சரியம் ! வெளியிலே பயத்தோடு நின்ற மக்களும் போர்த்துக்கேயரும் காண அந்தக் கல்மாடு உடம்பை நிமிர்த்திக் கால்களை உயர்த்திப் பாய்ந்து சென்று அர்ச்சகர் கொடுத்த புல்லைத் தின்று நீரைப் பருகிவிட்டுத் திரும்பி வந்து டீசூசா என்ற அந்தத் தளபதியை ஒருமுறை பார்த்துவிட்டுத் தன் னிருப்பிடத்திற் சாணத்தையிட்டுவிட்டுப் படுத்துக் கல்லாக மாறிவிட்டது. இக் காட்சியைக் கண்ட போர்த்துக்கேயன் பயமும் அச்சமும் அடைந்தவனாய்த் தான் கொண்டுவந்திருந்த '' பாகற் கொட்டை வராகன்கள்'' (பாகல் விதை வடிவான பொற்காசு) முழுவதையும் தான்தோன்றியீசுவரருக்குக் காணிக்கையாகச் செலுத்திவிட்டுப் படைகளை அழைத்துக்கொண்டு திரும்பிவிட்டான்.

நந்தி பாய்ந்து உள்ளே சென்றதால் மூலத்தானத்தினுள் கற்படிகள் மூன்றிற் பாய்ந்த குளம்புத் தடம் இருப்பதையும், நந்தி கழித்த சாணம் கல்லாகி அப்படியே இருப்பதனையும் இன்றும் காணலாம். இதனால் தான்தோன்றும் அப்பர் புகழ் எங்கும் பரவியது. இப் பகுதி மக்கள் இச்சுயம்பு மூர்த்தியை 'தாந்தோண்டப்பர்' எனச் செல்வமாக அழைப்பர்.

இப்பகுதியிலே தேர்த்திரு விழா நடைபெறும் ஒரே தலம் இதுவாகும். இங்குள்ளார் இவ்விழாவைத் '' தேரோட்டம் '' என அழைப்பர். தேரோட்ட விழாவைக் காணப் பல்லாயிரம் மக்கள் இங்கு கூடுவர். மிகப் பெரிய கயிற்றினாலே தேரைக் கட்டி ஆயிரக்கணக்கான மக்கள் ஒருமித்து வீதியைச் சுற்றி இழுப்பார்கள். இது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

குளக்கோட்டு மன்னனால் தான்தோன்றியீசருக்கு மூன்று தேர்கள் இந்தியச் சிற்பிகளைக்கொண்டு நிருமாணிக்கப்பட்டன. அவற்றில் ஒரு தேர் ஒருமுறை மதிலை உடைத்துக்கொண்டு ஆலயத்திற்குப் பின்புறமாகவுள்ள வாவியுள் வீழ்ந்துவிட்டதென்று கூறுகின்றனர். மற்றைய இரண்டும் கோயிலில் இன்றும் இருக்கின்றன.

ஆவணி மாதத்தில் வரும் உத்தர தினத்தன்று கொடியேற்று விழா ஆரம்பமாகிப் பௌர்ணமியை அடுத்து வரும் ஞாயிறு வாரத்தில் '' தேரோட்டம் '' நடைபெறும். அடுத்த நாட்காலை சூகர வேட்டையும் தீர்த்தோற்சவமும் நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3—13531

பெறும். சிவவிரதங்கள் யாவும் இப் பகுதி மக்களால் இத்தலத்திலே மிக்க பய பத்தியுடன் அனுட்டிக்கப்பட்டு வருகின் றன.

இப்பழம்பெரும் பதியானது மட்டக் களப்பு நகரத்திலிருந்து தெற்கே தென்னை மரச் சோலையும் ஆலவிருட்சங்களும் குளிர்ந்த நிழலைப் பரப்பும் இயற்கை எழில்நிறைந்து விளங்கும் கொக்கட்டிச் சோலைக் கிராமத்தின் மத்தியிலே அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. வண்ணை வைத்தீசுவரர்

" செட்டியார் சிவன்கோவில் " என்று யாழ்ப்பாணத்துச் சைவமக்களாற் பெரிதும் வழங்கப்பட்டுவரும் வண்ணை வைத்தீசுவரர்கோயில், ஈழத்திலுள்ள பெருஞ் சிவாலயங்களுட் சிறந்த தொன்ருகும்.

1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றி, கிட்டத்தட்ட 150 ஆண்டுகளாக ஆட்சி புரிந்தனர். அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தர் 1796 ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தனர். இவர்கள் ஆட்சிக்காலத்திலே கரையோரப் பகுதிகளிலே சைவமும் பௌத்தமும் நலிவுற்றன, சைவத் தலங்கள் யாவும் அழிந்து, இருந்த இடமே தெரியாமற்போயின. மூன்று நூற்ருண்டுகளாக நம் முன்னேருக்குக் கும்பிடுவதற்குக்கூடக் கோயிலில்லை. ஆயினும் சமயவாழ்க்கைமூலம் எங்களுக்குச் சைவத்தைப் பேணித் தந்தார்கள். அவர்கள் செய்த உபகாரத்தை நாம் என்றும் மறக்கமுடியாது.

இது இவ்வாருக, ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் கோபாலச்செட்டியார் என்ெருருவர் திருவாரூரிலிருந்து வந்து யாழ்ப்பாணத்திற் குடியேறினர். காலப்போக்கில் அவருக்கொரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பேரழகு வாய்ந்ததாய் இருந்தது; தெய்வ அம்சங்கள் பல நிறைந்து விளங்கிற்று. பெரியோர் குழந்தைக்கு வைத்திலிங்கம் என்று பெயரிட்டனர்.

யாழ்ப்பாணத்து ஒல்லாந்தத் தேசாதிபதி கச்சேரி முதலியாரிடமிருந்து குழந்தையைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவரும் மனைவியும் குழந்தையை நேரே பார்க்க வந்தார்கள். அம்மையாருக்குப் பிள்ளைச் செல்வம் இல்லை. இக் குழந்தை மீது அவருக்குக் கவர்ச்சி ஏற்பட்டது. பெற்ருேர் அனுமதியோடு குழந்தையைக் கொண்டுபோய்த் தம்பிள்ளை போல் வளர்ந்து வந்தார்.

இளம் வைத்திலிங்கச் செட்டியார் காளைப்பருவம் எய்தினர். அப்பொழுது வழமைபோல் மன்னர்க்கடலில் முத்துக்குளிக்கும் குத்தகை ஏலத்திற்கு வந்தது. செட்டியார் குத்தகையைத் தான் எடுக்க விரும்பினர். தேசாதிபதியும் அவர் விரும்பியவாறே குத்தகையை அவருக்குக் கொடுத்தார். எதிர்பார்த்ததற்கு மேலாக வருவாய் கிடைத்தது.

இதற்கிடையில் தேசாதிபதியும் மனைவியுந் தந்தாய்நாடு திரும்பவேண்டிய காலம் வந்தது. இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியும் முடிவுக்கு வரும் அறிகுறிகளும் தோன்றின. இந்தநிலையில் செட்டியார் தனது வளர்ப்புத் தாய்தந்தையரிடம் வேண்டிக்கொண்டது ஒன்றே ஒன்றுதான். தன்னுடைய சமயத்தவர்கள் கும்பிடுவதற்கு ஒரு சைவக் கோயில் எடுக்க அனுமதி கேட்டார். அனுமதி மனப்பூர்வமாகக்கொடுக்கப்பட்டது.

செட்டியாருக்கு ஒரு நண்பர் இருந்தார். அவர் கூழங்கைத்தம்பிரான் என்ற பெரும்புலவர். புலவர் விருப்பப்படி சிவபெருமானுக்கே கோயில் எடுக்க விரும்பினர்.

அடுத்தபடியாக கோயில் எங்கே கட்டுவது என்று செட்டியாருக்குத் தெரியவில்லை. இறைவன் திருவுளத்தை வேண்டி நின்ருர். கனவிலே குறிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றின. அவற்றின்படி வண்ணார் பண்ணையில் கட்ட நிச்சயித்துக்கொண்டார்.

திருவாரூருக்கு அண்மையிற் புள்ளிருக்குவேளூர் என்ற பாடல்பெற்ற தலம் இருக்கிறது. அதை இப்பொழுது வைத்தீமெல்லாம் செட்டியாருக்குப் பொன்னும் புதையலுங் கிடைத்தன. இதுவும் இறைவன் செயல்போலும்.

கோயில் கட்டி, 1790 ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் வளர்பிறைப்புனர்பூச



சுவரன் கோயில் என்று அழைக்கிறார்கள். அக்கோயிலைப் போலவே தானுமொரு கோயில்கட்டச் செட்டியார் விரும்பினார்.

கோயில் கட்டுந் திருப்பணிவேலை துரிதமாக நடந்தது. கட்டுவேலைக்குக் கற்றேடி மரந்தேடிச் சென்ற விட

நாளிலே மகாகும்பாபிடேகம் நடைபெற்றது.

புள்ளிருக்கு வேளூரிற்போல் இங்கும் இறைவர்க்கு வைத்தீசுவரன் என்றும், அம்பாளுக்குத் தையல்நாயகி என்றும், தீர்த்தத்திற்கு சித்தாமிர்த புட்கரணி என்றும் பெயரிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுதொட்டு இன்றுவரை நாளும் ஆறுகாலப்பூசைகள் முறைப்படி நடக்கின்றன.

ஆண்டுதோறும் சுவாமிக்கு எடுக்கும் 22 நாட் பெருவிழா பங்குனி உத்தர நாளன்று தீர்த்தோற்சவத்தோடு முடிவுறும் ; அம்பாளிற்குப் பத்துநாள் விழா ஆடிப் பூரத்தன்று தீர்த்தத்திருவிழாவுடன் முற்றுப்பெறும்.

இவற்றைவிட வேறுபல விழாக்களும் ஆண்டுதோறுஞ் சிறப்போடு நடந்து வருகின்றன. நவராத்திரியின்போது அம்பிகை கொலுவீற்றிருத்தல் பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். நால்வர்க்குக் காட்சி கொடுக்கும் விழா பக்திவெள்ளம் நிறைந்தது. பிட்டுக்கு மண்சுமந்த பெருவிழா மிகவுஞ் சுவையானது. திருவெம்பாவையின்போது அதிகாலையில் நிகழும் மணிவாசகர் பூசை உள்ளத்தை உருக்குவதொன்றாகும்.

நாவலர் பெருமானுக்கு வண்ணை வைத்தீசுவரன் மேல் அளக்கொணாப் பற்று. அவர் சைவப் பிரசங்கங்கள் செய்வதற்குத் தகுந்த இடமாக வண்ணை வைத்தீசுவரன் கோயில் வசந்த மண்டபத்தையே கொண்டார். அவர்பின் அவர்மருகர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை புராணப் பிரசங்கங்களை அங்கேயே செய்துவந்தார். பின்பு சங்கர சுப்பைய சச்சிதானந்த ராசயோகிகளும் அங்கே இன்னிசையோடு கதை சொல்லி இறைவன் புகழ் பரப்பினர். இன்றும் காலத்துக்குக்காலம் கோயிலிற் சைவப் பிரசங்கங்கள் நடந்துகொண்டேயிருக்கின்றன.

அம்பாள் மகோற்சவத்தின் இறுதி நாளன்று தையல் நாயகி திருவூஞ்சல் நடைபெறும். அது ஒரு இன்பமும் உணர்ச்சியுந் தரும் பெருவிழாவாகும்.

மேல்வருவது வண்ணை முத்துக்குமார சுவாமி திருவூஞ்சலிலுள்ள ஒரு சிறந்த பாடல்.

பொன்னுடு நிகர்சோழ மண்டலத்திற்
புள்ளிருக்கு வேளூரிற் பொலிதல் போல

எந்நாளும் புகழீழ மண்டலத்தில்
இனிமையுடன் வண்ணை நகர் மேவியன்பால்

நன்னுமந் துதிசெய்யு மடியர் யாரும்
நாடரிய வற்புதமெய்ஞ் ஞான மெய்த

மன்னுக நல்லூரு முவந்தாட் கொள்ளும்
வரதமுத்துக் குமாரரே யாடிரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. சிவசின்னங்கள்

சிவ பெருமான் பிறப்பு இறப்பு இன்றி என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் செய்ய வல்லவர் ; இயல்பாகவே எல்லாம் அறிபவர்; தமது அனுபவத்தின் பொருட்டுப் பிறிதொன்றையும் வேண்டாதவர் ; தம்வயமுடையவர் ; ஆன்மாக்களிடத்திலுள்ள இரக்கமே திருமேனியாக உடையவர். இவ்விலக்கணங்களை உடையவர் ஒருவரேயன்றி வேறில்லை. சிவபெருமானே " பசுபதி " என்று அவரை மெய்யன்புடன் வழிபடுகின்றவர் சைவர் எனப்படுவர்.

சிவபெருமானையே முழு முதற்கடவுளெனக் கொண்டு வழிபடும் ஒவ்வொருவரும் அவர்மீதுள்ள அன்புக்கு அடையாளமாகத் தரிக்கத்தக்கன விபூதி, உருத்திராக்கம் என்னும் இரண்டுமேயாகும். இவ்விரண்டையுஞ் சிவசின்னங்கள் என்பர். சிவசின்னங்களை எவன் தரிக்கக் கூசுகிறானே அவன் சைவன் எனப்படமாட்டான்.

## விபூதி (திருநீறு)

விபூதி-பற்பம், பசிதம், சாரம், இரட்சை எனப் பெயர் பெறும். விபூதி என்றால் மேலான செல்வம் எனப் பொருள்படும். பேணி அணிந்தவர்களுக்கு அது மேலான செல்வத்தைக் கொடுக்கும். இங்கு மேலான செல்வம் என்றது வீட்டின்பப் பேற்றினையே. " பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு " என்பது திருஞானசம்பந்தப்பெருமான் அருள் வாக்கு. [பற்பம்-பாவங்களை நீறுக்குவது, பசிதம்—ஒளியைத் தருவது (ஒளி-ஞானம்), சாரம்-தடைகளை அறுப்பது, இரட்சை-காப்பது என்பதாம்.]

## விபூதியைத் தயாரித்தலும் அணிதலும்

பசுவின் சாணத்தை நெருப்பிலிட்டுத் தகித்தலால் உண்டாவது திருநீறாகும். நோய் உள்ளதும், அங்கக் குறைவான உடலையுடையதும், மிகப் பருத்த உடலையுடையதும், ஈன்றணிணியதும், மலடானதும், அருவருக்கத்தக்க பொருள்களை உண்ணுவதாயுமுள்ள பசுக்களின் சாணத்தால் விபூதியை ஆக்குதல் கூடாது. கன்றையுடையதும் உடல் நலம் பொருந்தியதுமான பசுவின் சாணத்தை மேலும் கீழும் நீக்கி நடுப்பகுதியினை எடுத்து உருட்டி உலர்த்தி உமி முதலியவற்றால் நன்கு மூடி நீறுக்கிப் பெறப்பட்ட விபூதியைப் புதுப்பாண்டத்தினுள்ளே இட்டு (மல்லிகை, முல்லை, பாதிரி, சிறுசண்பகம் முதலிய) சுகந்த பூக்களைப் போட்டு வைத்தல் வேண்டும்.

நல்ல வெண்மையான விபூதிதான் அணிதற்குத் தகுந்ததாகும். கருநிற விபூதியும், செந்நிற விபூதியும், புகைநிற விபூதியும், பொன்னிற விபூதியும் அணிதல் கூடாது. விபூதியைப் பட்டுப்பையிலேனும், சம்புடத்திலேனும் எடுத்து வைத்துக்கொண்டு அணிதல் வேண்டும்.

விபூதியை வடக்குமுகமாகவேனும், கிழக்குமுகமாகவேனும் இருந்துகொண்டு அணிதல் வேண்டும். நடந்துகொண்டாயினும் கிடந்துகொண்டாயினும் விபூதி அணிதல் ஆகாது. விபூதி அணியும் பொழுது நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து ' சிவ சிவ ' என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் அணிதல் வேண்டும். வாயைத் திறந்துகொண்டும், தலையைக் கவிழ்ந்துகொண்டும் விபூதியை அணிதல் ஆகாது. ஒருவிரலால் விபூதியை அணிதல் பெருங் குற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியாவந்தன காலங்களிலும், சூரியன் உதிக்கும்போதும், சூரியன் மறையும்போதும், நீராடியவுடனும், கடவுள் வழிபாட்டுக்கு முன்னும் பின்னும், துயில் கொள்ளுதற்கு முன்னும் பின்னும், மலசல மோசனஞ் செய்து சுத்திகரித்து ஆசமனம் ஆற்றிய பின்னும் விபூதி அணிதல் வேண்டும். 'நீறில்லா நெற்றி பாழ்' என்பது ஒளவையார் வாக்கு. நற்கருமங்கள் செய்யப்புகும்பொழுதெல்லாம் விபூதி அணிதல் தகும். அவ்வாறு தொடங்கிய கருமங்கள் இனிது முடிவுறும் என்பர்.

**விபூதி அணியும் முறை**

விபூதி அணியும் முறை உத்தூளனம், திரிபுண்டரம் என இருவகைப்படும். உத்தூளனம் என்பது பரவப் பூசுதல். திரிபுண்டரமாவது முக்குறிகளாகத் தரித்தல். (திரி-மூன்று ; புண்டரம்-குறி).

தலை, நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கை இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடங்களிலும் விபூதியைத் திரிபுண்டரமாகத் தரிக்கலாம். இங்ஙனம் திரிபுண்டரமாக விபூதியைத் தரிக்கும்போது நெற்றியில் இரண்டு கடைப் புருவ எல்லை நீளமும், மார்பிலும் தோள்களிலும் அவ்வாறங்குல நீளமும், மற்றைய இடங்களில் ஒவ்வோரங்குல நீளமும் பொருந்தத் தக்கதாக அணிதல் வேண்டும். குறிகளின் இடைவெளி ஒவ்வோரங்குல அளவினதாய் இருத்தல் வேண்டும். ஒன்றையொன்று தீண்டினும், மிக அகன்றிருப்பினும், வளைந்திருப்பினும், இடையில்லா விட்டாலும் நன்றன்று என்க.

சிவபெருமான் முன்னும், சிவாக்கினி முன்னும், ஆசாரியர் முன்னும் விபூதி தரிக்கலாகாது. தரிக்கவேண்டுமாயின் முகத்தைத் திருப்பி நின்று தரித்தல் வேண்டும். திருநீற்றின் சிறப்பும், தெய்வத் தன்மையும், மந்திர சக்தியும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிய திருநீற்றுப் பதிகத்தால் உணரலாம்.

'' மந்திரமாவது நீறு '' என்பதே திருநீற்றுப் பதிகத்தின் தொடக்கமாகும். திருநீற்றுப் பதிகம் பாடிப் பாண்டியனின் வெப்பு நோயை நீக்கிச் சைவப் பெருநெறியை வாழ்வித்த செயல் ஒன்றே திருநீற்றின் தெய்வத் தன்மையை நிலைநாட்டப் போதியதாகும். விபூதியை விதிப்படி அணிந்து ஒழுகுபவர்கள் இருவினைகளையும் வென்று, சிவ ஞானம் பெற்று, முத்தியடைவார்கள் என்பது வேதாகம முடிவாகும்.

'பராவணமாவது நீறு'

**உருத்திராக்கம்**

உருத்திராக்கம் சிவ சின்னங்களில் ஒன்று. (உருத்திரன் - சிவன் ; அக்கம்-கண்) ஆன்மாக்கள் படுகின்ற அல்லலைக் கண்டு இரக்கங் கொண்ட இறைவனின் கண்ணீர்த் துளிகளே உருத்திராக்கமாகும். 'தேவர்கள் திரிபுரத்து அசுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ் செய்துகொண்டபொழுது, திருக்கைலாசபதியினுடைய மூன்று திருக்கண்களினின்றும் தோன்றிய மணியே உருத்திராக்கம்'.

விபூதியானது சில வேளை வியர்வை, மழை முதலியவற்றால் மறைந்து போனாலும் உருத்திராக்கம் அவற்றால் மறைந்து போகாது.

சிவமந்திர செபம், சந்தியா வந்தனம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலய தரிசனம், சிவபுராண படனம், தேவார திருவாசக பாராயணம், விரதமனுட்டித்தல், சிராத்தம் செய்தல் முதலிய காலங்களில் உருத்திராக்கம் தரித்தல் வேண்டும்.

குடுமியிலும் பூணூலிலும் ஒவ்வொரு மணியும், தலையிலே இருபத்திரண்டு மணியும், காதுகளில் ஒவ்வொரு மணியும் அல்லது ஆறு ஆறு மணியும், கழுத்திலே முப்பத்திரண்டு மணியும், புயங்களிலே தனித்தனி பதினாறு மணியும், கைகளிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தனி பன்னிரண்டு மணியும், மார்பிலே நூற்றெட்டு மணியும் தரித்தல் வேண்டும். உருத்திராக்க மாலைகள் தரிக்கும் எல்லையளவு தானங்களுக்குத் தக்கதாய் இருக்கும்.

சைவசமயிகளாகிய நாம் சிவதீட்சை பெற்று, மேலே குறிப்பிட்ட பிரகாரம் சிவ சின்னங்களைத் தரித்தும், அணிந்தும், அருட் பெருஞ் சோதியாகிய சிவபெருமானது திருவடிகளை எய்துவோமாக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. கந்தவிரதம்

**விரதங்கள்**

சமயங்கள் தோறும் கடவுள் வழிபாட்டுத் தொடர்பைக் கைவரச் செய்வன விரதங்களேயாகும். விரதம், நோன்பு என்பன ஒருபொருட் சொற்கள். சைவ சமய விரதங்கள் சிவபெருமானைக் குறித்தும், உமாதேவியாரைக் குறித்தும் செய்யப்படுவனவாகும். சிவ பெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதங்கள் பேரின்பம் பயக்குவன. உமாதேவியாரைக் குறித்துக் கடைப்பிடிக்கும் விரதங்கள் உலகியற் சிறப்பினைத் தருவன. பிள்ளையார் கந்தசுவாமியாரின் விரதங்களும் உலகியற் சிறப்பினைத் தருவனவேயாகும்.

விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும், மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாகும்.

கந்தசுவாமியாருக்கு வெள்ளிக்கிழமையும், கார்த்திகை நாளும், சட்டித் திதியும் சிறந்தன. வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் எனக் கந்த விரதங்கள் மூன்றாகும்.

**வெள்ளிக்கிழமை (சுக்கிரவார) விரதம்**

இது ஐப்பசி மாதத்து முதல் வெள்ளிக்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமை தோறும் கந்தப் பெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும். இதில் உபவாசம் உத்தமம் ; அது கூடாதவர் இரவிலே பழம் முதலியன உட்கொள்ளக் கடவர்; அதுவுங் கூடாதவர் ஒரு பொழுது பகலிலே போசனம் பண்ணக் கடவர். இவ் விரதம் மூன்று வருட காலம் அநுட்டித்தல் வேண்டும்.

' எள்ளருஞ் சிறப்பின் மிக்க எழுவகை
வாரந் தன்னுள்
வெள்ளிநாள் விரதந் தானே விண்
ணவர் உலகம் காத்த
வள்ளல்தன் விரத மாகும் மற்றது
புரிந்த மேலோர்
உள்ளமேல் நினைந்த எல்லாம் ஒல்லை
யின் முடியும் அன்றே '.

என்று இவ்விரதத்தைப் பற்றி கந்தபுராணம் கூறுகிறது.

**கார்த்திகை விரதம்**

இது கார்த்திகை மாசத்துக் கார்த்திகைநாள் முதலாகக் கார்த்திகை நாள்தோறும் கந்த சுவாமியாரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம் உத்தமம் ; அது கூடாதவர் பழம் முதலியன இரவில் உட்கொள்ளக் கடவர். இவ் விரதம் பன்னிரண்டு வருடகாலம் அநுட்டித்தல் வேண்டும்.

குறிப்பு: சரவணப்பொய்கையிலே தோன்றியருளிய சிவபெருமானின் திருக்குமாரராகிய முருகப்பெருமானைக் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்தனர். சிவபெருமான் அவர்களுக்கு அருள்பாலிக்கத் திருவுளங்கொண்டார். '' நம்முடைய மகன் உங்களால் வளர்க்கப்பட்டபடியால் கார்த்திகேயன் என்ற பெயரையும்பெறக் கடவன். இன்னும் கார்த்திகையாகிய உங்கள் நாளிலே எனது குமாரனை மெய்யன்போடு வழிபடும் எவருக்கும் மேன்மைகளைக் கொடுப்போம் '' என்றுஅவர்களுக்கு உரைத்தருளினார்.

**கந்த சட்டி**

இது ஐப்பசி மாதத்திலே அமாவாசைக்குப்பின் வரும் பிரதமை முதல் சட்டியீறாகிய ஆறு தினங்கள் கந்த சுவாமியாரைக்



4—13351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து அநுட்டிக்கும் விரதமாம். கந்தசுவாமியார் சூரனைச் சங்கரித்து அவனுக்கும் யாவர்க்கும் அருள் புரிந்த தினம் சட்டி. சட்டி என்பது ஒரு திதி. அமாவாசை, பூரணையின் பின்னர் வரும் ஆறும் நாள்.

தேவர்கள் துயர்தீர்த்தற்பொருட்டுக் கந்தப் பெருமான் சூரனோடு போர் தொடங்கி ஆறும் நாள் அவனைத் தமது வேலாயுதத்தினுற் பிளந்து கொன்ருர். பிளவுபட்ட கூறுகள் அவர் அருளினுல் மயிலும், சேவலுமாக வர அவற்றை முறையே வாகனமுங் கொடியுமாகக் கொண்டருளினுர். சூரனுலே துயரடைந்த தேவர்கள் எம்பெருமானைப் போற்றித் துதித்து நற்பேறடைந்தனர். இநத ஆறு தினங்களும் உபவாசமிருந்து முருகன் புகழ் மாலைகளைப் பாராயணஞ் செய்தும், புராணங் கேட்டும் முறைப்படி விரதமநுட்டிப்பவர்கள் முருகன் அருள் பெறுவர். அங்ஙனம் உபவாசமிருப்பதே உத்தமம். உபவாசமிருக்க இயலாதவர்கள் முதலைந்து நாளும் ஒவ்வொரு பொழுது உண்டு சட்டியில் உபவாசஞ் செய்யக் கடவர். இவ்விரதம் ஆறு வருடகாலம் அநுட்டித்தல்வேண்டும். மாசந்தோறும் சுக்கிலபட்ச சட்டியிலே கந்தசுவாமியாரை வழிபட்டு மா, பழம், பால், பானகம், மிளகு என்பவைகளுள் இயன்றது ஒன்று உட்கொண்டு வருவது உத்தமம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. திருஞானசம்பந்தர்


பாகம் I

சோழநாட்டிலே சீர்காழிப் பதியிலே மறையவர் குலத்திலே சிவபாத விருதயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் பெயர் பகவதியார். இருவரும் செய்த தவத்தின் பேறாய்ப் பிறந்த குழந்தைக்கு ஆளுடையபிள்ளையார் எனப் பெயரிட்டனர்.

குழந்தை வளர்ந்து மூன்றும் வயதினை எய்தியது. அப்பொழுது ஒருநாள் சிவபாதவிருதயர் தோணியப்பர் கோயிலுக்குச் செல்லும்போது பிள்ளையாரையும் உடன் கூட்டிச் சென்றார். கோயிலினுள்ளே பிரமதீர்த்தம் என்னும் திருக்குளத்தின் அருகே பிள்ளையாரை இருத்தித் தாம் திருக்குளத்திலே இறங்கி நீராடினார். அவர் நீரினுள்ளே மூழ்கி நீராடிய போது தந்தையைக் காணாத குழந்தை திருக்கோயிற் கோபுரத்தை நோக்கி " அம்மே ! அப்பா ! " என்று அழைத்தழுதது

அவ்வழுகைக் குரல் கேட்டுத் தோணியப்பரும் உமாதேவியாரும் எழுந்தருளினர். உமாதேவியார் தம்முடைய முலைப்பாலைப் பொன் வள்ளத்திலே கறந்து ஊட்டியருளினார். அன்று தொட்டுப் பிள்ளையார் திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் பெயரும் உடையவராயினார்.

நீராடிவிட்டுக் கரையிலேறிய சிவபாத விருதயர் நிகழ்ந்ததொன்றும் அறியார். தம் குழந்தையின் வாயிலே பால் வடிந்திருந்ததைக் கண்டு, " நீ யார் தந்த பாலை உண்டாய்? " என்று கோபித்தார். "எச்சிற் பட உனக்கு இப்பாலைத் தந்தவரைக் காட்டு " என்று சொல்லி ஒரு சிறு கம்பு கொண்டோச்சினார். குழந்தை ஆகாயத்திலே இடபவாகனத்திலே எழுந்தருளியிருந்த பரமசிவனையும் உமாதேவியாரையும் சுட்டிக் காட்டித் " தோடுடைய செவியன் " என்ற திருப்பதிகத்தைப் பாடியது.




சிவபாதவிருதயர் ஆநந்தக் கூத்தாடி, முன்னே கோயிலினுட் சென்ற பிள்ளையாருக்குப் பின்னே சென்றார். பிள்ளையார் திருத்தோணியில் வீற்றிருந்தருளிய சிவபிரானையடைந்து திருப்பதிகம் பாடி மீண்டார். சிவபாதவிருதயர் பிள்ளையாரை எடுத்துத் தோளின் மேலே வைத்துக் கொண்டு தம்முடைய திருமாளிகையையடைந்தார்.

பிள்ளையார் மற்றை நாள் திருக்கோலக்கா என்னும் திருப்பதியையடைந்தார். அங்கே கையினாலே ஒத்தறுத்துத் திருப்பதிகம் பாடத் தொடங்கினார். அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது சிவபெருமானுடைய திருவருளினாலே திருவைந்தெழுத்து எழுதப்பட்ட பொற்றாளம் பிள்ளையார் திருக்கையிலே வந்திருந்தது.



திருநீலகண்டப் பெரும்பாணர் என்பவர் பிள்ளையாரைத் தரிசிக்கும் பொருட்டு விறலியாரோடு யாழ்கொண்டு சீகாழியிலே வந்துசேர்ந்தார். பிள்ளையார் பாடும் திருப்பதிகத்தினிசைகளை யாழிலே இட்டு வாசித்துக்கொண்டு என்றுமகலாத நட்புடனிருந்தார்.

பிள்ளையார், திருநீலகண்டப் பெரும்பாணரின் விருப்பத்துக்கிசைந்து அவர் திருவவதாரஞ் செய்த திருவெருக்கத்தம்புலியூருக்கும் பின்பு திருமுதுகுன்றம் திருநெல்வாயிலரத்துறை முதலாய தலங்கட்கும் சென்றார். திருநெல்வாயிலரத்துறையில் சிவபெருமான் தம்முடைய திருக்குமாரர் ஏறுதற்கு முத்துச் சிவிகையும், அவருக்கு நிழற்றுதற்கு முத்துக் குடையும், ஊதுதற்கு முத்துச் சின்னங்களும் கொடுத்தருளினார்.

திருப்பாச்சிலாச்சிரமத்திலே இருந்த கொல்லிமழவன் என்பானின் புதல்வி முயலகன் என்னும் நோயினால் மிகவருந்துவதைத் திருக்கோயிலிற் கண்ணுற்ற பிள்ளையார் அவளுக்கிரங்கித் " துணிவளர் திங்கள் " என்னுந் திருப்பதிகத்தைப் பாடி மங்கையின் நோயை நீக்கியருளினார்.

பின்பு பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருச்செங்குன்றூரிலே எழுந்தருளியிருக்கும்பொழுது பனிக்காலம் வரக் குளிர் மிகுந்தது. அப்பொழுது பிள்ளையாருடைய பரிசனங்கள் குளிர்சுரத்தினால் வருந்தினார்கள். அவர்களது நோயை " அவ்வினைக் கிவ்வினை " என்னும் பதிகம் பாடி நீக்கியருளினார்.

சுவாமிகள் திருவாவடுதுறையிலே சுவாமி தரிசனஞ் செய்து " இடரினுந் தளரினும் " என்னும் திருப்பதிகம் பாடித் தந்தையார் செய்ய விரும்பிய யாகத்துக்கு ஆயிரம் பொன் கொண்ட ஒரு கிழியைப் பெற்றுக் கொடுத்தார்.

திருநீலகண்டப்பெரும்பாணரோடு திருத்தருமபுரத்தை யடைந்த சுவாமிகள் " மாதர் மடப்பிடியும் " என்னும் திருப்பதிகத்தைப் பாடத் தொடங்கினார். பாணர் அத்திருப்பதிக இசையைத் தம் யாழிலே அமைத்து வாசிக்க முயன்றபோது அது அமையாமை கண்டு துன்புற்று யாழை உடைக்கும்படி ஓங்கினார். உடனே பிள்ளையார் பாணரைத் தடுத்தருளி யாழை வாங்கி " ஐயரே ! இந்த யாழை முறிப்பதென்னை ! இந்த யாழைக்கொண்டே சுவாமியினுடைய திருப்பதிக இசையை இயன்ற மட்டும் அமைத்து வாசியும்" என்று சொல்லி யாழைக் கொடுத்தருளினார்.


சில நாட்கழியத் திருநள்ளாறு சென்றடைந்து திருக்கோயிலிற் சென்று " போகமார்த்த பூண்முலையாள் " என்னும் திருப்பதிகம் பாடி, அதனை யாழிலே இட்டு வாசிக்கும்படிப் பெரும்பாணரைப் பணித்துத் தாந் திருத்தாளங்கொண்டு பாடி மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் பிள்ளையார் அயவந்திநாதரை வணங்கும் பொருட்டுச் சாத்தமங்கைக்கு எழுந்தருளினுர். அங்கே தம்மை எதிர்கொண்டு வணங்கிய திருநீலநக்க நாயனுரோடு திருக்கோயிலினுட் சென்று சுவாமி தரிசனஞ்செய்து திருநீலநக்கருடைய திருமாளிகைக்குப் போய்த் திருவமுது செய்தார். பிள்ளையார் அன்றிரவிலும் அங்கேதானே திருவமுது செய்து திருநீலநக்க நாயனுரை அழைத்து ''திருநீல கண்டப் பெரும்பாணருக்கும் விறலியாருக்கும் இன்று தங்குதற்கு ஓரிடம் கொடும்'' என்று சொல்லியருளினுர். திருநீலநக்கநாயனுர் தம்வீட்டுக்கு நடுவேயிருக்கின்ற வேதிகையின் பக்கத்திலே இடங்கொடுத்தார். பெரும்பாணர், அவ்விடத்திலே வேதிகையிலுள்ள நித்தியாக்கினி வலஞ்சுழித்து ஓங்கி முன்னையிலும் சிறந்து பிரகாசித்து, 'வருணமன்று பத்தியே மகிமை தருவது', என்பதை விளக்கவும் அது கண்ட திருநீலநக்க நாயனுர் மகிழ்ச்சியடையவும் விறலியாரோடு நித்திரை செய்தார்.

திருமருகலிலே தங்கியிருந்தபொழுது, ஒரு வணிகன் கன்னி ஒருத்தியை உடன்



கொண்டு கோயிலுக்குப் புறத்திலே ஓர் இரவு நித்திரை செய்தான். அப்போது பாம்பினுலே தீண்டப்பட்டு இறந்தான். சமீபத்திலே வீழ்ந்துபுரண்டழுத கன்னியின் துயரை நீக்கத் திருவுளங் கொண்டு சுவாமிகள் '' சடையா யெனுமால் '' என்னுந் திருப்பதிகம் பாடினுர். உடனே வணிகன் விடந் தீர்ந்து எழுந்து பிள்ளையாரை வணங்கி நின்முன்.

திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையைச் சென்றடைந்து மழையின்மையினுலே மக்கள் பசியால் வாடுவதைக் கண்டார். உடனே இறைவனை வேண்டிப் படிக்காசு பெற்றுப் பஞ்சத்தால் வாடிய அம்மக்களுக்கு உணவளித்து வந்தனர்.

பாகம் II

தலங்கள் பலவற்றையுந் தரிசித்துக் கொண்டு திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக்காட்டுக்கு வந்தனர். அங்கே அடியார்கள் திருக்கதவை நீக்கி, வேருேர் வாயிலிட்டு அதன் வழியே செல்கின்முர்கள் என்பதைக் கேட்டறிந்தார்கள். பிள்ளையாரின் விருப்பப்படி அப்பர் திருப்பதிகம்பாடி அடைத்திருந்த கதவைத் திறப்பித்தார். இருவரும் அதன் வழியே சென்று சுவாமி தரிசனஞ் செய்தனர். பின் பிள்ளையார் '' சதுரம் மறை '' என்ற திருப்பதிகம் பாடித் திருக்கதவு அடைக்கச் செய்தார்.

அங்கிருந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் பாண்டிமாதேவியும் மந்திரி குலச்சிறையாரும் அனுப்பிய வேண்டுகோளுக்கிணங்கிப் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளினுர்.

பாண்டிமாதேவியும் மந்திரியாரும் சுவாமிகளை எதிர்கொண்டு வரவேற்றனர். சுவாமிகள் மதுரைக்கு வந்ததைக் கேள்வியுற்ற சமணர் அச்சங்கொண்டனர். பாண்டியனின் இசைவோடு பிள்ளையார் இருந்த திருமடத்திற்குத் தீ வைத்தனர். அதனைக் கண்ட பிள்ளையார் '' செய்யனே திருவாலவாய் மேவிய '' என்று தொடங்கிப் '' பொய்யராஞ் சமணர்கொளுவுஞ் சுடர் பையவே சென்று பாண்டியற் காகவே '' என்று பதிகம் பாடத் தீ அவிந்து பாண்டியனைச் சென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றடைந்தது. அதனாற் பாண்டியனுக்கு வெப்புநோய் உண்டாயது. சமணர்கள் தமது மந்திர தந்திர மருந்துக்களால் முயற்சி செய்தும் நோயைத் தணிக்க முடியவில்லை. அப்பொழுது மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாரும் வேண்டிக் கொண்டபடி சுவாமிகள் அரமனைக்கு எழுந்தருளினார். எழுந்தருளி "மந்திரமாவது நீறு" என்ற திருப்பதிகம் பாடி மன்னன் உடம்பிலே திருநீறு தடவினார். உடனே மன்னனை வருத்திய வெப்பம் நீங்கிற்று.

இங்ஙனம் சுரவாதத்திலே தோற்ற சமணர், சுவாமிகளை அனல் வாதத்துக் கழைத்தனர். "இரு சமயத்தவருந் தத்தஞ் சமயவுண்மைகளை ஏட்டில் எழுதித் தீயிலிட வேண்டும். எவருடைய ஏடு எரியாமற் பச்சென்றிருக்கின்றதோ அவருடைய சமயமே மெய்ச்சமயம், என்று கொள்ளலா"மென்றனர். பிள்ளையார் "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் பதிகம் எழுதிய ஏட்டை நெருப்பிலிட்டார். அது வேகாது பசுமையாய் இருக்கச் சமணர்கள் இட்ட ஏடு எரிந்து சாம்பராயிற்று.

இவ்வாறு அனல் வாதத்திலே தோற்ற சமணர் சுவாமிகளை விடாது, புனல் வாதத்துக்குமிழுத்தனர். இருசமய உண்மைகளையும் ஏட்டில் எழுதி அவற்றை ஆற்றிலிடுவது என்றும், எவருடைய ஏடு எதிரேறுகின்றதோ அவருடைய சமயமே மெய்ச்சமயம் எனக் கொள்வது என்றும் உடன்பட்டனர். சமணர் தம்மந்திரம் எழுதிய ஏட்டை ஆற்றிலிடச் சுவாமிகள் "வாழ்க அந்தணர்" என்ற திருப்பதிகத்தை எழுதியிட்டார். சமணர்களுடைய ஏடு ஆற்றோடு சென்றது. சுவாமிகளிட்ட ஏடு ஆற்றைக் கிழித்துக்கொண்டு எதிரே செல்லதைக் கண்ட மன்னனும் மற்றோரும் வியப்புற்று மகிழ்ச்சியடைந்தனர். அப்பாசுரத்தில் "மன்னனும் ஓங்குக" என்று பாடப்பட்டமையாற் பாண்டியன் தன் கூனிமிர்ந்து நின்றசீர் நெடுமாறன் என்னும் பெயரைப் பெற்றான்.

திருமயிலாப்பூரிலே சிவநேசர் என்னொருவர் திருநெறிச் செல்வர் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பூம்பாவை என்னொரு அருமைப் புதல்வி இருந்தாள். ஒரு நாட் பூம்பாவை பூக்கொய்யும் போது பாம்பு தீண்டி இறந்தாள். மனம் மிகவருந்திய சிவநேசர் உடலைத் தகனஞ் செய்து பிள்ளையார் வருமளவும் எலும்பையுஞ் சாம்பரையுஞ் சேமித்து வைத்திருந்தார்.

திருமயிலாப்பூருக்கு எழுந்தருளிய பிள்ளையார் பூம்பாவையின் என்பிட்ட குடத்தைத் திருக்கோயிலின் புறத்தே கொணரச் செய்து "மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை" என்று தொடங்கிப் "பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்" என்று பாடியருளினார். உடனே குடமுடையப் பூம்பாவை பன்னிரண்டு வயதுப் பாலியப் பெண்ணாக வெளித் தோன்றிச் சுவாமிகளின் திருவடியை வணங்கினாள்.


பிள்ளையார் பதினாறு வயதெய்தியதும் மணஞ் செய்தருளுதற்கு அதுவே பருவம் என எண்ணிய சிவபாதவிருதயருஞ் சுற்றத்தாரும் அவரை அணைந்து "தேவரீர் திருமணஞ் செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். தந்தையாரும் பிறரும் பிள்ளையாருக்கு மனைவியாதற்குத் தகுதியுடையவர் திருநல்லூரிலிருக்கின்ற நம்பாண்டார் நம்பியின் புதல்வியாவாள் எனத் துணிந்துகொண்டனர்.

குறித்த நாளிலே திருப்பெருமண நல்லூரிலே திருநீலநக்க நாயனார் வேத விதிப்படி சடங்கு செய்ய, திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருமங்கலியத்தைச் சாத்திச் சிவாலயத்தினுள்ளே செல்லக் கருதி, வேத விதிப்படி வளர்க்கப்பட்ட தீயை வலஞ் செய்து "திருநல்லூர்ப் பெருமணத்திலே எழுந்தருளியிருக்குங் கடவுளே! தேவரீருடைய திருவடிகளையடையும் பதம் இது" என்று கூறிக் "கல்லூர்ப் பெருமணம்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது சிவபெருமான் ஒரு அழகிய சோதி வடிவமாகி அச்சோதிக்கு ஒரு திருவாயிலை வகுத்துக் காட்டியருளினார். காட்டியதும் பிள்ளையார் " காதலாகிக் கசிந்து " என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருள, அங்கிருந்த அனைவரும் அதனுட் சென்றனர். ஈற்றில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக் கொண்டு அந்தச் சோதியை வலம் வந்து அதனுள்ளே புகுந்து பேரின்பப் பெருவாழ்வடைந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## தேவாரம்

### 1. கோளறு பதிகம்

அப்பருஞ் சம்பந்தருந் திருமறைக் காட்டிலே சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு தங்கியிருந்தார்கள். அப்பொழுது மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் அனுப்பிய தூதர்கள் வந்து, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை வணங்கி, "ஐயனே சமணர்களாலே பாண்டிநாட்டிற் சைவசமயம் சீர்குலைந்துவிட்டது; மன்னனும் அவர் வசப்பட்டான். இந்நிலையைத் தங்களுக்குச் சொல்லுமாறு பாண்டிமாதேவியும் மந்திரியாரும் எங்களை அனுப்பினர்" என்றனர். அதுகேட்டு அங்கு நின்ற சிவனடியார்கள் "சுவாமி, தேவரீர் பாண்டி நாட்டிற்கு எழுந்தருளி, சைவ சமயத்தை நிலைநாட்டி, மன்னனையும் மக்களையும் உய்விக்கவேண்டும்" என்று வேண்டினார்கள். நாயனாரும் அதற்கு உடன்பட்டார்.

பின்பு இச்செய்தியை நாயனார் அப்பமூர்த்திக்குச் சொல்லியருளினார். அதுகேட்ட அப்பமூர்த்தி, "சமணர் வெகு வஞ்சகர். நீரோ சிறுபிள்ளை; இப்பொழுது கோளும் நாளும் வலியில; செல்லவேண்டாம்" என்று தடுத்தார். அப்பொழுது சம்பந்தப்பெருமான் "மெய்யடியார்களுக்கு நாளுங் கோளும் என்றும் நல்லவை" என்ற கருத்தைக் கோளறுபதிகம் பாடி வெளியிட்டார். இது அப்பதிகத்தில் முதற்பாட்டு.

பண். பியந்தைக் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட
கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே
லணிந்தென் உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியா
ழன் வெள்ளி சனிபாம் பிரண்டு
முடனே
ஆசறு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

திருச்சிற்றம்பலம்

மூங்கில் போலப் பசிய திரண்ட தோள்களையுடைய உமையம்மையை இடப்பாகத்திற் கொண்டவரும், ஆலகால விடத்தை உண்டு மிடற்றில் அடக்கியவருமான பரமசிவன் (உலகங்களின் சிருட்டி காரணமாக) மிகநல்ல வீணையை வாசித்து, குற்றமற்ற சந்திரனையும் கங்கா நதியினையுஞ் சடைமுடியிலே தரித்த கோலத்தை உடையவராய், என் உள்ளங் கவர்கள்வனாய்ப் புகுந்திருப்பதனால், சூரியன் முதலிய ஒன்பது கிரகங்களுங் குற்றமற்றனவாகும்; தீங்கு செய்யா. இன்னும் அவை என்னுடன் வரும் அடியார்க்கும், அங்கேயுள்ள அடியார்க்கும் நல்லனவாய் அநுகூலஞ் செய்வனவேயாகும்.

வேய் - மூங்கில்; மாசு - (தக்கனால் சந்திரன் எய்திய சாபக்) குற்றம்; ஆசு - குற்றம்.

### 2. திருவாலவாய்ப் பதிகம்

பாண்டிய மன்னன் வெப்பு நோயால் வருந்தினான். அப்பொழுது மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் நாயனாரை மன்னனின் நோயைத் தீர்த்தருளுமாறு வேண்டினர். நாயனாரும் இசைந்து அரமனைக்கு எழுந்தருளினார். அங்கிருந்த சமணர் ஆரவாரித்து அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிற்கு அழைத்தனர். அதுகண்டு மங்கையர்க்கரசியார் அஞ்சினூர். அவருடைய அச்சத்தைத் தீர்த்தற் பொருட்டு நாயனூர் இத்திருப்பதிகத்தைப் பாடியருளினூர்.

பண் : கொல்லி.

திருச்சிற்றம்பலம்

மானினேர்விழி மாதராய்வழு திக்கு
மாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்
றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய விடங்களிற்
பல வல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்றிரு வால
வாயர னிற்கவே.

திருச்சிற்றம்பலம்

மானின் கண்களையொத்த கண்களையுடைய பெண்ணே ! பாண்டிய மன்னனின் கோப்பெருந்தேவியே ! யான் கூறுவனவற்றைக் கேட்பாயாக. இங்கு வந்திருப்பவன் பால்மணம் மாருத வாயையுடைய சிறுவன் என்று நீ அஞ்ச வேண்டாம். மதுரை நகரிலுறையுஞ் சொக்கநாதப்பெருமான் எனது உள்ளத்தும் புறத்துந் துணை நிற்கின்ருன். அப்படியிருக்க, ஆனைமலை முதலாகவுள்ள இடங்களில் வாழும் பல துன்ப வாழ்க்கையுடைய இழிந்தவர்கள் முன் நான் தாழ்வடையேன்.

மானின் நேர்விழி - மருளுந்தன்மையால் மாதர்விழிக்கு மான்விழி உவமை. வழுதி — பாண்டியன். பானல்வாய் (பால் + நல் + வாய்) பால்மணம் மாருதவாய். பரிவு - இரக்கம். எய்திடேல் - அடையாதே. அல்லல் - துன்பம்.

### 3. பஞ்சாக்கரத் திருப்பதிகம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனூருக்குப் பூணூற்சடங்கு செய்யவேண்டிய காலம் வந்தது. சிவபாதவிருதயர் சிறந்த வேதியர்களைக்கொண்டு வேத விதிப்படி பூணூற் சடங்கு செய்வித்தார். வேதியர் " உமக்கு வேதத்திற்கு அதிகாரந் தந்தோம் " என்று சொல்லி மந்திரோபதேசஞ் செய்யப் புகுந்தனர். அப்பொழுது நாயனூர் வேதங்களை ஓதி அவற்றின் அங்கமாகிய பல கலைகளையும் எடுத்துச் சொல்லியருளினூர். வேதியர் நாயனூர் இறைவன் திருவருள் பெற்றமையை நினைந்து வியந்தனர். தமக்கு வேதங்களிலேயுள்ள ஐயப்பாடுகளை நாயனூரிடம் கேட்டு விளங்கிக்கொண்டனர். பின், எல்லா மந்திரங்கட்கும் வித்து திருவைந்தெழுத்தே என்று வேதியருக்கு உணர்த்தும் பொருட்டுப்பாடிய திருப்பதிகமே பஞ்சாக்கரத்திருப்பதிகமாகும்.

திருச்சிற்றம்பலம்

பண் : காந்தாரபஞ்சமம்.

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன வஞ்செ ழுத்துமே

திருச்சிற்றம்பலம்

கரவில்லாத மெய்யன்போடு (மார்க்கண்டேயர் சிவலிங்கப்பெருமானது) திருவடிகளைத் துதிக்க, உயிர் கவர வந்த கூற்றுவன் அஞ்சி மடிய உதைத்துக் காத்தது திருவைந்தெழுத்தேயாம். ஆதலினூலே, உறங்கும்பொழுதும் விழித்திருக்கும்பொழுதும் உள்ளம் அன்பினூலே கசிந்துருகத் திருவைந்தெழுத்தைத்தினமும் நினைந்து உய்வீராக.

நெஞ்சகம் - மனம், உள்ளம். நைந்து- கசிந்துருகி. போழ்து-பொழுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. திருநாவுக்கரசு நாயனார் I

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வாழ்ந்து வந்த சைவவேளாள மரபினராகிய புகழனாரும் அவர் தம் மனைவி மாதினியாரும் செய்த புண்ணியப் பயனாகத் திலகவதியாரும் மருணீக்கியாரும் பிறந்தருளினார்கள்.

மருணீக்கியார் பிறந்து சிறிது காலத்தின் பின்பு பெற்றோர் இருவரும் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர். திலகவதியாரைத் திருமணஞ் செய்யவிருந்த கலிப்பகையார் என்பவரும் போர்க்களத்திலே இறந்துவிட்டார். இனி இருந்து என்ன பயன் என்று எண்ணித் திலகவதியாரும் இறக்க விரும்பினார். அந்நிலையில் தம்பியார் இருத்தலை விரும்பித் தாம்வாழ வேண்டுமென்று எண்ணி இறத்தலைத் தவிர்த்து வாழலானார்.

மருணீக்கியார் சமணர்களுடைய சமய போதனையால் மனங் கவரப்பட்டுச் சமண சமயத்திற் சேர்ந்தார். சமண சமய நூல்களையெல்லாம் நன்கு கற்றுத் தருமசேனர் என்னும் அவர்களிட்ட பெயரைத் தாங்கிச் சமணர்களுக்குத் தலைவராக விளங்கினார்.

தம்பியாரின் இந்நிலையைக் கண்டு வருந்திய திலகவதியார் திருவதிகை என்னும் சிவத்தலம் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் திருவீரட்டானேசுரருக்குச் சரியைத் தொண்டுகளெல்லாஞ் செய்து வணங்கினார். தம்பியாரின் நிலைக்கு இரங்கி "அவரை நல்வழிப்படுத்துக" என்று இறைவனை வேண்டி வருவாராயினர். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் சிவபெருமான் மருணீக்கியாரை ஆட்கொள்ளத் திருவுளங் கொண்டு அவரிடம் சூலை நோய் உண்டாகச் செய்தார்.

கொடிய சூலை நோய் தமது குடரைப் பிடித்து முடக்கி வருத்த மருணீக்கியார் அதனைத் தாங்கொணாது துன்புற்றார். சமணர்களுடைய தந்திர மந்திர மருந்துகளால் எவ்வித சுகமும் உண்டாகவில்லை. அதனால் அவர் மறைவாகத் தமக்கையாரைச் சென்றடைந்தார். தஞ்சமென வந்தடைந்த தம்பியாரை தமக்கையார் அணைத்து அன்பு காட்டினார். அவருக்குத் திருநீற்றையெடுத்துத் திருவைந்தெழுத்தையோதித் தரித்துத் சிவசந்நிதியிற் கொண்டுபோனார். அங்கே மருணீக்கியார் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று தொடங்கித் தேவாரம் பாடச் சூலை நோய் முற்றாக நீங்கிவிட்டது.

இறைவனை நோக்கிய அருட் பாடல்களை இனிமையாகப் பாடப் பெறும் திருவாக்குடைமையின் இவருக்குத் திருநாவுக்கரசர் என்னும் சிறப்புப் பெயர் சிவபெருமானால் வழங்கப்படுவதாயிற்று.

இவர் சமணசமயத்தைத் துறந்து மீண்டும் சைவராயினமையை யறிந்த பாடலிபுத்திரத்துச் சமணர்கள் தம் மன்னனிடஞ் சென்று முறையிட்டனர். அவனும் மிக வெகுண்டு நாவுக்கரசரை அழைத்துவர அமைச்சரை அனுப்பினான். அரசன் கட்டளையைத் திருவதிகைக்குச் சென்று அறிவித்த அமைச்சர்களைப் பார்த்து, "நாமார்க்குங்குடியல்லோம்" என்ற திருத்தாண்டகத்தைப் பாடி அரசனிடஞ் செல்ல மறுத்தார். பின்னர் ஒருவாறு மனம் உடன்பட்டுச் சென்றார்.

அரசனிடஞ் சென்ற நாயனாரை அவன் துன்புறுத்த நினைத்தான். சமணர்களின் துர்ப் போதனையாற் பல்லவ் வேந்தன் நாயனாரை நீற்றறையில் இடக் கட்டளையிட்டான். "மாசில் வீணையும்" என்ற தேவாரத் திருப்பதிகத்தைப் பாடித் துன்பம் சிறிதுமின்றி மகிழ்ந்திருந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுநாட் கழியச் சமணர்கள் நீற்றறையைத் திறந்து பார்த்தார்கள். அப்போது அவர் முன்னிலும் நலமடைந்திருந்தமையைக் கண்டார்கள்; கோப




மும் அச்சமுங் கொண்டார்கள்; நாயனாரை எப்படியேனும் கொல்ல வேண்டுமென்று அவருக்கு விடம் கலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தார்கள். ''நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கே'' என்று தொடங்கித் தேவாரம் பாட, அஃது அமுதமாக, அதனை உண்டு தீங்கின்றியிருந்தார்.

இதனைக் கண்டு பொறுக்காத சமணர்களும் அரசனும் நாயனாரைக் கால்களால் இடறிக் கொல்லும்படி பட்டத்து யானையை ஏவிவிட்டார்கள். அப்போது நாயனார், ''சுண்ண வெண் சந்தனச் சாந்தும்'' என்று தொடங்கும் தேவாரத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். அப்போது அவ்யானை நாயனாரை வலம் வந்து வணங்கிச் சென்று அருகே நின்ற சமணர்களைக் கொன்றழித்தது.



கோபாவேசங் கொண்ட பல்லவ மன்னன் சமணர்கள் கூறியபடி நாயனாரைக் 'கற்றூணிற் கட்டிக் கடலில் இடுக' என்றான். அப்போது திருநாவுக்கரசர் அமைதியாகவும் இனிமையாகவும்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொற்றுணை வேதியன்'' என்னும் நமச் சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளி ஞர். உடனே அக்கற்றூணே தெப்பமாக, அவர் திருப்பாதிரிப்புலியூரைச் சென் றடைந்தார். அன்று தொடக்கம் அவர் சிவத்தலங்களை வழிபடுதல், தேவாரப் பதிகங்களைப் பாடுதல் முதலாய சிவ தொண்டுகளை மேற்கொண்டார்.

## திருநாவுக்கரசு நாயனுர் II

ஆளுடைய அரசு தமது திருத்தல யாத்திரையிலே திருத்தூங்கானை மாடம் என்னும் தலத்தையடைந்தபோது இறை வனை நோக்கி '' இழிவினையுடைய சமண சமயத்திற் சில காலம் நான் இருந்தமை யால் இவ்வுடம்பு மாசடைந்து விட் டது. அம்மாசு நீங்க என்னுடலிலே தேவரீருடைய இலச்சினைகளாகிய சூலத் தையும் இடபத்தையும் பதிய வைக்க வேண்டும்'' என்று கூறிப் '' பொன்னுர் திருவடிக்கு... '' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினுர். உடனே திருத்தூங்கானை மாடத்துறையும் சிவக் கொழுந்தின் திருவருளால் ஒரு சிவபூதம் தோன்றி அவரது திருத்தோளிலே குறி களைப் பொறித்துச் சென்றது.

நாயனுர் திங்களூர் என்ற புண்ணியம் மிக்க தலத்துக்குச் சென்றபோது அங்கே யுள்ள கிணறு, குளம், மடம், தண்ணீர்ப் பந்தல் முதலாய எல்லாவிடங்களிலும் திருநாவுக்கரசர் என்ற பெயர் பொறித்தி ருப்பதைக் கண்டார். இங்ஙனம் செய்தது அப்பூதியடிகள் என்னும் அந்தணுளர் என அறிந்து அவர் இல்லத்துக்கு எழுந் தருளினுர். அங்கே அடிகள் தம் மனைவி மக்களோடு நாயனுரை வரவேற்று வணங்கி, திருவமுது செய்யும்படி வேண் டிக் கொண்டார். திருவமுது சமைத் தான பின்னர் தன் அருமை மகனுகிய மூத்த திருநாவுக்கரசை அழைத்துத் '' தூயவர் இங்கு திருவமுது செய்யத் தோட்டத்துக்குப் போய் வாழைக் குருத் தரிந்து வா '' என்ருர். சிறுவனும் மனமிகமகிழ்ந்து ஓடிச் சென்று வாழை யிற் குருத்தரிந்தான். அவ்வேளை அவனை ஓர் அரவம் தீண்டிற்று. அவன் விரைவாக வீட்டுக்கு வந்து தாயாரிடம் வாழைக் குருத்தைக் கொடுத்து இறந்தனன். இதனையறிந்த நாயனுரும் மனைவியாரும் ''ஐயோ நாயனுர் இன்று இங்குத் திரு வமுது செய்யாரே '' என்றஞ்சினுர்கள். சவத்தை மறைத்து, அமுது செய்ய அவர்களை எழுந்தருள வேண்டுமென்று இரந்தார்கள். அப்போது நிகழ்ந்தவற் றை எல்லாம் திருவருளினுலே அறிந்து கொண்டார். இறந்த உடலைத் திங்க ளூர்த் திருக்கோயிலின் முன்னிலையிற் கொணர்வித்து,'' ஒன்றுகொலா மவர் சிந்தை ''என அடி எடுத்துப் பாடினுர். அப்போது சிறுவன் உணர்வு பெற்று எழுந்து அப்பர் சுவாமிகளை வணங்கி நின்ருன். மகிழ்ச்சி பொங்கி வழியும் மனத்தினராய அப்பூதியடிகளும் மனை வியும் மக்களும் வாகீசப் பெருந்தகைக் குத் திருவமுதளித்துப் பெருவாழ்வுப் பேறு கொண்டனர்.

அப்பர் சுவாமிகள் திருவீழிமிழலை யென்னும் தலத்துக்குச் சென்றிருந்த போது மழையின்மை காரணமாகப் பஞ் சமுண்டாக மக்கள் பெருந் துன்பமுற் ருர்கள். அதனைக் கண்டிரங்கித் திரு நாவுக்கரசருக்கும் உடனிருந்த திருஞான சம்பந்தருக்கும் திருவீழிமிழலை இறை வன் கனுவிற்ருேன்றி இருவருக்கும் பஞ் சம் நீங்கும்வரை நாடோறும் படிக்காசு கிடைக்கச் செய்தார். இருவரும் மக்க ளுக்கு உணவளித்துப் பஞ்சத்தைப் போக் கினுர்கள்.

நாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலியை வணங் கிக்கொண்டு கண்ணப்பர் முத்தியடைந்த திருக்காளத்திக்குச் சென்ருர். அங்கே பொன்முகலியாற்றில் நீராடி, மலையின் மேலேறிச் சுவாமியை வணங்கி அவருக் கருகில் நிற்கின்ற கண்ணப்ப நாயனு ருடைய திருவடிகளை வழிபட்டார். அப் போது அவருக்கு ஒரு விருப்பமுண்டா யது. திருக்கைலாயம் சென்று அங்கே இறைவன் இறைவியோடும் ஏனைய கண நாதர்களோடும் வீற்றிருந்து ஆன்ம கோடிகட்கு அருள்புரியும் திருக்கோலத் தைத் தம்கண்களாற் காண விழைந்தார்.

திருக்காளத்தி மலையினின்றும் நீங்கி வடக்கே திருக்கைலாய தரிசனஞ் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற பேராசையால் இராப் பகல் நடந்து சென்றார். அதனால் அவருடைய பாதங்கள் தேய்ந்தன. தேய்ந்தும் ஆசைமேலீட்டினால் அதனைக் கருதாது, தமது இரு கரங்களையும் கொண்டு தாவிச் சென்றார். அதனால் கைகள் அரைந்து கரைந்து சிதைந்தன. எனினும், ஆசை சிறிதும் குன்றுதலின்மையால், வெவ்விய கொடிய பருக்கைக் கற்கள் செறிந்து பரந்து கிடந்த வழியே மார்பினால் தவழ்ந்து சென்றார். மார்பும் கைகளும் தசை நைந்து இரத்தம் சிந்த, எலும்பு முறியப் பின் புரண்டு புரண்டு சென்றார். அதனால் உடம்பு முழுவதும் அரைந்து போகவும் திருக்கைலாயத்திலே பதிந்த அன்பின் உறுதியினால் மெல்ல அசைய முயன்றும், முடியாமல் வழியிற்றானே செயலற்றுக் கிடந்தார்.

அந்நேரத்திற் பரமசிவன் ஒரு முனிவர் வடிவங்கொண்டு அவர் முன்னிலையில் வந்து " திருக்கைலாயமலை மனிதர்களால் அடைதற்கு எளிதன்று; இனித் திரும்பி விடுதலே நன்று " என்றார். உடனே அப்பமூர்த்தி, " திருக்கைலாயகிரியிலுள்ள சிவபெருமானுடைய திருக்கோலத்தைத் தரிசித்தன்றி அநித்தியமாகிய இந்த உடம்பைக் கொண்டு திரும்பேன் " என்று மறுத்தார். அப்போது முனிவர் மறைந்தருள, " நாவுக்கரசனே எழுந்திரு " என்று ஆகாயத்தில் ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. உடனே நாயனார் உறுப்புக்களெல்லாம் முன்போல் நிரம்பப் பெற்றுச் சிறந்த திருமேனியோடு எழுந்தார். அப்போது பரமசிவன், " நீ இந்தத் தடாகத்திலே முழுகித் திருவையாற்றை யடைந்து, நாம் திருக்கைலாசத்திலிருக்குந் திருக்கோலத்தை அங்கே காண்பாய் " என்றார்.

அப்பமூர்த்தி அப்பணியைத் தலைமேற் கொண்டு தடாகத்தில் முழுகித் திருவையாற்றிலேயுள்ள ஒரு வாவியிலே தோன்றித் திருக்கோயிலைச் சென்றடைந்தார். அது திருக்கைலாய கிரியாக, அங்கே சிவபெருமானும் பார்வதி தேவியாரும் சிவகணங்கள் புடைசூழ வீற்றிருப்பதைக் கண்டார்; விழுந்து வணங்கினார். அக்காட்சியை " மாதர் பிறைக் கண்ணியானை " என்று தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தாற் பாடியருளினார்.

திருப்புகலூர் என்ற தலத்தில் ஆளுடைய அரசு எழுந்தருளியிருந்தபோது, சிவபெருமான் அவரது உழவாரப்படையின் மகிமையையும் அவரின் திருவுள்ளத்தில் நிலைபெற்ற சிவனடிமறவாச் சிந்தையையும், துறவின் தூய்மையையும் உலகோர் அறியச் செய்தார்.

வீடுபேறெய்தும் காலம் அணுகியவுடன், " எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ ...... புண்ணியா உன்



னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்னும் திருத்தாண்டகத்தைப் பாடித் தமது எண்பத்தொராவது வயசிலே, சித்திரை மாதத்துச் சதய நட்சத்திரத்திலே இறைவனின் திருவடி நீழலையடைந்து பேரின்பப் பெருவாழ்வு எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. திருநாவுக்கரசுநாயனர்

## தேவாரம்

### 1. திருவதிகை வீரட்டானம்

நாயனரின் சூலைநோய் தீர்த்த கூற்ரு யினவாறு என்று தொடங்கும்திருப் பதிகத்தில் உள்ளது.

பண்: கொல்லி

திருச்சிற்றம்பலம்

சலம்பூ வொடு தூபமறந் தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
உன்ன மமென்ன வில்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

திருச்சிற்றம்பலம்

கெடிலநதிக் கரையிலுள்ள திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் பெருமானே, அடியேன் நீரும் பூவுந் தூபமுங் கொண்டு தேவரீரை வழிபடுதலை மறந் தேனல்லேன்; தமிழ்ப்பாட்டுக்களினல் உமது புகழைப் பாடுவதை மறந்தேனல் லேன்; நன்மை வந்தடைந்தபோதுந் தீமை வந்துற்றக்காலும் உம்மை மறந் தேனல்லேன்; உமது திருப்பெயரை என் நாவினற் சொல்லுவதை மறந்தேனல் லேன்; (இறந்த பிரமதேவரது) தலை யோட்டிலே பிச்சை ஏற்றுத் திரிபவரே, நான் இவ்வாறு (உமது மீளா அடியாஞக) இருக்கவும் என்னுடலினுள்ளே பொ-ருந்தி என்னை வருத்துஞ் சூலைநோயை நீக்குகின்றீரில்லை. அதனல் அடியேன் துன்பப்படுகிறேன்.

நாமம் - இறைவன் திருப்பெயர்; இங்கே திருவைந்தெழுத்து. உலந்தார்- -இறந்தவர். தலை - தலையோடு, கபாலம்

### 2. சிதம்பரம்

கூத்தப் பெருமானைக் கும்பிடவேண் டும் என்ற ஆசையினலே திருநாவுக்கரசு நாயனர் சிதம்பரம் வந்து சேர்ந்தார். அங்கே கனகசபையிலே ஆநந்த நடனம் ஆடுகின்ற நடராசப்பெருமானைக் கண்ட மாத்திரத்திலே பலமுறை நிலத்திலே விழுந்து வணங்கினர். பின் எழுந்து நின்று கூத்தப்பெருமான் தருங் காட் சியைக் கண்ணூரக் கண்டு களிப்புற்ருர். பெருமானரது திருமுகத்திலே '' என்று வந்தாய் '' என்ற திருக்குறிப்பு இருப்ப தாக அவருக்குத் தோன்றிற்று. உடனே கைகள் இரண்டுந் தலைமேற் குவிந்தன. கண்களினின்றும் ஆநந்தக் கண்ணீர் வடிந்தது. மனங்கசிந்துருகப் பெருமா னுடைய கண்களினின்றும் பொழியும் அருளிலே திளைத்துநின்று '' கருநட்ட கண்டனை'' என்றது முதலாய திருவிருத் தங்களைப் பாடினர். அவற்றுள் மேலே வருவதும் ஒன்று.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யிந்த மாநிலத்தே.

திருச்சிற்றம்பலம்

இத்திருவிருத்தத்திலே நாயனர் கூத் தப் பெருமானைத் தான் கண்டவாறு சொல்லியருளுகிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கூத்தப்பெருமானுடை) புருவங்கள் வளைந்திருக்கின்றன ; சிவந்த வாயிலே புன்சிரிப்பு அரும்புகின்றது ; சடை குளிர்ந்து தோன்றுகின்றது ; செம்பவளத் திருமேனியிலே பால்போலும் வெண்ணீறு மிளிருகிறது ; இனிதாந் தன்மை வாய்ந்த திருவடியொன்று தூக்கப்பட்டிருக்கிறது. இத்திருக்காட்சி கிடைக்கப்பெற்றால் (இழிவானது என்று கருதப்படும்) இம்மானுடப் பிறவியும் வேண்டும் என்ற உயர்வுடையதாகும்.

குனித்த - வளைந்த. கொவ்வை - கொவ்வைப்பழம், இங்கே வாயின் சிவந்த தன்மைக்கு உவமை. குமிழ் சிரிப்பு - புன்னகை. பனித்த - குளிர்ந்த; இங்கே கங்கை நீராற் குளிர்ந்த. இனித்தம் - இனிதாந் தன்மை; தூக்கிய திருவடி பேரின்பந் தருவதால் இனித்தமுடையதாம். மாநிலம் - உலகம்.

### 3 திருக்காளத்தி

திருநாவுக்கரசர் பழையனூர் முதலாய வடதிசைத்தலங்களைத் தொழுது, பொன்முகலியாற்றில் முழுகித்திருக்காளத்தி மலைமிசை யேறிக் காளத்தி நாதரையிறைஞ்சிப் பாடியருளியது இத்திருப்பதிகம். இது பாடல் தோறும் காளத்தியப்பரை ''என்கண்ணுளான்'' என்று பாடியருளிய சிறப்பினையுடையது.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணுளானே.

திருச்சிற்றம்பலம்

திருக்காளத்தி என்னும் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள காளத்திநாதர் என்னும் திருப்பெயருடைய இறைவன் என் மனத்திலே என்றும் நீங்காது உறைகின்றான் ; என் சிரசிலே தன் திருவடிகளைப் பதிய வைத்துள்ளான் ; என் வாயினால் ஓதப்படுகின்றான்; தன்னை வாயாரப் பாடுகின்ற சிவனடியார்களுள் இருக்கின்றான் ; தேவாதிதேவர்கள் தம் சிரமேல் தாங்கிப் போற்றி வழிபடும் படியாக இருக்கின்றான்; ஏழேழு உலகங்களுள்ளும் வியாபித்திருக்கின்றான் ; இவ்வுலகத்திலே செவ்விதாகிய பொன்மயமான குறிஞ்சி நிலத்திலே (காளத்தியிலே) எழுந்தருளியிருக்கிறான் ; நறுமணமுள்ள திருக்கொன்றை மலரினுள்ளே இருக்கிறான் ; திருக்காளத்தியாகிய மலையிலே எழுந்தருளி இருக்கின்றான் ; நெருப்பு காற்று ஆகாயம் முதலாய ஐம்பூதங்களிலே செறிந்திருக்கிறான் ; திருக்கயிலாய மலையின் உச்சியிலே எழுந்தருளியிருக்கின்றான். இப்படிப்பட்ட காளத்தியான் என் கண்ணுள்ளே (கண்ணின் மணியாக) இருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. சுந்தரமூர்த்திநாயனார்

பாகம்

திருக்கைலாயத்திலே சிவபெருமானுக்குப் பூமாலை தொடுத்தல் முதலாய தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தார் ஆலாலசுந்தரர். இவர் ஒரு நாட் பூக்கொய்யும் பொருட்டுத் திருநந்தவனத்துக்குச் சென்றிருந்தபொழுது அங்கே உமாதேவியார் பொருட்டு மலர் கொய்துகொண்டிருந்த அநிந்திதை, கமலினி என்னும் தோழியர் இருவரையுங் கண்டு, அவர்களிடத்தே தம் மனத்தைச் செல்லவிடுத்தார். இதனை அறிந்த சிவபெருமான் அவர்கள் மூவரையும் பூலோகத்திலே பிறந்து இன்பந் துய்த்து மீண்டு தம்மிடம் வருமாறு கட்டளையிட்டார். அப்போது ஆலாலசுந்தரர், " எம்பெருமானே மயக்கம் பொருந்திய மனிதப் பிறப்பை எடுத்து உலக வாழ்க்கையிலே மயங்கும்போது தேவரீர் வந்து அடியேனைத் தடுத்தாட்கொள்ளவேண்டும் " என்று பிரார்த்தித்தார். பரமசிவனும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருளினார்.

ஆலாலசுந்தரர் திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே சிவப்பிராமண மரபிலே சடையனார் என்பவருக்கு இசைஞானியார் வயிற்றிலே திருவவதாரஞ் செய்தார். அக்குழந்தைக்கு நம்பியாரூரர் என்று பெயரிட்டனர். குழந்தை ஒரு நாள் வீதியிலே சிறு தேருருட்டி விளையாடும்போது நரசிங்கமுனையர் என்ற அரசர் அக்குழந்தையின் அழகு அறிவு முதலியவற்றைக் கண்டு அதனைத் தாம் வளர்க்க விரும்பினார். அதற்குத் தந்தையாரும் இசையவே நம்பியாரூரர் அரமனையில் வளர்ந்து வந்தார். அரசரால் வளர்க்கப்படினும் அவர் தமது அந்தணர் குலத்திற்குரிய ஒழுக்கத்தையே யுடையவராகி வளர்ந்து, உரிய காலத்திலே உபநயனம் பெற்று வேதாத்தியயனஞ் செய்து மணப்பருவத்தை எய்தினார்.

அக்காலையிற் புத்தூர் சடங்கவி சிவாசாரியரின் புதல்வியைத் திருமணஞ் செய்து வைக்கப் பெரியோர் நிச்சயித்தனர். திருமணநாளன்று நம்பியாரூரர் மணமகள் இல்லத்தில் மணவாளக் கோலத்தோடு எழுந்தருளியபோது, சிவபெருமான் ஒரு கிழப் பிராமண வடிவங் கொண்டு அவ்விடத்திலே எழுந்தருளினார். " எனக்கும் உனக்கும் ஒரு வழக்குண்டு. அதனைத் தீர்த்த பின்னரே நீ திருமணஞ் செய்தல் தகும் " என்றார். பின்பு அங்கிருந்த சபையோரைப் பார்த்து, " இவன் எனக்கு அடிமை " என்று வழக்கிட்டு வாதாடினார். வழக்கு முதிர்ந்துவரச் சபையோர் வழக்கை விசாரிப்பதற்குக் கிழவனாரின் ஊராகிய திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்றார்கள்.

அங்கே கிழப்பிராமணவடிவத்தில் எழுந்தருளிய இறைவன் திருவருட்டுறைத் திருக்கோயிலினுட் சென்று மறைந்தார். சிவபெருமானின் திருவருளை வியந்து நின்ற நம்பியாரூரரை நோக்கி, " நீ நம்மொடு வன்சொற்களைச் சொல்லி வன்றொண்டன் என்கிற பெயரைப் பெற்றாய். நமக்கு அன்பினோடு செய்யத்தக்க அருச்சனை பாட்டேயாதலால் மண்மேல் என்னைச் சொற்றமிழ்பாடு " என்றருளிச் செய்தார். " நீ முன்னே என்னைப் பித்தன் என்று சொன்னாய். ஆகையால் என் பெயர் பித்தன் என்றே பாடு " என்று சொல்லியருள வன்றொண்டரும் " பித்தா பிறை சூடி " என்றடியெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு திருவாரூர் சென்றடைந்து அங்கே வாழ்பவர்களெல்லாரும் தம்மை எதிர்கொண்டழைக்க வன்றொண்டர் திருக்கோயிற்றிருவாயிலையடைந்தார். அப்பொழுது ஓரசரீரி, " நாம் உனக்குத் தோழரானோம். முன்னே நாம் உன்னை ஆட்கொண்ட திருமணக் காலத்திலே நீ கொண்ட மணக்கோலத்தை எப்பொழுதுங் கொண்டு பூமியின் மேல் விளையாடுவாய் " என்றது. அன்று முதல் எல்லாரும் அவரைத் தம்பிரான் தோழர் என்று சொல்லிக்கொண்டார்கள்.

முன்பு திருக்கைலாயத்திலே உமாதேவியாருடைய சேடியர்கள் இருவருள் ஒருவராகிய கமலினி திருவாரூரிலே பிறந்து பரவை என்னும் பெயருடனே வளர்ந்து மங்கைப் பருவமடைந்திருந்தார்.

தம்பிரான் தோழரும் பரவையாரும் ஒருநாள் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டுக் காதல் கொண்டனர். இறைவர் கட்டளைப்படி அடியார்கள் இருவருக்கும் திருமணஞ் செய்து வைத்தனர்.

ஒருநாள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கோயிலுட் செல்லும்போது அங்கேயுள்ள தேவாசிரிய மண்டபத்திற் சிலனடியார்கள் கூடியிருந்ததைக் கண்டார். " இவர்களுக்கு நான் அடியனாகும் நாள் எந்நாள் " என்று நினைத்துக் கவலையுற்றார். அப்பொழுது சுவாமி அவருக்குக் காட்சிகொடுத்து, " நீ நம்முடைய அடியார்களை வணங்கி அவர்கள் மேற் பதிகம் பாடு " என்றருளிச் செய்து, " தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன் " என்றடியெடுத்துக் கொடுக்கச் சுவாமிகள் திருத்தொண்டத் தொகையைப் பாடி மகிழ்ந்தார்.

குண்டையூரிலே வாழ்ந்த செல்வர் ஒருவர் சுவாமிகள் பொருட்டுப் பரவையார் வீட்டுக்கு வேண்டும்பொருள் அனுப்பி வந்தார். மழையின்மையால் வளஞ் சுருங்க குண்டையூர்க் கிழவர் சுவாமிகளுக்கு அனுப்ப நெல் போதாமை குறித்து மனங் கவன்றார். அப்பொழுது இறைவன், " சுந்தரனுக்கு அனுப்பும்படி உனக்கு நெல்லுத் தந்தோம் " என்று கூறிக் குண்டையூர் முழுவதும் நெல் நிறையச் செய்தார். அந்நெல்லைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஆளில்லை என்று சுந்தரர் வருந்தி, " நீள நினைந்தடியேன் " என்று திருப்பதிகம் பாடினார். அன்றிரவே பூதங்கள் அந்நெல்லை எடுத்துச் சென்று பரவையார் திருமாளிகையிலும் திருவாரூர் முழுதினும் நென்மலையாக்கின.

திருவாரூரிற் பங்குனி உத்தரத் திருநாள் அணுகியதும் பரவையார் திருவிழாச் செலவிற்குக் கொடுக்கப் பொன் கொண்டுவரும் பொருட்டுத் திருப்புகலூரையடைந்தார். அங்கேயிருந்த செங்கற்களை உயரம்பண்ணித் தலையணையாகக் கொண்டு நித்திரை செய்தார். பின் விழித்தெழுந்தபோது அச்செங்கற்களெல்லாம் பொற் கற்களாயிருக்கக் கண்டு திருவருளைத் துதித்துத் " தம்மையே புகழ்ந் திச்சை பேசினும் " என்னும் திருப்பதிகம் பாடினார்.

பின்பு சுவாமிகள் திருமுதுகுன்றத்துக்குச் சென்றார்கள். அங்கே இறைவன் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னையும் திருவாரூருக்கு வந்தருளச் செய்ய வேண்டும் என்று வேண்டினார். அங்ஙனமே திருவருளினால் அப்பொன்னெல்லாவற்றையும் அங்கேயுள்ள மணிமுத்தா நதியிலிட்டுப் "பொன் செய்த மேனியினீர்" என்ற திருப்பதிகம் பாடித் திருவாரூரிலுள்ள கமலாலயத்திற் போயெடுத்தார்.

பாகம் II

முன்பு திருக்கைலாயத்திலே ஆலாலசுந்தரரை விரும்பிய அநிந்திதையார் ஞாயிறு கிழவர் என்பவருக்குப் புதல்வியாகத் திருவவதாரஞ் செய்து சங்கிலியார் என்னும் பெயரைப் பெற்றிருந்தார். அவர் மங்கைப் பருவமடைந்தபோது தாம் ஒரு சிவனடியாரையே மணஞ் செய்தல் வேண்டும் என்று உறுதி பூண்டார். இதனையறிந்த தந்தையார் திருவொற்றியூரிலே ஒரு கன்னிமாடஞ் சமைத்து,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலே அவரை இருத்தினுர். சங்கிலி யார் கன்னிமாடத்திலேயிருந்து திருக் கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து இறைவருக்குப் பூமாலை கட்டுந் திருத்தொண்டை மேற்கொண்டிருந் தார்.

திருவொற்றியூர்த் திருக்கோயிலிலே சுவாமி தரிசனஞ் செய்யச் சென்ற சுந்தர மூர்த்தி சுவாமிகள் சங்கிலியாரைக்கண்டு காதல் கொண்டார். அவரைத் தமக்குத் தந்தருளும்படி சுவாமியை வணங்கினுர். அப்பொழுது பரமசிவன் "உத்தமி யாகிய சங்கிலியை உமக்குத் தருவோம்" என்று திருவாய் மலர்ந்தருளிச் சங்கிலி யாருக்குக் கனவிலே தோன்றிச் "சங் கிலியே, சுந்தரன் தனக்கு மனைவியாக உன்னைத் தரும்பொருட்டு என்னைப் பிரார்த்தித்தான். நீ மகிழ்ச்சியோடும் அதற்கு உடன்படு" என்றுர்.

திருமணஞ் செய்த சுந்தரர் சங்கிலியா ரோடு கூடி இனிது வாழ்ந்திருந்த காலத் திலே, திருவாரூருக்குப் போகக் கருதி திருவொற்றியூரை விட்டு நீங்கினுர். நீங் கியவுடனே, சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்குறுதி தவறியமையால், சுந்தர மூர்த்திநாயனுரின் இரண்டு கண்களும் பார்வை இழந்தன. எனினும் திருவாரூ ருக்குச் செல்லவேண்டுமென்ற பேரவா வினுற் சிலர் முன்னே வழிகாட்டிச் செல்லச் சென்று திருவெண்பாக்கத்தை யடைந்தார். அங்கே சிவபெருமான் அவருக்கு ஊன்றுகோல் கொடுத்து, "உளோம் போகீர்" என்று சொல்லி யருளினுர்.

பல தலங்களையும் வணங்கிக் கொண்டு காஞ்சிபுரத்தையடைந்த சுவாமிகள் "சிறி யேன் செய்த பிழையைப் பொறுத்துச் சிறியேனுக்குத் தேவரீரைத் தரிசிக்கும் பொருட்டுக் கண்ணைத் தந்தருளும்" என்று வேண்டினுர். அப்போது இறைவன் இடக்கண்ணை மாத்திரம் கொடுத்துத் தமது திருக்கோலத்தைக் காட்டினுர். கண்டு பரவசமாகி, "ஆலந்தானுகந் தமுது செய்தானை" என்னுந் திருப்பதி கத்தைப் பாடியருளினுர்.

திருவாரூரையடைந்த சுந்தரமூர்த்தி நாயனுர் சுவாமியைத் தரிசிக்க ஒரு கண் போதாமையால் வலக் கண்ணையும் தந்து தம்மைக் காத்தருளல் வேண்டு மென்று பிராத்தித்து "மீளா வடிமை யுமக்கே யாளாய்" என்னும் திருப்பதி கத்தைப் பாடினுர். அப்பொழுது வன் மீகநாதர் திருவுளமிரங்கி அவருக்கு வலக் கண்ணையும் கொடுத்தருளினுர். வன்மீக நாதருடைய திருக்கோலத்தை இரண்டு கண்களினுலுந் தரிசனஞ் செய்து வணங்கி மகிழ்ந்திருந்தார்.

சுந்தரமூர்த்திநாயனுர் திருவொற்றி யூரிலே சங்கிலியாரை மணந்திருந்த சங் கதியைக் கேள்வியுற்ற பரவையார் அதிக துக்கமும் கோபமும் கொண்டிருந்தார். இதனையறிந்த சுவாமிகள் பரவையார் கொண்ட கோபத்தை நீக்கிக் கொண்டு வரும் பொருட்டுச் சிலரைத் தூது அனுப் பினுர். அவர்களால் அஃது ஆகாது போகவே சுவாமிகள் இறைவனைப் பரவையாரின் ஊடலைத் தீர்த்தருளப் பிரார்த்தித்தார். அப்பொழுது சிவ பெருமான் தூது சென்று பரவையாரின் ஊடலைத் தீர்த்துவைத்தார்.

இதனை அறிந்த ஏயர்கோன் கலிக் காமர் என்ற சிவபத்தர் சுந்தரரைப் பகைத்திருந்தார். சிவபெருமான் கலிக் காமருக்குச் சூலை நோய் உண்டாகச் செய்து, சுந்தரமூர்த்தி நாயனுரை அவ ரிடம் எழுந்தருளப்பண்ணி இருவரையும் நண்பர்களாக்கியருளினுர்.

சேரநாட்டை ஆண்டு வந்த சேரமான் பெருமாள் என்பவர் சுந்தரமூர்த்தி நாய னுரின் பத்தி மகிமைகளைப் பரமசிவத்தி னுலறிந்தார். ஆகவே திருவாரூருக்குச் சென்று அங்கே நாயனுரோடு நட்புக் கொண்டிருந்தார். பின்னர் இருவரும் மதுரைக்குச் சென்று சுவாமிதரிசனஞ் செய்து பல தலங்களையும் வணங்கிக் கொண்டு சேரநாட்டுக்குச் சென்றுர்கள்.

நம்பியாரூரர் சேரநாட்டிலே சேரமான் பெருமாணுயனுரோடு சிலகாலந் தங்கித் திருவாரூருக்கு மீண்டபோது சேரமான் கொடுத்த திரவியங்களைச் சுவாமிகளிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்து வேடுவர் பறித்துக்கொண்டார்கள். நாயனார் திருமுருகன் பூண்டியிலே '' கொடு வெஞ்சிலை வடுக வேடுவர் '' என்னும் திருப்பதிகத்தைப் பாடி இழந்த பொருளை மீண்டும் பெற்றார்.

சேரநாட்டுக்கு மீண்டு செல்லும்போது வழியிலே ஒரு வீட்டில் மங்கல ஒலியும் எதிர் வீட்டில் அழுகை ஒலியும் கேட்டன. '' ஒரே வயதினரான இரு சிறுவர் குளத்தில் நீராடியபோது ஒருவன் முதலையுண்டிறந்தான். அவன் வீட்டில் அழுகை ஒலி. தப்பினவனுக்கு இன்று பூனூற் சடங்கு. அங்கே மங்கல வொலி''



என்று சொன்னார் ஒருவர். இதனைக் கேட்டு வருத்தமடைந்த நாயனார் அவிநாசியப்பரைத் தொழுது, '' கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே '' என்ற திருப்பதிகம் பாடினார். காலன் முதலை வயிற்றினுள்ளே முந்தின தேகத்தையுஞ் சென்ற ஆண்டுகளின் வளர்ச்சியையும் உடையதாகத் தோற்றுவிக்க, முதலை கரையில் வந்து பிள்ளையை உமிழ்ந்தது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பல தலங்களையும் வழிபட்டுக்கொண்டு திருவஞ்சைக்களத்துக்குச் சென்று திருக்கோயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிலே போய்த் " தலைக்குத் தலைமாலை " என்ற திருப்பதிகம் பாடினார். அப்போது சிவபெருமானின் ஆணைப்படி தேவர்கள் வெள்ளை யானையுங் கொண்டு திருவஞ்சைக் களத்தையடைந்து சுவாமிகளுக்கு இறைவனின் ஆஞ்ஞையைத்தெரிவித்து வணங்கி நின்றார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானையின் மீதும், சேரமான் பெருமாளுயனார் குதிரையின் மீதுமாக எழுந்தருளித் திருக்கைலாயத்துக்குச் சென்றார்கள். அங்கே இருவரும் சுவாமியின் திருவருளைப் பெற்று ஆநந்தமடைந்திருந்தார்கள்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. சுந்தரமூர்த்திநாயனர்

## தேவாரம்

### 1. திருப்புன்கூர்

ஏயர்கோன் கலிக்காம நாயனரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அதிக நண்பர்களாகித் திருப்புன்கூருக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்தபோது சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியது.

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
 அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் னாருயி ரதனை வவ்வி
 னாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியி
 லிவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே

திருச்சிற்றம்பலம்

செழிப்பான சோலைகள் நிறைந்த திருப்புன்கூரிலே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே, முன்னொருமுறை மார்க்கண்டேயர் என்னும் அந்தணர் உமக்குப் பூசை செய்தார். அப்பொழுது அவர் உயிரைக் கொண்டுபோவதற்கு இயமன் வந்தான். அவர் உம்மை அடைக்கலம் அடைந்தார். இயமனே அதைப் பொருட்படுத்தாது அவர் மீது பாசக் கயிற்றை வீசினன். அப்போது நீர் வெளிப்பட்டு இயமனைக் கொன்று அவரைக் காப்பாற்றினீர். நீர் அன்று அவருக்கு உயிர்ப்பிச்சை வழங்கிய கருணையை நானும் அறிந்து கொண்டேன். எந்தையே, என்னிடமும் எப்பொழுதாயினும் ஒருநாள் இயம தூதுவர் வருவர். அப்பொழுது நீர் "இவன் என்னுடைய அடியவன்; ஆதலால் இவனை விட்டு அகலுங்கள்" என்று அவர்கள் என்னுயிரைக் கொண்டுபோகாது தடுப்பீர். அதை நம்பி நான் உம்முடைய திருப்பாதங்களை வழிபட வந்துள்ளேன்.

அந்தணாளன் - பிராமணன் (மார்க்கண்டேயர்); காலன் - இயமன்; வவ்வினாய் - கவர்ந்தாய்; வன்மை - கொடை, அது கருணையால் நிகழ்ந்தது; நலியில் - துன்புறுத்தினல்.

### 2. திருக்கேதீச்சரம்

சுந்தரமூர்த்தி நாயனர் சேரமான் பெருமாணாயனருடன் இராமேச்சரத்திற் சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி, அங்கு சிலநாள்கள் தங்கியிருந்தார். இருக்கும்போது அங்கிருந்தே ஈழநாட்டிலுள்ள மாதோட்டத்துத் திருக்கேதீச்சரத்தை வணங்கி, அதன் மேலே திருப்பதிகம் பாடினர்.

பண்-நட்டபாடை. இராகம்-நாட்டை

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை
 கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண
 வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவி
 யின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்
 சரத் தானே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாவி என்று ஒரு புனித நீர்நிலை யுண்டு. அதன் கரையிலே திருக்கேதீச் சரம் என்னும் திருக்கோயிலிருக்கின்றது. அக்கோயிலிலே எழுந்தருளியிருக் கின்ற சிவபெருமானை விட்டுணு இடப வடிவமாக இருந்து சுமக்கின்றார். அவர் என்றும் இளமை அழகுடன் பொலிகின் றார்; யானையின் தோலைப் போர்த்திருக் கிறார்; இறந்த பிரமவிட்டுணுக்களின் தலை ஓடுகளைக் கோத்து மாலையாக அணிந்திருக்கின்றார். அவருடைய அடிய வர்கள் அவரை வணங்கிக் கொண் டிருக்கின்றவர்.

### 3. திருவாரூர்

சேரமான் பெருமாணாயனாரும் சுந்தர மூர்த்தி சுவாமிகளும் சிலநாள் திருவா ரூரிலே தங்கிச் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருந்தனர். பலநாட் சென்ற பின் சேரமான் பெருமாணாயனார் சுந்தர மூர்த்திநாயனாரைத் தம்முடைய பதிக்கு அழைத்துச் சென்று அங்கே சிலகாலம் இருந்தார். கொடுங்கோளூரிற் சேர மான் பெருமாணாயனார் செய்த உபசார ரங்களை ஏற்று மகிழ்ந்து தங்கியிருந்த காலை சுவாமிகள் ஒருநாள் திருவாரூரிற் புற்றிடங்கொண்ட வன்மீகநாதரை நினைந்து பிரிவாற்றாது வருந்தினார். அப் போது இப்பதிகத்தைப் பாடியருளினார். பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணா
எம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம் வைகும்வ யற்பழ னத்தணி
யாரு ரானை மறக்கலு மாமே

திருச்சிற்றம்பலம்

திருவாரூர்ப் பூங்கோயில், அன்னங்கள் வசிக்கும் வயல்கள் நிறைந்த மருத நிலத் திலுள்ளது. அக்கோயிலில் வீற்றிருக்கும் சிவபெருமான் தம்மை வழிபடுவருக் குப் பொன்னையும் மெய்யான பொருளை யும் கொடுப்பர்; உலக போகத்தை யும் மன நிறைவையும் தருவார்; நாம் செய்த பாவத்தின் பயனாகத் துன்பம் வராமற் செய்வார்; நாம் இனிப் பாவமே செய்யவிடாமல் நல்வழிகாட்டு வார்; அவர் எப்படிப்பட்டவர், எவ்வாறு இருக்கிறார் என நாங்கள் அறிய முடியாதபடி நாம் காணும் அத்தனை பொருள்களிலும் எம்மிலும் இருக்கிறார். அப்படிப்பட்ட சிவபெருமான் திருக் கோயிலிலுள்ள திருவடிவத்திலிருந்து நாம் நேரே கண்டு வழிபட அருள் செய்கிறார். அவரை நாம் மறந்து எப் படி வாழ முடியும்?

பொன் - இங்கே செல்வம்; மெய்ப் பொருள் - மெய்ஞ்ஞானம், உண்மை யான செல்வம், அருள்; திருஅருட் செல்வம்; போகம் - இன்ப துன்ப நுகர்ச்சி; எம்மான் - எம்முடைய தலை வர்; எளிவந்த - நாம் அறியக்கூடிய தாக வந்திருக்கிற; பழனம் - மருத நிலம்; அணி - அழகு; பணிப்பான் - திருவருள்பாலித்தருள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. மாணிக்கவாசகர்

பாகம் I

மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டி வள நாட்டிலே திருவாதவூரிலே அமாத்தியர் என்னும் அந்தணர் குடியிலே சிறந்து விளங்கிய சம்புபாதாசிரியரும், அவர் மனைவி சிவஞானவதியாரும் செய்த தவப்பயனாற் பிறந்தருளினார். இவருக்குப் பெற்றோரிட்ட பிள்ளைப் பெயர் வாதவூரர் என்பது.

வாதவூரர் பதினாறாண்டு நிரம்பு முன்பு கலைகள் பல கற்று நல்லொழுக்க நெறியினின்று யாவரும் வியந்து போற்றும்படி விளங்கி வந்தார்.

அந்நாளிலே பாண்டி நாட்டிற் செங்கோல் செலுத்திய அரிமர்த்தனபாண்டியன், இவரின் அறிவொழுக்கங்களின் சிறப்பினைக் கேள்வியுற்று இவருக்குத் தென்னவன் பிரமராயன் என்னும் சிறந்த பட்டத்தை வழங்கித் தமக்கு முதலமைச்சராக்கினார்.

அரசனுக்கு அமைச்சராய் விளங்கிய நாளிலே, வாதவூரருக்கு உலகியலில் வெறுப்புத் தோன்றிற்று. அல்லற்படும் உயிர்க்கு உறுதி யாது என்னும் மெய்ம்மை விசாரணையில் ஈடுபட்டு நல்லாசிரியரை நாடியிருந்தார். இதனால் அவருக்குச் சிவபெருமானை அடையும் பக்குவ காலம் வந்து கொண்டது என்பது தெளிவாகும்.

அங்ஙனமிருக்கும் நாளிலே ஒருநாள் குதிரைகள் வாங்கிவருவதற்குக் கீழ்க் கடற்றுறைக்குச் சென்றுவருமாறு மன்னன் வாதவூரரைப் பணித்தான். வாதவூரர் அரசன் பணித்தபடி பணியாளருடன் திருப்பெருந்துறையை நோக்கிச் சென்றார்.

இறைவன் அடிகளாரை ஆட்கொள்ள எண்ணிச் சிவனடியார் குழாத்தோடு, திருப்பெருந்துறையிலே ஒரு சோலையின் கண் ஒரு குருந்தமர நிழலிலே ஞானாசிரியராக எழுந்தருளியிருந்தார்.

திருப்பெருந்துறையையடைந்த வாதவூரருக்குப் பல மெய்ப்பாடுகள் தோன்றின. அன்பினாலே நெஞ்சம் உருகவும், கண்ணீர் பாயவும், தம்மையறியாமலே சிவபெருமானிடம் உந்தப் பெற்ற பத்தியினாலே இரு கைகளும் தலைமேற் குவியவும் பெற்றார். குருந்தமர நிழலிலே அடியார் சூழ அவர் நடுவிலே எழுந்தருளியிருந்த குருவினை வீழ்ந்து வணங்கி எழுந்து அஞ்சலி செய்து, ''அடியேனை ஆண்டுகொண்டு உய்வித்தருளுக'' என வேண்டிக் குறையிரந்து நின்றார்.


வாதவூரடிகள் கடவுளை அடைதற்கான பக்குவ நிலையெய்தியிருந்தமையாற், குருமூர்த்தமாக அங்கே எழுந்தருளிய சிவபெருமான், அவருக்குப் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மைகளை ஐயமுந் திரிபும் நீங்கப் போதித்துத் திருவைந்தெழுத்தையும் ஓதியருளினார்.

சிவபெருமானுடைய திருவருள் நோக்கத்தினால் ஞானநிலையடைந்தாராதலின், வாதவூரடிகள் அவர்மேலே அருட்பாடல்களை மழைமாரியெனப் பொழிவாராயினார். அந்த அருட்பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான், அவை விலைமதிப்பற்றவையாகி விளங்கினமையால் வாதவூரருக்கு மாணிக்கவாசகர் என்னும் சிறப்புத் திருப்பெயரைச் சூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை வாங்கக் கொண்டுசென்ற பொற் குவியல்களைச் சிவபெருமான் திருவுள்ளப்படி திருக்கோவிற் பணிக்கும்,



சிவனடியார்கட்கும் செலவு செய்து தம் வாழ்நாளை இறைபணியிலே கழிப்பாராயினார்.

குதிரை வாங்கச் சென்றவர் கோயில் கட்டிக் காலம் போக்குகின்றார் எனக் கேள்வியுற்ற மன்னவன் கோபங்கொண்டான். உடனே ஓலை ஒன்றை எழுதி அனுப்பினான். '' நீர் எமது அளவற்ற செல்வங்களைக் கொண்டுசென்று சிறந்த குதிரைகளைக் கொள்ளாமற் கோவணங் கொண்டீர். இது இராச தருமத்தை நடத்தும் அமைச்சர்க்கு இலக்கணமாகுமா ? அரசனையண்டி வாழ்தலினும் வயிறு வளர்க்கப் பிச்சையெடுப்பது மகிமையா ? உள்ளன்போடே ஆதரிக்கும் அரசனுக்குத் துரோகம் செய்வது நீதியா ? மன்னரைச் சேர்ந்தொழுகுதல் நஞ்சையுடைய பாம்பினோடு கூடி வாழுந் தன்மைபோலும் என்று நீர் அறிந்தால் இந்த ஓலையைக் கண்டதும் நமது தூதுவர்களோடு உடன் வருக'' என்பதே அவ்வோலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலையைப் பெற்றுக்கொண்ட அடிகள், தம்மையாண்டுகொண்ட சிவபெருமானிடஞ் சென்று, " மாநில மன்னனாகிய பாண்டியன் எழுதிய ஓலை இது வாகும் " என்று கூறி அதனை வாசித்தார். " மகனே, நீ மயங்குதலை ஒழிக. உலகத்தவரனைவருங் காண நாமே நல்ல குதிரைக் கூட்டத்தை ஆவணி மூல நாளிற் கொடுத்து மீள்வோம். இத்தூதுவர்களோடு செல். மன்னன் நின்னை வருத்துவான் என்று அஞ்சாதே " என்று கூறிப் பரமாசாரியர் அடிகளுக்குத் திருநீறு சாத்தி, மன்னன் மகிழும்படி மந்திரிக்கோலஞ் செய்து, ஒரு மாணிக்கத்தைக் கொடுத்து, " இதனைப் பாண்டியனுக்குக் கையுறையாக நல்குதி " என்று கூறியருளினார்.

பாகம் II

ஞானாசிரியனை அரிதிற் பிரிந்து சென்ற அடிகளார், பாண்டியனுக்கு உற்ற



துரைக்க, அவன் மனமிக மகிழ்ந்து மணிவாசகருக்குப் பரிசில்கள் பல வழங்கினான். குறித்த ஆவணிமூல நாளிலே வர வேண்டிய குதிரைகள் திருப்பெருந்துறைக்கு வந்து சேர்ந்தில என்பதை ஒற்றரால் அறிந்த பாண்டியன் வெகுண்டு அடிகளைத் துன்புறுத்துமாறு கட்டளையிட்டான்.

சிவபெருமான் தண்டக்காரரர் இழைத்த துன்பத்தைக் களையத் திருவுளங் கொண்டார்; குதிரைத் தலைவனாக வேடம் தாங்கி, வேதத்தை அழகிய குதிரையாக்கி, அதிலே தாம் ஏறியருளினார். தேவர்களைப் பாகர்களாக்கிக் காட்டிலே திரியும் நரிகளைப் பரிகளாக்கி அவற்றை அணிவகுத்து மதுரையை நோக்கி வந்தார்.

இவற்றைக் கண்ணாரக் கண்ட பாண்டியன் மாணிக்கவாசகரை வாயார வாழ்த்தினான். குதிரைகளைக் கொணர்ந்த இறைவனாகிய தலைமைப்பாகனுக்கு பொன்னாடையைப் பரிசாக நல்க, அவர் அதனைத் தமது குதிரைச் சவுக்கின் நுனியிலேந்தி அவ்விடம் விட்டகன்றருளினார்.



7—13531

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நள்ளிரவிலே அப்பரிகளெல்லாம் முன்போல நரிகளாக மாறின; அங்கு நின்ற குதிரைகளைக் கடித்துத் துன்புறுத்தின; நகரமெங்குங் கேட்க ஊளையிட்டுத் திரிந்தன. மன்னன் சீற்றங் கொண்டான்.

அவன் ஆணைப்படி ஏவலாளர் அடிகளைக் கொடுவெயிலிற் கொதிக்கும் மணலில் நிறுத்தினர்கள். கைகளிற் கல்லேற்றி வருத்தினர்கள். அடிகள் இறைவனை நினைந்தழுது முறையிட்டார். அவர் தம் பெருமையை உலகோர்க்கு வெளிப்படுத்தத் திருவுளங்கொண்டு இறைவன் எங்கும் பெருமழை பெய்து வைகைப் பேரியாறு பேரூழி வெள்ளம் போற்

வாணிச்சி தனது பங்கினையடைக்க ஆளில்லாமல் வருந்தினாள். அவள் வருத்தம் நீங்கச் சிவபெருமானே கூலியாளாக வந்தார். அவளிடம் கூலியாகப் பிட்டினைப் பெற்று வைகைக் கரையை யடைக்கச் சென்றார்.

அங்கே கூலியாளாகிய சிவபெருமான் கரையை யடைக்காது, செல்வி கொடுத்த பிட்டினை விரும்பியுண்டும், விளையாடித்திரிந்தும் ஒரு கொன்றை மரநிழலில் உறங்குவார் போலக் கிடந்தருளினார். இதனைக் கண்ட அதிகாரி அரசனுக்கு அறிவிக்க, அவன் வந்து கூலியாளாகிய சிவபெருமானின் திருமுதுகிலே தங் கைப்பிரம்பால் அடித்தான். அப்பிரம்படியானது பாண்டியனின் முதுகிலும் விழுந்தது; அனைத்துயிர்களிலும் விழுந்தது.



பெருகச்செய்தார். தன் பிழையையுணர்ந்த மன்னன் மணிவாசகரிடம் பொறுதி கேட்டான்.

மழையும் ஓய்ந்தது. வெள்ளமும் வற்றியது. ஆனால் உடைந்த கரைகளைக் கட்ட வேண்டும். மன்னன் ஆணைப்படி மக்கள் தங்களுக்குரிய பாகங்களைத் தாமே கட்டி முடித்தனர். ஆனால் சிவபெருமானிடத்திலே அதிக பத்தியுள்ள செம்மனச்செல்வி என்னும் பிட்டு

இதனையறிந்த மணிவாசகர், "எம்பெருமான் திருமேனி வாட மண்சுமந்து அரசனிடம் அடிவாங்க, நாயேன் காரணனாயிருந்தேனே" என்று வருந்திக் கீழே விழுந்தார். அரசன் அவரை அணைத்து, "அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளும்" என்றிரந்தான். பின்னர் மாணிக்கவாசகப் பெருமான் அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு திருப்பெருந்துறைக்குச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பெருந்துறையிலே குருநாதன் திருவடிகளை வணங்கித் திருவாசகத் திருப்பதிகங்களைப் பாடியருளினார். பின்னர் அங்கிருந்து திருவுத்தரகோச மங்கை, திருவாரூர், திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை முதலிய பல திருத்தலங்களுக்குச் சென்று திருப்பதிகங்கள் பாடி வணங்கினார்.

பின்பு தில்லைக்குச் சென்று வாழும் நாளிலே, அங்கு அனவரதமும் ஆநந்தத் தாண்டவம் செய்யும் அம்பலவாணர், சிறந்த அந்தணர் வேடந்தாங்கி அவர் முன் சென்று, '' மன்றுளாடும் ஐயனை அன்பினாலே நீர் ஓதிய தமிழ்ப் பாடல்களனைத்தையும் என் பிறவித் துன்பம் நீங்கப் பாராயணஞ் செய்யும்படி கருதி வந்தேன். அவற்றை யான் எழுதுதல் வேண்டும், அருளுக '' என்றார். மணிவாசகப் பெருமான் அவற்றைத் திருவாய் மலர்ந்தருள ஐயர் எழுத்தாணி கொண்டு ஏட்டிலே அவற்றை எழுதினார். பின்பு மணிவாசகப் பெருமானைப் பார்த்துச் '' சிவகாமியம்மையுடனுறையும் சபாநாயகரைப் பாட்டுடைத் தலைவராக வைத்து ஒரு கோவை பாடுதல் வேண்டும் '' என்றருளினார்.

பெருமான் அதற்கிசைந்து, திருக்கோவையார் என்ற நூலைப் பாடியருளினார். மனம் மிக மகிழ்ந்து அதனையும் எழுதியருளிய அந்தணர், அத்திருமுறையினீற்றில் '' மெய்த் தவவாதவூரன் விளம்பிட எழுதும் இந்தப் புத்தகம் மன்றுள் ஆடல் புரிந்தவன் எழுத்து '' என்று திருக்காப்புச் செய்து மறைந்தருளினார். அது கண்ட பெருமான் அங்கே எழுந்தருளிய அந்தணர் தம் பரமாசாரியரே என்று உணர்ந்து தம்வசமிழந்தார்.

இங்ஙனம் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் தமது திருக்கையாலே எழுதிய சிவபெருமான், திருவாதவூரடிகளுடைய சிறந்த தவத்தை உலகோர்க் கெடுத்துவிளக்க, அத்திருமுறையைச்சிற்றம்பலத்தின் வாயிலிலுள்ள பஞ்சாட்சரப்படி மீது வைத்தருளினார். பூசை செய்ய வந்த அந்தணர்கள் அந்நூல் அங்கே வந்த அதிசயத்தைக் கண்டு ஆநந்தமடைந்தனர்.

பின்பு அவர்கள் திருவாதவூரடிகளை நோக்கி, வணங்கி, அவர் பாடியருளிய பாடல்களின் பொருள் யாது எனப் பணிந்து கேட்டனர். அடிகள் '' இத் தமிழ்மாலை நுதலிய பொருள் சபாநாயகராகிய இவரே '' என்று திருவாய் மலர்ந்து, அச்சிற்சபையின் கண் விரைந்து சென்று அவர்கள் எல்லாரும் காணச்சிவத்தோடு கலந்தருளினார்.

மாணிக்கவாசகப் பெருந்தகை இங்ஙனம் சிவத்தோடு இரண்டறக் கலந்தது தமது முப்பத்திரண்டாவது வயதில் ஆனிமாதமக நாளிலேயாம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. திருவாசகம்

## திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகளால் பாடியருளப் பெற்ற திருவாசகம் பத்திச்சுவை நிறைந்த பாட்டுக்களைக் கொண்டது. திருவாசகத் திருப்பாட்டுக்கள் அன்புடன் ஓதுவார், கேட்பார் உள்ளத்தை பரவசப்படுத்தும் இயல்பின. மேலே வரும் பாடல்கள் இரண்டுந் திருவாசகத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

### 1. திருச்சதகம்

திருச்சிற்றம்பலம்

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

திருச்சிற்றம்பலம்

உன்னுடைய மெய்யன்பர்க்கு மெய்ப்பொருளாயுள்ளவனே, வணக்கம். நின்னையே நான் பாடவேண்டும். பாடி, மனமுருகிக் கசிந்து கனிந்து கனிந்து ஆநந்தக் கூத்தாடவேண்டும். நான் வணங்கி, நீ சிற்றம்பலத்தே ஆடியருளும்போது, உன்னுடைய திருவடிக் கமலங்களை அடையவேண்டும். இந்தப் புழுக்கூடாகிய உடம்பினை நீ எனக்குத் தொலைத்திடவேண்டும். உனக்கு வணக்கம். நான் பொய்யெல்லாவற்றையும் கைவிட்டொழியும்படி செய்யவேண்டும். உனக்கு வணக்கம். வீட்டின்பத்தைக் கொடுத்தருளவேண்டும். வணக்கம்.

நின்னைப் பாடவேண்டும் என்றதனால் மொழிப் பணியும், நைந்து நைந்துருகி என்றதனால் உள்ளப் பணியும், பாடி ஆட வேண்டும் என்றதனால் மெய்ப்பணியும் கூறப்பட்டன.

புழுக்கூடு - புழுக்களுக்கு உறைவிடமாகிய உடல் ; போற்றி-வணக்கம் ; வீட - தொலைக்க.

### 2. திருச்சாழல்

திருச்சிற்றம்பலம்

அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதா னென்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனே லிருவருந்தஞ்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ.

திருச்சிற்றம்பலம்

பூவிலுறை நான்முகனும் திருமாலும் அடிமுடி தேடியறியா வண்ணம் அனற்பிழம்பு வடிவமாய்ப் பாதாள முதல் அண்ட முடியைப் பொருந்த நின்றது எக்காரணத்தாலெனின், நிலத்திற்குக் கீழ்ப்பட்ட நிலமுதல், மேற்பட்ட அண்டத்திற்கு மேலாகவுஞ் செல்லுமாறு நில்லாமற் போனால் நான்முகனும் திருமாலும் ஆகிய இருவரும் தமக்குள்ளே முரண்பட்ட தணியாப்பகையாலே தமது செருக்கினை யொழிக்கமாட்டார்கள்.

கீழண்டம் - கீழே பாதாளம் வரையும் உள்ள அண்டங்கள்; சலம்-கோபம், பகை ; ஆங்காரம் - செருக்கு : இருவர் - நான்முகனும் திருமாலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. இளையான்குடிமாற நாயனார்

இளையான்குடி என்னும் ஊரிலே மாறனார் என்றொரு வேளாளர் இருந்தார். அவருக்கு வயல்புலங்கள் மிகுதியாக இருந்தன. அவற்றிலிருந்து பெறும் வருவாய் முழுவதையும் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்தலிலேயே செலவிட்டு வந்தார்.

இங்ஙனம் நிகழும் நாளில், ஒருநாள் வறுமை வந்த காலத்திலும் மாறனார் இவ்வறச் செயலைத் தளராது செய்தார் என்பதை உலகத்தோருக்குக் காட்ட இறைவன் திருவுளங்கொண்டான்.

மாறனாருடைய செல்வம் வரவரச் சுருங்கத் தொடங்கியது. தாம்செய்யுந் திருப்பணியைக் கைவிடாது செய்வதற்கு வயல் நிலங்களை ஒவ்வொன்றாக விற்றார். அயலவர், அறிந்தவர் முதலானவரிடத்திற் கடன் வாங்கியும் திருப்பணியைத் தொடர்ந்து செய்தார். நாளடைவிலே தீராத வறுமை அவரைச் சூழ்ந்து கொண்டது.

இந்நிலையில், மழைக்காலத்தில் ஒருநாள் இடிமுழக்கத்துடன் மழை கொட்டிக்கொண்டிருந்தது. இரவு நெடுநேரமாகியும் மாறனார் உறக்கமின்றி வீட்டில் விழித்துக்கொண்டிருந்தார். அவருக்குப் பசி அதிகமாயிருந்தது. உண்பதற்கு வீட்டில் ஒன்றுமில்லை. உதவுவார் ஒருவருமில்லை. இந்த வேளையில் சிவபெருமான் சிவனடியார் வேடந் தாங்கி மாறனார் வீட்டிற்கு வந்தார். மாறனார் கதவைத் திறந்து, சிவனடியாரை எதிர்கொண்டழைத்து, திருமேனியை ஈரம்போக்கி, ஆசனந் தந்து, அமரச் செய்தார்.

பின்பு "சிவனடியாருக்கு அமுதூட்ட வேண்டும்" என்று ஆசைப்பட்டார். உள்ளே சென்றார். அங்கே உண்ண ஒன்றுமிருக்கவில்லை. அத்தனை வறுமை! மனைவியாரைப் பார்த்து "என்ன செய்யலாம்?" என்று வினவினார். மனைவியாரும் "வீட்டிலே ஓர் உணவுப் பதார்த்தமும் இல்லை; நேரமும் அகாலமாயிற்று; அயலவரும் இனி உதவமாட்டார்" என்று சொல்லி வருந்தினார். அறம் வளர்த்த சீமாட்டியல்லவா அவர்! திடீரென அவருக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. "நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள்? காலையிலே வயலிலே விதைத்த நெல் இந்த மழை வெள்ளத்திற் கட்டாயம் மிதக்கும். அதை வாரி எடுத்து வாருங்கள்; குத்தி அரிசியாக்கி விரைவிற் சமைத்துத் தருகிறேன்" என்றார்.

மாறனார் மகிழ்ந்தார். இறைகூடையைத் தலையிற் கவிழ்த்துக்கொண்டு, கொட்டுகின்ற மழையில் பழக்கக்குறி வழியே காலினால் வழிதடவிச் சென்று வயலை அடைந்தார். மிதக்கும் நெல்லை அரித்தெடுத்துக்கொண்டு விரைந்து வீடு திரும்பினார். தம்மை ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டு வாயிலிலே நின்ற மனைவியாரிடம் கொண்டுவந்த நெல்லைக் கொடுத்தார்.

இப்பொழுது சமைப்பதற்கு விறகில்லை. மாறனார் இலமாயிருந்த வீட்டின் மேற் கூரையில் உள்ள வரிச்சுக்களை அறுத்து விழுத்தினார். மனைவியார் அவற்றைக் கொண்டு அடுப்பு மூட்டி, நெல்லை வறுத்து இடித்து அரிசியாக்கிச் சோறு சமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிக் கறிக்கென்ன செய்வது ? மாறனார் புறக்கடையிற் குழியிலிருந்த இளம் பயிர்களை அவசர அவசரமாகப் பிடுங்கிக் கொண்டுவந்து மனைவிகையிற் கொடுத்தார். மனைவியாரும் தமது கைப்பழக்கத்தால் அவற்றைப் பற்பல கறிகளாக்கி சமைத்து முடித்தார்.

மாறனாரும் துயில் கொள்வார்போற் கிடந்த சிவனடியாரை அமுது செய்ய எழுந்தருளும்படி துயிலுணர்த்தினார்.

உடனே அவர் எழுந்து ஒரு சோதிவடிவமாய்த் தோன்றினார்.

இளையான்குடி மாறநாயனாரும், மனைவியாரும் அதுகண்டு திகைத்து நின்றனர். சிவபெருமான் உமாதேவியாருடன் விண்ணிலே எழுந்தருளி, நாயனாரை நோக்கி, '' அன்பனே ! அடியார் பூசையைப் பாதுகாத்தளித்த நீ மனைவியோடும் என்னுலகத்திற் சேர்ந்து பேரின்பப்பெருவாழ்வெய்துவாய் '' என்று சொல்லி மறைந்தருளினார்.

# 18. நமிநந்தியடிகள்

சோழநாட்டிலே ஏமப்பேறூரிலே நமி நந்தி என்னும் அந்தணர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்குதலே தமக்குப் பேரின்பம் எனக்கொண்டிருந்தார். அவர் பலநாளுந் திருவாரூருக்குப்போய் வன்மீகநாதரை வணங்கி வந்தார்.

வன்மீகநாதருடைய கோயிலின் திருமுன்றிலுக்குப் பக்கத்தே அரநெறி என்னுங் கோயில் இருக்கிறது. ஒருநாள் நமிநந்தியடிகள் அரநெறிநாதரை வணங்கி எழுந்தபொழுது, அங்கே இறைவனுக்கு ஏராளமான விளக்குகளை ஏற்றுதற்கு விருப்பங்கொண்டார். அப்பொழுது மாலைக்காலமாதலைக் கண்டு, நேரந் தாழ்த்தாது, அருகேயிருந்த வீடொன்றிற் போய் விளக்கேற்றுவதற்கு நெய் கேட்டார். அது சமணர் வீடென்று அவருக்குத் தெரியாது.

வீட்டினுள்ளோர் '' எரிகின்ற நெருப்பைக் கையிலேந்திய உங்கள் பரமசிவனுக்கு விளக்கு எதற்கு ? இங்கே நெய் யில்லை; வேண்டுமாயின் நீரை விட்டு விளக்கெரியும் '' என்றார்கள். இதைக் கேட்ட நமிநந்திக்கு மனம் பொறுக்க முடியவில்லை. சுவாமி சந்நிதானத்தில் விழுந்து வணங்கினார். அப்பொழுது '' நமிநந்தியே கவலை வேண்டாம் ; பக்கத்தேயுள்ள குளத்தின் நீரைக்கொண்டு விளக்கேற்று '' என்று ஒரு வாக்கு வானத்திற் கேட்டது.

அதைக்கேட்ட அடிகளார் மனமிக மகிழ்ந்து திருவருளை வியந்தார். திருநாமத்தை உச்சரித்துக் கொண்டு குளத்து நீரை முகந்து கொண்டுவந்து விளக்கேற்றினார். அது சுடர் விட்டெரிந்தது. அது கண்ட அடிகளார் ஆநந்தக்கூத்தாடிக் கோயில் முழுவதும் விடியுமளவும் நீரினாலே திருவிளக்கேற்றினார். இப்படித் தினமுஞ் செய்து வந்தார்.

இது இவ்வாறாக, அடிகளார் திருவாரூர்ப்பெருமானுக்குப் பங்குனி மாதத்திலே மகோற்சவம் நடத்திவந்தார். ஒரு நாள் சுவாமி மணலிக்கு எழுந்தருள, அடியார் கூட்டத்தோடு அங்கே தாமுஞ் சேவித்துச் சென்றார். பொழுதுபடச் சுவாமி திருக்கோயிலுக்குத் திரும்பியதும் தாமும் வீட்டிற்குப் போனார். போனவர் உட்புகாது வெளியிலே படுத்திருந்தார்.

இதைக்கண்ட அவர் மனைவியார் '' உள்ளே வந்து பூசை முடித்துக்கொண்டு பள்ளிகொள்ளும் '' என்றார். அதற்கு, அடிகளார் '' இன்று சுவாமி மணலிக்கு எழுந்தருளியபொழுது பல சாதியினருடனுஞ் சேவித்துச் சென்றேன் ; அதனால் தீட்டுண்டாயிற்று ; ஆதலாற் குளித்து உள்ளே வருவதற்கு நீர் முதலியன கொண்டுவா '' என்று சொன்னார். மனைவியாரும் அவற்றைக் கொண்டுவர உள்ளே சென்றார்.

அப்பொழுது உடலின் சோர்வினாலோ, இறைவன் அருளினாலேயோ அடிகளார் சிறிது உறங்கினார். கனவிலே திருவாரூர்ப்பெருமான் தோன்றி, '' திருவாரூரிலே பிறந்தவர்கள் எல்லாம் நம் கணங்கள் ; நீ அதைப் காண்பாய்'' என்றருளி மறைந்தார்.

அடிகளார் விழித்தெழுந்து தான் நினைத்தது குற்றமென உணர்ந்தார். நிகழ்ந்தவற்றை மனைவியாருக்குச் சொல்லிப் பூசையை முடித்தார்.

விடிந்ததும் திருவாரூருக்கு விரைந்து சென்றார். அங்கே இறைவன் சொன்னவாறு கண்டு, தான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுமாறு இறைவனைப் பிரார்த்தித்தார்.

அடிகளார் நெடுங்காலந் திருவாரூரிலே திருத்தொண்டு செய்து கொண்டிருந்து, ஒரு வைகாசி மாதத்துப் பூசநாளிலே இறையடிசேர்ந்து பெருவாழ்வெய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. கண்ணப்பநாயனூர்

பாகம் I

பொத்தப்பிநாட்டிலே உடுப்பூரிலே நாகன் என்பெருருவன் இருந்தான். அவன் வேடர்களுக்கு அரசனுவன். அவனும் மனைவி தத்தையும் குறிஞ்சிக் கடவுளாகிய குமரவேளை வந்தித்தனர். குமரவேள் அருளால் தத்தை ஓர் ஆண் குழந்தையைப் பெற்ருள். குழந்தையைக் கையில் எடுத்தபொழுது 'திண்' ணென் றிருந்தபடியால் அதற்குத் திண்ணன் எனப் பெயர் கொடுத்தனர்.

திண்ணனூர் வேடர் மரபிலே வளர்ந்து பதினறு வயது நிரம்பப்பெற்ருர். அப்பொழுது வயதால் நலிவுற்றிருந்த நாகன் திண்ணனுருக்குத் தன் ஆட்சியுரிமைகளைக் கொடுத்தான்.

இவ்வாறு அதிகாரம் பெற்ற திண்ணனூர் தன் கன்னி வேட்டைக்குப் புறப்பட்டார். வேட்டையின்போது தப்பி ஓடிய ஒரு பன்றியை நெடுநேரந் தொடர்ந்து சென்று தன் வாளால் வெட்டிக் கொன்ருர். கூடச் சென்ற தோழர்களாகிய நாணனுங் காடனுந் திண்ணனூரின் ஆண்மையைக் கண்டு வியப்படைந்தனர்.

நெடுநேரம் வேட்டையாடி நெடுந்தூரஞ் சென்ற களைப்புத்தீர, "பன்றியைத் தீயிலே காய்ச்சித்தின்று தண்ணீருங் குடித்து வேட்டைக்காட்டுக்கு மீள்வோம்" என்று நாணனுங் காடனுஞ் சொன்னூர்கள். திண்ணனுரும் அதற்கு உடன்பட்டார்.

மூவரும் அண்மையிலிருந்த பொன்முகலியாற்றை நோக்கி நடந்தனர். எதிரே திருக்காளத்தி மலைச்சாரல் தோன்றியது. "அங்குச் செல்வோம்" என்றூர் திண்ணனூர். "அங்கே போனுற் குடுமித்தேவரைக் கும்பிடலாம்" என்று நாணன் சொன்னுன்

மலையை அணுக அணுகத் திண்ணனுருக்கு ஒரு பாரங் குறைந்து வருவது போலிருந்தது. உள்ளத்திலே புதியதொரு விருப்பந் தோன்றிற்று. விரைந்து நடந்தார். இதற்கிடையில் பொன்முகலியாற்றங்கரை வந்தது. காடனை நோக்கி "தீக்கடைகோல் செய்து நெருப்புண்டாக்கு; நாங்கள் சுவாமி தரிசனம் பண்ணி வருகிறேம்" என்று சொல்லித் திண்ணனூர் நாணனேடு போனூர்.

அவர்கள் ஆற்றைக் கடந்து, மலையிலேறிக் கோயிலை அடைந்தனர். அங்கே திண்ணனூர் சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைக் கண்டார். கண்டமாத்திரத்திலே, சிவபெருமானுடைய திருவருட் பார்வை பெற்று, முன்னுள்ள குணங்கள் மாறி, அன்பே உருவமானூர். ஓடோடியுஞ் சென்று கடவுளரைக் கட்டித் தழுவினூர்; உச்சிமோந்தார்; முத்தமிட்டார்; பரவசப்பட்டு ஆநந்தக் கண்ணீர்வடித்தார்; "கொடிய விலங்குகள் திரியுங் காட்டிலே தனித்திருக்கின்றீரே!" என்று மனம் நைந்தார். "சுவாமிக்கு இறைச்சி கொடுப்பார் ஒருவருமில்லையே!" என்று வருத்தப்பட்டார். இறைச்சி கொண்டு வருவதற்குச் சுவாமியைப் பிரிந்து செல்லவோ அவருக்கு மனமுமில்லை. பின் ஒருவாறு போய் வரத் துணிந்தார்.

மலையைவிட்டு நீங்கி, மனம் நிறைந்த இறையன்பே பிடித்துந்த, பொன்முகலியாற்றைக் கடந்து, காடனை விட்டுச் சென்ற இடத்திற்கு வந்தார். காடன் கும்பிட்டுத் "தீயுண்டாக்கி வைத்திருக்கிறேன்" என்ருன். திண்ணனூர் பன்றியை நெருப்பிலே வதக்கி, இனிய தசைப் பகுதிகளை அம்பினுலே கிழித்தெடுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவாயில் விட்டுச் சுவை பார்த்துச் சுவையான வற்றை ஒரு தேக்கிலைக் கல்லையிலே வைத்தார்.

கல்லையை ஒரு கையில் ஏந்திய திண்ணனார், வாய்நிறைய ஆற்று நீர் முகந்து, நறு மலர் கொய்து தம்முடியிற் செருகி, மற்றைக் கையிலே வில்லையும் அம்பையும் ஏந்திக்கொண்டு ஓடிப் போய்க் காளத்தியப்பரை அடைந்தார். அப்பர் திருமுடிமேலிருந்த பூக்களைத் தன் காற்செருப்பால் மாற்றி, வாயிலிருந்த நீரைத் திருமுடிமேல் உமிழ்ந்து, தன் முடியிற் செருகியிருந்த பூக்களை எடுத்துச் சாத்திக் கல்லையிலுள்ள ஊனமுதத்தைத் படைத்து அப்பரை உண்பித்தார்.

இவ் வளவில் இராக் காலமாயிற்று. காளத்தியப்பரை வனவிலங்குகள் தீண்டாவண்ணம் இரவு முழுவதும் திண்ணனார் காவல் புரிந்தார். பொழுது விடிந்ததும் அப்பருக்கு அமுது கொண்டு வரும் பொருட்டுப் போயினார்.

## பாகம் II

காளத்திநாதருக்குச் சிவாகமவிதிப்படி தினமும் பூசை செய்பவர் சிவகோசரியார் என்னுந் தவமுனிவராகும். அவர் வழமைபோற் பூசை செய்வதற்குத் திருக்கோயிலுக்கு வந்தார். அங்கே சுவாமி திருமுன்பு இறைச்சியும் எலும்பும் கிடக்கக் கண்டார். கண்டமாத்திரத்திலே அகலமிதித்தோடி "ஓ, கெட்டேன்! மறவேடர் தான் இதைச் செய்திருக்க வேண்டும்; தேவரீரும் இதற்குத் திருவுளமிசைவதா?" என்று அழுது விழுந்தார்.

பின்பு பூசையினைத் தாழ்த்தாது செய்யத் துணிந்தார். திருவலகினாற் சுவாமி சந்நிதானத்தைச் சுத்தஞ் செய்தார். பொன்முகலியாற்றிலே மூழ்கி வந்து, விதிப்படி கழுவாய் செய்து, பூசை செய்தார். அதன்பின் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு தன் தபோவனத்தை அடைந்தார்

இந்த இவ்வாறாக, சுவாமிக்கு அமுது கொண்டுவரச் சென்ற திண்ணனார் முதனாட் போலவே அடுத்த நாளும் ஊனமுதும், நீரும், பூக்களுங் கொண்டு விரைந்து வந்தார். முனிவர் செய்த பூசைப் பொருள்களை நீக்கித் தான் கொண்டுவந்த நீரும், நறுமலருங் கொண்டு முதல்நாட் போலவே, பூசை செய்து முடித்தார். பின்பு இறைச்சிக் கல்லையைத் திருமுன்னே வைத்து, "இந்த இறைச்சி நேற்று நான் கொண்டு வந்ததைவிட நன்று; ஏனத்தினோடு, மான், மரை, கடமை இவற்றின் இறைச்சி; அடியேனுஞ் சுவைகண்டேன்; தேனுங் கலந்திருக்கிறேன்; தித்திக்கும்; உண்டருளுக" என்று சொல்லி அன்போடு தேவரை அமுது செய்வித்தார்.

இங்ஙனம் திண்ணனார் பகலில் வேட்டையாடி ஊனமுது தேடியும், இரவிற் காளத்தி நாதருக்குக் காவல் புரிந்தும் ஒப்புயர்வற்ற அன்புநெறியில் ஒழுகுவாராயினர். பெருமுனிவரும் தினமும் வேடர் பூசைக்காக மனம் நொந்து, அதனை நீக்கி, தூய்மை செய்து ஆகம விதிப்படி பூசை செய்து, "இத்தீமையை உனதருளால் ஒழித்தருள வேண்டும்" என்று இறைஞ்சிச் சென்றார்.

இவ்வாறு ஐந்து நாள்கள் கழிந்தன. ஐந்தாம் நாள் இரவு முனிவரது கனவில் சிவபெருமான் எழுந்தருளி, "அவனை வேடுவனென்று நினையாதே; அவன் செயல்களை நாம் உரைக்கக் கேள். அவன் வடிவமெல்லாம் நம்மிடத்துக் கொண்ட அன்பேயாம். அவன் செயல்களெல்லாம் நமக்கு இனியனவேயாம். நாளைக்கு நீ நம்பக்கல் ஒளித்திருந்தால் நம்மிடத்து அவனுக்கிருக்கும் அன்பின் தன்மையெல்லாம் காண்பாய்; மனக் கவலை ஒழிக" என்றருளிச் செய்து மறைந்தருளினார்.

பொழுது விடிந்ததும் முனிவர் திருமுகலியில் மூழ்கிப் பெருமானது அருளிப்பாட்டை நினைத்தபடி திருக்காளத்தி மலையேறி இறைவனைப் பூசித்துப் பின்புறத்தில் ஒளித்திருந்தார். வேட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாடுவதற்குச் சென்ற திண்ணனார் இறைச்சியும் திருமஞ்சனமும் புதுமலரும் கொண்டு விரைவாகத் திரும்பினார். திரும்பி வரும்பொழுது அவர் முன்பு நேர்ந்த பல சகுனங்களும் தீங்கு குறித்துக் காட்டின. திருக்காளத்தியப்பரை அணைந்தபோது அவர் தமது சிவலிங்கத் திருமேனியின் வலத்திருக் கண்ணில் உதிரம் பாயக் காட்டியிருந்தனர். இதனைத் தூரத்திற் கண்ட திண்ணனார் விரைந்தோடி வந்து, பதைபதைத்து வீழ்ந்தார்; பின் எழுந்தார் ; சென்று இரத்தத்தைத் துடைத்தார். அஃது ஒழுகுவது ஒழியவில்லை. '' இதனைச் செய்தவர் யாவர்?'' என்று கூறி, எங்குந் தேடியும் வேடரையாதல் விலங்குகளையாதல் காணவில்லை. திரும்பி வந்து துன்பமிகுதியினாலே சுவாமியினுடைய திருவடிகளைப் பற்றிக் கட்டிக்கொண்டு கதறினார்.

'' என்ன செய்தால் இது தீருமோ? வேடர்களது அம்புப் புண்களைத் தீர்க்கும் பச்சிலை மருந்துகளை இம்மலையிலே தேடிக்கொண்டு வருவேன் '' என்று சொல்லிப் போனார். பச்சிலைகளைப் பறித்துக்கொண்டு விரைந்து திரும்பினார். அவ்விலைகளைப் பிழிந்து தேவரது கண்ணில் வார்த்தார். திருக்காளத்திக் கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடாது இழியக் கண்டு, '' இன்று இதற்கு இனிச் செய்வதென்னே ? '' என்று எண்ணிப் பார்த்தார். '' உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊனே '' என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. '' இனி என் கண்ணை அம்பினாலே தோண்டி அப்பினால் அது எந்தையார் கண்ணுக்கு மருந்தாகிப் புண்ணீர் நிற்கக் கூடும் '' என்று எண்ணினார். மகிழ்ந்து எழுகின்ற உள்ளத்தோடு திருமுன்னில் இருந்து கொண்டு தமது கண்ணை அம்பினால் ஊன்றித் தோண்டி எடுத்துக் கையிலே வாங்கி எம்பெருமான் கண்ணில் அப்பினார். குருதி வராமல் நின்றது கண்டு குதித்தார் ; தோள்கொட்டினார் ; கூத்தாடினார். '' நான் செய்த செய்கை மிக நன்று '' என்று நகைத்துக் களிப்பினாலே உன்மத்தர் போலாயினார்.

திண்ணனாரின் பேரன்பைப் பின்னும் சிவகோசரியாருக்குக் காட்டுதற்காகத் திருக்காளத்தியப்பர் தமது இடக்கண்ணிலும் உதிரம் பாயப் பண்ணினார். அதனைக் கண்ணப்பர் கண்டனர். '' ஓ ! கெட்டேன் ; எனது நாயகரது ஒரு கண் குருதி நிற்க, மற்றைக் கண் குருதி பொங்கியது ; இதற்கு யான் அஞ்சேன் ; மருந்து கை கண்டேன். எனக்கு இன்னும் ஒரு கண் உண்டு ; அதனையுந் தோண்டி அப்பி இந்நோயை ஒழிப்பேன் '' என்று துணிந்தார்.

காளத்திநாதரது கண்ணிலே தமது கண்ணைத் தோண்டி அப்பும்போது, அவருடைய கண் இவ்விடத்திலிருக்கின்றது என்று நேர்பாடு காணும் பொருட்டு, அவரது கண்ணிலே தமது இடச் செருப்புக் காலையூன்றிக் கொண்டார். உள் நிறைந்த விருப்பத்தோடும் ஒப்பற்ற பத்தி கொண்டு திண்ணனார் தமது இடக் கண்ணிலே ஊன்றினார்.

தேவதேவர் இதனைக் கண்டு தரித்திலர். தம்முடைய அருமைத் திருவாய் மலரைத் திறந்து, '' நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, எம் அன்புடைத் தோன்றல், நில்லு கண்ணப்ப '' என்று அருளிச் செய்ய, அவர்தம் திருமேனியில் முளைத்து எழுந்த கை கண்ணப்பனாரது திருக்கையினை அம்புடன் பிடித்துக் கொண்டது.

கண்ணப்பர் தமது கண்ணைத் தோண்டித் தேவர் கண்ணில் அப்பிய காலத்தும், அவர் ஊட்டிய ஊனமுதத்தை உவந்து கொண்டருளிய ஐயராகிய காளத்திநாதர் அவர் மற்றைக் கண்ணைத் தோண்டும் கையைத் தோண்டும் முன்னே பொருந்திப் பிடித்த காலத்தும், ஞானப் பெருமுனிவராகிய சிவகோசரியார் நடந்தவற்றைக் கண்ணாரக் கண்டார்.

கண்ணப்பரது கையைக் காளத்தியப்பர் தம் கையாற் பிடித்துக்கொண்டு '' மாறில்லாய் ! என் வலத்தில் நிற்க '' என்று நிலைபெற்ற பெரிய திருவருளினைச் செய்தனர்.

**இதனிலும் மேலாய பேறும் உண்டோ!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. தண்டியடிகள் நாயனார்

திருவாரூரிலே தண்டியடிகள் நாயனார் என்னொருவர் இருந்தார். அவர் பிறவிக்குருடர். ஆயினும் தன் மனத்தினாலே சிவபெருமானை வழிபட்டு வந்தார். அத்துடன் எப்பொழுதுந் திருவைந்தெழுத்தை ஓதியும் வந்தார்.

இப்படியிருக்கு நாளிலே அத்திருப்பதியிலுள்ள திருக்கோயிலுக்கு மேற்கேயுள்ள திருக்குளம், பக்கமெங்குஞ் சமணர்களுடைய பாழிகளாகி, இடத்தாற் குறைவடைந்திருந்தது. இதையறிந்த தண்டியடிகள் குளம் பெருக்கத் தோண்டத் துணிந்தார்.

திருக்குளத்தினுள்ளே தோண்டுமிடத்திலும், கரையிலுந் தறிகள் நட்டு, அவற்றைக் கயிற்றால் இணைத்தார். கல்லிய மண்ணைக் கயிற்றைத் தடவிப் போய்க் கரையிலே போடுவார்.

இவ்வாறு நாடோறும் ஆர்வத்துடன் அடிகள் குளம் கல்லுதலைக்கண்ட சமணர்களுக்கு மனம் பொறுக்கவில்லை. அவரை அணுகி, "மண்ணைக் கல்லுதலினால் உயிர்கள் இறந்துபோம்; அவற்றை வருத்த வேண்டாம்" என்றார்கள். தண்டியடிகள் அதற்கு, "அறிவிலிகாள், நம் பெருமானுக்கு நான் செய்யுமித் திருத்தொண்டு தவறில்லாத நல்ல தருமம் என்பது உங்களுக்கு அறிய வருமோ?" என்றார். அது கேட்ட சமணர், "நாம் பேசும் அறத்தை நீ கேட்டாயில்லை; கண்ணேயன்றிக் காதினையும் இழந்தனையோ?" என்று பதிலுரைத்தனர். இவ்வுரை கேட்டு மனம் புழுங்கிய அடிகளார் முப்புரமெரித்த முழுமுதற் கடவுளின் திருவடிகளைவிடப் பிறிதொன்றும் நான் காணேன்; அது அறிதற்கு நீவிர் யார்? என் கண்கள் பார்வை பெற நான் செய்தால் நீவிர் யாது செய்வீர்?" என்று வினவினார்.

சமணர்கள் அது கேட்டு, "உன் தெய்வத்தின் அருளால் நீ கண்களைப் பெற்றால் நாம் இவ்வூரை விட்டகல்வோம்" என்று சொல்லி அவருடைய மண்வெட்டியைப் பறித்துக் குறித் தறிகளையும் பிடுங்கி எறிந்தனர்.

சமணர் செய்கையால் மனம் நொந்த அடிகளார், தம்முடைய திருமடத்திற்குச் சென்று மனம் வருந்தியபடி நித்திரை செய்தார்.

நித்திரைசெய்யும்பொழுது பரமசிவன் கனவிலே தோன்றி, "உன் நெஞ்சினுள்ள கவலையை ஒழி. உன்னுடைய கண்கள் காண அருள் செய்வோம்" என்றருளிச் செய்தார். அன்றிரவே, பரமசிவன் அரசன் பாலும் கனவிலே தோன்றி "தண்டி நமக்குக் குளந்தோண்டக் கண்ட சமணர்கள் மனம் பொறாது அவனுக்குக் கொடுமை செய்ய, அவன் மனம் துன்புற்றான். அவனிடம் நீ போய் அவன் கருத்தை முடிப்பாய்" என்று கட்டளையிட்டு மறைந்தருளினார்.

பொழுது புலர்ந்ததும் அரசன் அடிகளாரிடஞ் சென்று தான் கண்ட கனவைச் சொல்ல, அடிகளும் நிகழ்ந்தவற்றை அரசனிடஞ் சொன்னார்.

அப்பொழுது அரசன் சமணர்களை அங்கே அழைத்துக் கேட்க, அவர்கள் தாம் சொன்னபடி நடக்க உடன்பட்டார்கள். அதுகண்டு அடிகள் முன் செல்ல, அரசன் பின்சென்று திருக்குளக் கரையிலே நின்று, தண்டியைப் பார்த்து, "மெய்த் தவத்தீர், திருவருளினாலே நீர் கண்பெறுதலைக் காட்டும்" என்றான். தண்டியடிகள் "எளியேன் சிவபெருமானுக்கு இசைந்த தொண்டனானால், இம்மன்னவன் எதிரே இப்பொழுது என் கண்கள் விளங்கும்" என்று திருவைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெழுத்தை உச்சரித்து மணிநீர் வாவியில் மூழ்கினார். உடனே அவர் கண்பெற்றெழுந்தார். சமணர்கள் கண்ணிழந்து தடுமாறினார்கள்.

கண்ணிழந்த சமணர் விழுந்தும், நிலைதளர்ந்தும், வழிதடுமாறியும் கலங்கினர். அவர்கள் செய்து கொண்ட சபதத்தின்படியே வேந்தன் அவர்களைத் திருவாரூரினின்றும் அகற்றுவித்தான்.

பின்பு திருக்குளத்திற்குக் கரைகட்டி, மனமகிழ்ந்து, அடிகளாரை வணங்கிப் போயினான். அடிகளாரும் எடுத்த திருப்பணியை நிறைவு செய்து, பலகாலந் திருத்தொண்டுகள் செய்து கொண்டிருந்து, பேரின்பப் பெருவாழ்வெய்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. காரைக்காலம்மையார்

சோழ மண்டலத்திலே காரைக்கால் என்னும் ஊரிலே வைசியர் குலத்திலே தனதத்தன் என்னும் ஒருவன் இருந்தான். அவனுக்குப் புனிதவதியார் என்ற ஒரு புதல்வி பிறந்தார். தனதத்தன் புனிதவதியாரைப் பரமதத்தன் என்பவனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்து, அவர்களைத் தன்வீட்டுக்கு அருகிலே ஒரு வீடுகட்டி அதிலே இருத்தினான்.

பரமதத்தன் தன் செல்வத்தை விருத்தி செய்தான். புனிதவதியார் பரமசிவனிடத்திலே பத்திகொண்டு, சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து இல்லறத்தை இனிது நடாத்தி வந்தார்.

ஒருநாள் பரமதத்தனிடம் அலுவலாக வந்தவர்கள் இரண்டு மாங்கனிகளைக் காணிக்கையாகக் கொடுத்தனர். அவன் அவைகளை மனைவியாரிடம் அனுப்பி வைத்தான். புனிதவதியார் பசியினால் வருந்தி வந்த சிவனடியார் ஒருவருக்குச் சோறுபடைத்து, கறியமுது பாகம் பண்ணப்படாமையால், அம்மாங்கனிகள் இரண்டனுள் ஒன்றினையும் வெட்டிப் படைத்து, அவ்வடியவரைத் திருவமுது செய்வித்தார்.

பரமதத்தன் நண்பகலிலே வீட்டுக்கு வந்து உணவருந்தும்பொழுது, மனைவியார் எஞ்சியிருந்த மாங்கனியைக் கொண்டுவந்து வெட்டிப் படைத்தார். அக்கனியையுண்டு அதன் இனிய சுவையினாலே திருத்தியடையாமல் அவன் " மற்றைக் கனியையும் கொண்டுவந்து வைக்க " என்றான். புனிதவதியார் அதனைக் கொண்டுவரச் செல்பவர்போல உள்ளே போய் நின்று மனமுடைந்தார். இறைவனை வேண்டினார். மெய்யன்பர்களுக்கு உற்றவிடத்துதவும் பரமசிவனுடைய கருணையினால் மாங்கனியொன்று அவர் கையில் வந்திருந்தது.

அக்கனியையுண்ட பரமதத்தன், அதன் சுவையும் இனிமையும் வேறாக இருத்தலை உணர்ந்து, " இதனை நீ எங்கே பெற்றாய் ? " என்றான். புனிதவதியார் நிகழ்ந்ததை உள்ளபடியே தன் கணவனுக்குக் கூறினார். அதனை நம்பாத பரமதத்தன், " இந்தக் கனி சிவபிரானுடைய திருவருளினாலே கிடைத்ததாயின், இன்னும் ஒரு கனி அவருடைய திருவருளினாலே வருவித்துத் தா " என்று கூறினான்.

புனிதவதியார் அவ்விடம் விட்டகன்று, பரமசிவனைத் துதித்து, " இன்னும் ஒரு கனி தந்தருளீராயின் என்னுரை பொய்யாம் " என்று விண்ணப்பிக்கச் சிவனருளால் இன்னுமொரு மாங்கனி அவரிடம் வந்தெய்தியது. அதனை அவர் தம் கணவன் கையிற் கொடுத்தலும் அவன் மிக வியப்படைந்து வாங்கினான். வாங்கியதும் அவன் கையினின்றும் அது மறைந்தது. மிகுந்த பயமடைந்து மனந்தடுமாறிய பரமதத்தன், புனிதவதியாரைத் தெய்வமென நினைந்து அவரைப் பிரிந்து வாழ எண்ணினான்.

சில நாட் கழிய அவன் பாண்டி நாட்டிலுள்ள ஒரு நகரத்தையடைந்தான். அங்கே ஒரு வைசியருடைய மகளைத் திருமணஞ் செய்து பெருஞ் செல்வத்தோடு வாழ்ந்திருந்தான். அவனுக்கு அம்மனைவி வயிற்றிலே பிறந்த பெண் குழந்தைக்குத் தான் கூடிவாழ்தற்கு அஞ்சி நீங்கிய மனைவிக்குரிய புனிதவதியார் என்னும் பெயரையே இட்டான்.

இங்ஙனம் பரமதத்தன் அங்கே இருக்குங் காலத்தில், புனிதவதியாருடைய சுற்றத்தார்கள் பரமதத்தன் பாண்டி நாட்டிலே இனிது வாழ்கின்றான் என்று கேள்விப்பட்டார்கள். அவர்கள். அவனிடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் இடத்தே புனிதவதியாரைக் கொண்டுபோய் விடுவது என்று முடிவு செய்தார்கள்.

சிவிகையிலே புனிதவதியாரை ஏற்றிச் சுற்றத்தார் புடை சூழப் பாண்டி நாடு சேர்ந்து, அச்செய்கையை அவனுக்கு ஆள் அனுப்பித் தெரிவித்தார்கள். அவன் அதனை அறிந்து அச்சங்கொண்டு தன்னுடைய இரண்டாம் மனைவியோடும், மகளோடும் புனிதவதியாரிடத்திற்கு வந்தான். ''யான் உமதருளால் இங்கே வாழ்கின்றேன் ; இவ்விளங் குழவிக்கு உமது பெயரையே இட்டேன் '' என்று கூறி அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

கணவன் தன்னை வணங்கக்கண்ட புனிதவதியார், தஞ்சுற்றத்தார்பால் அச்சமோடொதுங்கி நின்றார். உறவினர் '' நீ உன் மனைவியை வணங்குவதென்னை ? '' என வினவப் பரமதத்தன் நிகழ்ந்த வரலாற்றைக்கூறி, '' நீங்களும் இவரை வணங்குங்கள் '' என்றான். அதுகேட்ட சுற்றத்தார்கள், '' இது என்ன ஆச்சரியம் ! '' என்று திகைத்து நின்றார்கள்.

புனிதவதியார் கணவன் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, '' இவருடைய கொள்கை இது ; இனி இவருக்காகத் தாங்கிய அழகு பொருந்திய இத் தசைப் பொதியை நீக்கித், தேவரீரைச் சூழ்ந்து நின்று துதிக்கின்ற பேய்வடிவை அடியேனுக்குத் தந்தருளல் வேண்டும் '' என்று வேண்டினார். அப்பொழுதே இறைவன் திருவருளினாலே, உடம்பிலுள்ள ஊன் முழுவதையும் உதறி எற்புடம்பாக, மண்ணும், விண்ணும் வணங்கும் பேய் வடிவமானார். சுற்றத்தார்கள் அவரை வணங்கி அகன்று போயினர்.

சிவபெருமானுடைய திருவருளினாலே 'அற்புதத் திருவந்தாதி' 'திருவிரட்டை மணிமாலை' என்பவற்றைப் பாடித்திருக்கைலைக்குச் செல்ல விரும்பினார். மனத்திலும் பார்க்க மிகுந்த வேகத் தோடு வெள்ளிமால் வரையின் பக்கத்தையடைந்தார். அங்கே சூலபாணியனார் எழுந்தருளுவதால், காலினால் நடப்பதைத் தவிர்த்துத் தலையினால் நடந்து மலையிலேறிச் சென்றார் அப்போது இறைவனின் இடப்பாகத்தமர்ந்த இமயவல்லியின் திருக்கண்ணோக்கு அம்மையார் பால் விழுந்தது. அதிசயம் மிக்க உமையம்மை நம்பெருமானை நோக்கி, '' எம்பெருமானே, தலையினால் நடந்து இங்கே வரும் எலும்பு யாக்கையுடைய வரது அன்பு என்னே ! '' என்று கூறப் பெருமானார், '' வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண், உமையே; இப் பெருமைசேர் வடிவம் இவள் வேண்டிப் பெற்றனள் '' என்றார். அப்போது அங்கே வந்தணைந்த புனிதவதியாரை நோக்கி இறைவன் '' அம்மையே '' என்னும் செம்மை சேர்ந்த ஒரு மொழியால் உலகமுய்ய அருளிச் செய்தார்.

இறைவன் '' அம்மையே '' என்றலும் '' அப்பா '' என்று கூறிய புனிதவதியார், அவருடைய செம்பொற் பாதம் பணிந்து வீழ்ந்தெழுந்தார். அவரை நோக்கிப் பரமசிவன் '' நம்பால் நீ வேண்டுவதுயாது ? '' என்று கேட்டார். அதற்கு அம்மையார் இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்னும் '' பிறவாமை வேண்டும் ; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும். இன்னும் வேண்டும், அறவா ! நீ ஆடும்போது உன்னடியின் கீழ் நான் பாடி மகிழ்ந்திருத்தல் வேண்டும் '' என வேண்டி நின்றார்.

அப்போது சிவபெருமான் '' சிறந்த தென்றிசையில் உள்ள திருவாலங்காட்டிலே நாம் ஆடும் திருக்கூத்தைக் கண்டு நீ பேரானந்தமடைந்து எப்போதும் எம்மைப் பாடிக் கொண்டிரு '' என்று அருளிச் செய்தார்.

அது கேட்ட அம்மையார் எம்பெருமானை வணங்கி விடை பெற்றுக்கொண்டு திருவாலங்காடு என்னும் நற்பதியைத் தலையினாலே நடந்து சென்றடைந்தார். அங்கே அண்டம் அதிரும்படி இறைவன் ஆடுகின்ற கோலத்தைக் கண்களிப்பக் கண்டு '' கொங்கை திரங்கி '' என்றெழுந்த திருப்பதிகத்தையும் '' எட்டியிலவமீகை '' என்னும் திருப்பதிகத்தையும் பாடியருளினார்.

அவர் இறைவனுடைய தூக்கிய திருவடியின் கீழே சிவானந்தத்தை என்றும் அனுபவித்துக்கொண்டு இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. பட்டினத்தார்

காவிரிப் பூம்பட்டினத்திலே சிவநேசர் என்றொரு பெருவணிகர் இருந்தார். போதிய செல்வம் இருந்தும் அவருக்குப் பிள்ளைச் செல்வம் இல்லாத குறை இருந்தது. இறைவனைக் குறையிரந்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றார். குழந்தைக்குத் திருவெண்காடர் என்று பெயரிட்டார். காவிரிப் பூம் பட்டினத்திலே பிறந்து வாழ்ந்த காரணத்தால் திருவெண்காடருக்குப் பட்டினத்துப் பிள்ளையார் என்ற பெயரும் வழங்கலாயிற்று.

ஐந்துவயதுச் சிறுவனாய் இருக்கும் திருவெண்காடர் தம் தந்தையை இழந்தார். தாயாராகிய ஞானகலை என்ற சீமாட்டியின் காப்பில் வளர்ந்து வந்தார். கலைகளை முறைப்படி கற்றார். ஆயினும். அவருடைய மனம் இறைவன் திருவடிகளையே நாடிற்று. தனக்கொரு ஞானாசிரியனைத் தரவேண்டும் என்று இறைவனை வேண்டினார். கனவிலே திருவெண்காட்டிற்குச் செல்லும்படி கட்டளை கிடைத்தது. கட்டளைப்படி அங்குச் சென்றார்.

அங்கே ஓரந்தணர் குருமூர்த்தியாய்த் தோன்றி திருவெண்காடருக்குத் தீட்சை செய்து; கையிலே ஒரு சம்புடத்தையும் கொடுத்தார். அதற்குள்ளிருந்த சிவலிங்கத்தையும் பிள்ளையாரையும் திருவெண்காடர் முறைப்படி பூசித்து வந்தார்.

மணப்பருவம் வந்தெய்தியதும் அவர் சிவகலை என்னும் பெண்ணினல்லாளை மணந்து கொண்டார். நெடுங்காலமாகியும் பிள்ளைப் பேறில்லாமை கண்டு வருந்தினார். திரு விடைமருதூர்ப் பெருமானிடம் பிள்ளைப்பேறு வேண்டி விரதமிருந்தார்.

இது இவ்வாறாகச் சிவசருமர் என்றொரு வேதியர் வறுமையினாலே வாடினார். தாம் செய்யுஞ் சிவபூசைக்கே பொருளில்லாது வருந்தினார். இறைவன் ஆணைப்படி மருதவாணர் கோயில் வில்வ மரத்தடியிற் கிடந்த ஒரு குழந்தையைப் பட்டினத்தாரிடம் கொடுத்துக் குழந்தையின் நிறைகொண்ட பொன் பெற்றுச் சென்றார்.

பட்டினத்தார் குழந்தைக்கு மருதவாணர் எனப் பெயரிட்டு வளர்த்தார். மருதவாணர் வயது வந்ததுங் குலமுறைப்படி வியாபாரஞ் செய்தார். ஒருநாள் ஒரு பெட்டியைத் தாயாரிடங் கொடுத்து மறைந்தார். திருவெண்காடர் வீட்டிற்கு வந்ததும் மனைவியார் மகன் தந்த பெட்டியை அவரிடங் கொடுத்தார். பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது ஒரு காதற்ற ஊசியும், "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்ற வாசகம் எழுதப்பட்ட ஓலை நறுக்கொன்றும் இருந்ததலைக் கண்டார். இவற்றைக் கண்ட பட்டினத்தாருக்குச் சஞ்சலம் நீங்கி மெய்ஞானம் பிறந்தது.

ஞானங் கைவரப்பெற்ற பட்டினத்தார் துறவு பூண்டார். அவர் ஊர் ஊராகத் திரிந்து பிச்சை யெடுத்துண்பதைச் சுற்றத்தார் வெறுத்தனர். சகோதரியார் நஞ்சுகலந்த அப்பத்தை அவருக்கு உண்ணக் கொடுத்தார். ஞானத்தால்; நஞ்சுகலந்தமையை உணர்ந்தார் பட்டினத்தார்.

"தன்னப்பந் தன்னைச் சுடும் : ஓட்டப்பம் வீட்டைச் சுடும்"

என்று சொல்லி அப்பத்தை ஓட்டின்மீது வீசினார். உடனே வீடு தீப்பற்றி எரிந்தது. மக்கள் இதனைக் கண்டு அவர் மேற் பத்தி கொண்டனர்.

அவருடைய தாயார் இறந்தபொழுது அவருடலைப் பச்சை வாழைத்தண்டிலே வைத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையில்
அன்னையிட்டதீ அடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூழ்க மூழ்கவே "

என்று பாடினார். உடனே சிதை தீப் பற்றி எரிந்தது.

வடநாட்டிலே தலயாத்திரை சென்ற பொழுது, ஒருநாள் ஒரு பிள்ளையார் கோவிலிலே நிட்டையிலிருந்தார். இரவிலே அரமனையிற் களவாடிய சில திருடர் பிள்ளையாருக்குக் காணிக்கையாக ஒரு மணிமாலையை எறிந்துவிட்டுச் சென்றனர். மாலை பட்டினத்தார் கழுத்தில் விழுந்தது. விடிந்ததும் திருடரைத் தேடிச்சென்ற காவலாளர், பட்டினத்தார் கழுத்தில் மாலை மிளிர்வதைக் கண்டு, அவரை அரசனிடங்கொண்டு சென்றனர். அரசன் அவரைக் கழுவிலேற்றும்படி கட்டளையிட்டான். கழுமரத்தடியில், " என்செயலால் ஆவது யாதொன்றுமில்லை " என்று தொடங்கும் பாடலைப் பாடினார். உடனே கழுமரந் தீப்பற்றி எரிந்தது.

கடைசிக் காலத்தில் அடிகளார் திருவொற்றியூரிலே தங்கியிருந்தார். அங்கே மாடுமேய்க்கும் பிள்ளைகளோடு கூடி விளையாடுவார். ஒருநாள் ஒரு குழியிலே இறங்கிக்கொண்டு பிள்ளைகளைக் குழியை மூடச் சொன்னார். பின்பு பிள்ளைகள் குழியைத் திறந்து பார்க்கையில், ஆளைக் காணோது, அவ்விடத்தில் சிவலிங்கம் மட்டும் இருக்கக் கண்டனர். இச்சிவலிங்கம் இன்றுந் திருவொற்றியூர்க் கடற் கரையில் இருக்கிறது.



9—13331

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. பட்டினத்தார் பாடல்

(1)

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி
யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற
போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்
திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத்
தோதவுங் கற்பியுமே.

சிலேட்டுமம் மேலிட்டு, கண்கள் உள்ளடங்கி, அறிவு கெட்டு, (மெய்யென்று நம்பியிருந்த) உடம்பானது பொய்யென்று சொல்லும்படியான நிலைமையினை நான் அடைந்தபோது, திருவொற்றியூருடைய பெருமானே! யான் உம்மிடத்து, ஒரேயொரு காரியந்தான் வேண்டுகிறேன். தேவரீர்! நான் திருநீறுபூசி, கைகளைக் கூப்பி, திருவைந்தெழுத்தை உச்சரிக்கவும் செய்வித்தருளும்.

ஐ-சளி, சிலேட்டுமம். மெய் - உடம்பு.

(2)

கொல்லாமற் கொன்றதைத் தின்
னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங் காமற்
கனவிலும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளா
மற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்
பர தேசிகனே.

சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! (ஒருயிரையுங்) கொல்லாமல், கொன்றவுயிரின் ஊனை உண்ணாமல், வஞ்சகம் புறங்கூறல் களவெடுத்தல் ஆகியவற்றைக் கற்றுக்கொள்ளாமல், வஞ்சகருடன் கூடாமல், கனவிற்றானும் பொய் சொல்லாமல், பிறர் சொல்லும் பொய்யைக் கேளாமல், மயில்போலுஞ் சாயையுடைய பெண்களின் வலையிற் சிக்கிக்கொள்ளாமல் இருக்கத் தேவரீர் திருவருட்செல்வந் தந்தருள வேண்டும்.

குத்திரம் - வஞ்சகம். கைதவர் - வஞ்சகர். சொற்கள் - இங்கே பிறர் கூறும் பொய்யுரைகளைக் குறிக்கின்றது. தோகை - மயிலின் தோகை ; இங்கே மயிலின் சாயலுடைய பெண்ணிற்குஆகுபெயர். தேசிகன் - ஆசாரியமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. மார்க்கண்டேயர்

பல்லாண்டுகளுக்கு முன்பு மிருகண்டு என்றொரு முனிவர் கடகம் என்னும் நகரிலே வாழ்ந்து வந்தார். தகுந்த காலத்தையடைந்ததும் அவர் மருத்துவதி என்னும் மங்கையை மணந்து இல்லறம் நடத்தினார். ஆண்டுபல சென்றும் மக்கட் பேறின்மையால் வருந்தினார். காசியை அடைந்து சிவபெருமானை முறைப்படி வழிப்பட்டார். மக்கட் பேற்றை விரும்பி ஓராண்டு கடுந்தவம் புரிந்தார்.

அப்பொழுது சிவபெருமான் காட்சியளித்து, 'அன்பனே, நீ எதனை விரும்பினாய்? விரும்பியதைக் கேள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். முனிவர் ''எம்பெருமானே, அடியேனுக்கு மக்கட் பேற்றைத் தந்தருளுக'' என்று வேண்டினார். சிவபெருமான் புன்முறுவல் புரிந்து ''கெட்ட இயல்புடையவனாய், அறிவில்லாதவனாய், உறுப்புக் குறைந்தவனாய், வயது நூறினும் நோயால் வருந்துபவனுமான ஒரு மகனை விரும்புகிறாயா? அல்லது அழகுடையவனாய், உடல்நலம் நிறைந்தவனாய், நோயற்றவனாய், அறிவுமிக்கவனாய், நம்மிடத்து அன்பு மிக்கவனாய், வயது பதினாறு மட்டும் உடையவனாய் உள்ள ஒரு மகனை விரும்புகிறாயா? உனது விருப்பம் யாது? கூறு'' என்று கேட்டார். முனிவர் இறைவன் கூறியவற்றை நன்கு ஆராய்ந்தார். இறைவனைப் பார்த்து, ''எம்பெருமானே! வயது குறைவாக இருப்பினும் பழுதற்றவனாய், அறிவுமிக்கவனாய், உம்மிடத்து அன்புள்ளவனாயுள்ள ஒரு மகனையே தந்தருள வேண்டும்'' என்று வேண்டினார். இறைவன், ''உனக்கு நன்மகனைத் தந்தோம்'' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். முனிவர் மனமகிழ்ந்து, சிவபெருமானைப் போற்றிக்கொண்டு காசியிலேயே இருந்தார்.

நாளடைவில் மருத்துவதி கருப்பவதியானாள். ஒரு பங்குனித் திங்களிலே ரேவதி நாளிலே அவள் ஓராண் குழந்தையைப் பெற்றாள். முனிவர் மனமகிழ்ந்தார். கங்கையில் நீராடி, அந்தணர் முதலியோர்கட்குத் தானங்கொடுத்தார். நான்முகன் தோன்றிக் குழந்தைக்கு 'மார்க்கண்டேயர்' என்று பெயரிட்டான்.

குழந்தை மறுவற்ற திங்கள்போல் வளர்ந்து வந்தது. முனிவர் குழந்தைக்கு ஐந்தாம் வயதிலே பூணூற் சடங்கு செய்வித்து, வேதம் முதலிய கலைகள் யாவற்றையும் ஓதுவித்தார்.

மார்க்கண்டேயரும் சிவபெருமானை முழுமுதற் கடவுளென உணர்ந்தார். அவருடைய திருவடிகளையே புகலிடமாகக் கொண்டார். பிரமசரியத்தை வழுவாது கடைப்பிடித்தார்.

இங்ஙனம் ஒழுகிவரும் நாளில் அவருக்கு வயது பதினாறு நிரம்பியது. அதனை அறிந்த அவருடைய பெற்றோர் அவரை நோக்கித் தனித்தனியே துன்பப்பட்டனர். அது கண்ட மார்க்கண்டேயர் மனம் மிகவருந்தினார். ''நிகழ்ந்தது யாது?'' என்று பெற்றோரை வற்புறுத்திக் கேட்டார். தந்தையார் நிகழ்ந்தவற்றைச் சொன்னார். மார்க்கண்டேயர், ''நீங்கள் இதற்கு வருந்தவேண்டாம்; நான் எல்லாம்வல்ல இறைவனைப் பூசித்துக் கூற்றுவனை வென்று வருவேன்'' என்று பெற்றோருக்கு ஆறுதல் கூறினார். அவர்களும் ஒருவாறு மனந்தேறினர்.

பின்பு மார்க்கண்டேயர் திருக்கோயிலுக்குப் போய் இறைவனை வணங்கினார். பின் தென்திசையில் ஓரிடத்திற் சிவலிங்கம் அமைத்தார். பலநாட் பூசித்து அருந்தவம் புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புவலைப்படுவோராகிய எம்பெருமான், மார்க்கண்டேயர் முன் வெளிப்பட்டு “அன்பனே! நீ விரும்பியது யாது? விளம்புவாய்” என்று திருவாய் மலர்ந்தருளினார். “பரமபிதாவே, நான் யமன் கைப்படாது அருள் புரிய வேண்டும்” என்று மார்க்கண்டேயர் வேண்டினார். எம்பெருமானும் “அஞ்சாதே” என்று திருவாய்மலர்ந்தருளி, தமது திருவடிகளை மார்க்கண்டேயரது தலை மீது சூட்டி, மறைந்தருளினார்.

இது இவ்வாறாக மார்க்கண்டேய முனிவருக்குப் பதினாறு வயதெல்லை சென்றது. அப்பொழுது எமதூதன் தோன்றிச் சிவபூசையைக் கண்டஞ்சிச் சென்றுவிட்டான். உடனே இயமன் மிகக் கோபங்கொண்டு பெருமூச்செறிந்து, தனது அமைச்சனாகிய காலனை விளித்துக் காசியிலுள்ள மார்க்கண்டேயன் என்னும் பிராமணனை இங்கே கொண்டு வரக்கடவாய்” எனப் பணித்தான். காலன் காசியையடைந்து, முனிவரைக் கண்டு வணங்கி அவரை இயமபுரத்துக்கு வரும்படி அழைத்தான். அவர் மறுக்கவே அவன் திரும்பிச் சென்று இயமனை வணங்கி நிகழ்ந்தவற்றைச் சொன்னான்.

அப்பொழுது இயமன் உள்ளம் பதைபதைக்க வெகுண்டு, எருமைமேல் ஏறிக்கொண்டு பாசமும், தண்டமும், சூலமும், மழுவும் கையிலேந்தி, மார்க்கண்டேய முனிவரை எதிர்த்து, “மைந்தனே! நீ யாது நினைந்தாய்! முன்னை ஊழி முறைமையையும் சிவபெருமானது திருவாக்கையும் கடக்கலாமா? இறப்புப் பிறப்பென்பனவற்றை யாவரும் பெறுவர். நான் உன்னுயிரை இன்று கொண்டன்றி மீளமாட்டேன். நீ துன்பங் கொள்ளாதே. சிவனடியாராயினும் முடிவு வந்தெய்தில் அவரைத் தென்புலத்திற் சேர்ப்பேன். இனி நீ என்பின் வருவாயாக” என்றான்.

மார்க்கண்டேயர் அது கேட்டு, “இயமனே கேள். முடிவென்பது எம்பெருமானுடைய அடியார்களுக்கு இல்லை. உண்டாயினும் உன்னுலகத்துக்கு வாரார். திருக்கைலாச மலைக்கே போவார்கள். அவர்களுடைய தன்மையை யாவர் சொல்ல வல்லார். அவர்களுடைய வன்மையை நீ சிறிதும் அறிந்திலை. உலகத்தாரைப் போல அவர்களையும் நினைத்தாய். என்னுயிருக்கும் தீங்கு நினைத்தாய். மேல் நிகழ்வதனை அறிகின்றிலை. மூடனே, நீ இங்கே நிற்காமற் போ” என்றார்.

மார்க்கண்டேயர் இவ்வாறு கூறக் கேட்ட இயமன் கோபங்கொண்டு, ஆரவாரித்து, நீலமலைபோல அவர்முன் சென்றான். பாசத்தை வீசி இழுத்தான். மார்க்கண்டேயர் எம்பெருமானைத் துதித்துக்கொண்டு நின்றார். அவருக்குப் பாசம் ஒரு துன்பமுஞ் செய்யவில்லை. அப்பொழுது எம்பெருமான் தோன்றி “நீ அஞ்சாதே” என்று, திருவாய் மலர்ந்துகொண்டு, தமது இடது திருவடியால் இயமனைச் சிறிது உதைத்தார். உடனே இயமன் பூமியில் விழுந்திறந்தான்.

எம்பெருமான் தோத்திரஞ் செய்துகொண்டிருந்த மார்க்கண்டேயரைப் பார்த்து “மகனே, நாம் உனக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம்” என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார்.

மார்க்கண்டேயர் உடனே கோயிலினுட் புகுந்து, வணங்கிக்கொண்டு, வீடு திரும்பினார். அவருடைய பெற்றோர் துன்பமகன்று பூரிப்படைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. சிவபெருமான் சோதிப்பிழம்பானமை

முன்னொரு காலத்திலே பிரமன், " நான் தான் உலகங்களையும், உயிர்களையும் படைப்பவன். என்னை ஒழிய வேறொரு கடவுளும் இல்லை. நான் உறங்கும்பொழுது உலகங்களும் உயிர்களும் அழியும். நான் விழித்தெழுந்ததுந் திரும்பவும் உலகங்களையும் உயிர்களையும் படைப்பேன். ஆகவே நானே எல்லோருக்கும் மேலான பரம்பொருள் " என்று நினைந்து செருக்குற்ருன்.

இவ்வாறு செருக்கடைந்த பிரமன் பாற்கடலிற் பள்ளிகொள்ளுந் திருமாலிடஞ் சென்ருன். " என் வரவையும் மதியாது நித்திரை செய்கிருய் ; எழும்பு " என்று திருமாலின் மார்பிலே தாக்கி எழுப்பினன்.

திருமால் எழுந்தார். " நீ யார், சொல் " என்று பிரமன் அவரை வினவினன். " மைந்தனே, என்னைத் தெரியாதா ? நான்தான் உனது தந்தை " என்று திருமால் சொன்னர்.

இதைக்கேட்டுப் பிரமன் நகைத்தான். " உனக்கு இன்னும் நித்திரை முறியவில்லைப்போலும் ; அதனுலேதான் இவ்வாறு பேசுகிருய். நீ எனக்குத் தந்தை என்ற செருக்கை விட்டுவிடு. நானே பரம்பொருள் என்பதை அறி. என் மகன் பிருகுவின் சாபத்தால் நீ பத்துப் பிறப்பு எடுத்தாய். உன்னுடைய அந்தப் பத்து உடல்களையும் படைத்ததினுல் என் கைகளும் கன்றிச் சிவந்து விட்டன. இதோ பார் " என்ருன்.

திருமாலுக்குக் கோபம் வந்தது. கைதட்டிச் சிரித்தார். " பரமசிவன் உனது உச்சித் தலையைக் கிள்ளியதும் நீ அஞ்சி விழுந்தாய். அந்தத் தலையை இன்னும் படைத்துக் கொண்டாயில்லை. இப்படிப்பட்ட நீ என்னைப் படைத்ததென்பது நன்ருயிருக்கிறது. நான் செய்த மாயையால் நீ இப்படிப் பேசுகிருய். என்னையின்றி உலகில் எந்தப் பொருளும் உண்டாகுமா ? இந்திரனும் நான் ; நாரணனும் நான் ; மறையும் நான் ; மறைப்பொருளும் நான் ; அந்தப் பரமசிவனும் நான் ; எல்லாம் நான் " என்று பலவற்றைச் சொன்னர்.

இவற்றைக் கேட்ட பிரமன் ' வெறும் பேச்சிற் பயனில்லை. நாம் இருவரும் போர் செய்வோம். நம்மில் வெற்றி கண்டவரே மேம்பட்டவர். போருக்கு எழுதி " என்று சினந்து சொன்னன்.

திருமாலும் அதற்கு உடன்பட்டு எழுந்து எதிர்த்தார்.

இருவருங் கொடிய படைக்கலங்களுடன் கடும் போர் புரிந்தனர். தீப்பொறிகள் பறந்தன. வெம்மை தாங்க முடியாது உயிர்த் தொகுதிகள் அழிந்தன. சமுத்திரங்கள் நீர்வற்றின. இருவரும் நிறுத்தாது தொடர்ந்து போர் செய்தனர்.

இவ்வாறு இருவரும் போர் செய்து கொண்டிருக்கும்பொழுது நாரதமுனிவர் தோன்றிப் பல அறிவுரைகளை அவர்களுக்குக் கூறினர் ; அவற்றைப் பொருட்படுத்தாது போரைத் தொடர்ந்து செய்தனர்.

இவ்வாறு செருக்குற்றுப் போர்புரியும் இருவரையும் செம்மனத்தவராக்கச் சிவபெருமான் திருவுளங் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாசித்திங்கள் தேய்பிறைப் பதின் னான்காவது நாள் நள்ளிரவில் எம்பெருமான் இருவருக்குமிடையில் ஒரு சோதி மலையாகத் தோன்றியருளினார். அது தாங்குதற்கரிய வெப்பமுடையதாக விளங்கிற்று. திருமாலும் பிரமனும் நடு நடுங்கிப் போர்விடுத்துத் தூரத்தே சென்று நின்று அதைப் பார்த்துக்கொண் டிருந்தனர்.

அப்போது "சிறுவர்களே, உங்களுடைய வலிமையைச் சிவபெருமான் காண்பார். இந்த மலையின் முடியையும் அடியையுங் காணுங்கள்" என்று ஒரு விண்வாக்கு எழுந்தது. இதைக்கேட்ட திருமாலுக்கும் பிரமனுக்கும் சினம் நீங்கினுஞ் செருக்கு நீங்கவில்லை. அடிமுடிகளில் ஒன்றை யார் கண்டனரோ அவரே முதற்கடவுளாவர், எனத் துணிந்தனர்.

திருமால் பெரியதொரு பன்றி வடிவங் கொண்டு பூமியை யிடந்து அடியைத் தேடிக் கீழேயுள்ள உலகங்கள் எங்குஞ் சென்றார். அவர் நெடுங்காலந் தேடியும் அடியைக் காணாராயினர். பிரமன் ஒரு அன்னப் பறவையின் வடிவம் எடுத்து முடிதேடி மேலுலகங்கள் எங்குஞ் சென்றான். நெடுங்காலந் தேடியும் முடியை அவன் காணானாயினன்.

திருமால் உடம்பு நொந்து, ஆற்றல் இழந்து, செருக்கும் ஒழிந்து, சோதிக்கு அண்மையில் வந்து ஒடுங்கி நின்றார்.

பிரமனும் அறிவு தடுமாறி, அகந்தை விடுத்து, திருமால் இருக்கும் இடத்தை அடைந்தான்.

இருவருஞ் சிவலிங்கம் அமைத்து முறைப்படி வழிபாடு செய்தனர். அப்பொழுது சிவபெருமான் சோதிக்கு அண்மையிலே தோன்றி இருவருக்குங் காட்சி கொடுத்தருளினார். இருவரும் அவருடைய அடிகளைப் போற்றினர்.

"எம்பெருமானே ! சூத்திரப்பாவை போன்ற நாம் தேவரீர் இயக்குவித்தாலன்றி இயங்கமாட்டோம் ; தேவரீரை அறியும் அறிவை அருளினாலன்றித் தேவரீரை அறிய மாட்டோம். நாம் புல்லறிவினாற் செய்த பிழைகளைப் பொறுத்தருள வேண்டும்" என்று வணங்கி நின்றனர்.

சிவபெருமான் அவர்களை நோக்கி "நீவிர் செய்த குற்றங்கள் ஒன்றையும் திருவுளத்துக் கொள்ளோம் ; மனத்தில் ஒன்றையும் எண்ணுதொழிமின் ; உங்கள் பூசனையை உவந்தோம் ; அந்நாளில் உங்களுக்குத் தந்த பதங்களை இன்றும் தந்தோம்" என்றருளிச் செய்தார்.

இருவரும் "எம்பெருமானே ! தேவரீருடைய திருவடிகளே தஞ்சமெனக் கொண்டொழுகும் பேரன்பைத் தந்தருள வேண்டும்" என்று வேண்டினர். எம்பெருமான் "அவ்வாறேயாகுக" என்றருளிச் சோதியினுள் மறைந்தருளினார்.

திருமாலும், பிரமனும் முன்னர் அடியும் முடியும் தேடா நின்ற அந்த சோதி மலை யானது அருணாசலம் என்று கூறும்படி விளங்கியது. அந்தச் சோதி வடிவம் எழுந்தருளிய இரவே சிவராத்திரி என்கின்ற சிவபுண்ணிய காலமாயிற்று. அத்தகைய ஒப்பற்ற மகாசிவராத்திரியிலே உலகத்தோர் பலரும் சிவலிங்கப் பெருமானை விதிப்படி பூசித்து வீடு பெற்றனர். இன்றும் இந்த வழிபாடு சிறந்து விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. திருப்புராணம்

## அ. திருத்தொண்டர் புராணம்

திருத்தொண்டர் புராணம் என்பது திருத்தொண்டர்களது புராணம் என விரியும். (திருத்தொண்டர் - சிவனடியார்). எனவே இது சிவனடியார்களின் வரலாற்றினைக் கூறும் நூல் எனப் பொருள்படும். இது பெரியபுராணம் என்னும் பெயராலும் வழங்கப்படுகிறது.

புறத்தேயுள்ள இருளைச் சூரியன் போக்குகிறது. அதுபோல அகத்தேயுள்ள அஞ்ஞானமாகிய இருளை இத்திருத்தொண்டர் புராணம் போக்கும் என்பர். இது பன்னிரு திருமுறைகளிற் பன்னிரண்டாவதாகும். இதனை இயற்றியருளியவர் சேக்கிழார் பெருமான் ஆவர்.

திருத்தொண்டர் புராணம் அறுபத்து மூன்று தனியடியார்களையும் ஒன்பது தொகை யடியார்களையும் பற்றிய வரலாற்றைக் கூறுகின்றது. சமயாசிரியர்கள் நால்வருள் மூவராகிய திருஞானசம்பந்தநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தமூர்த்திநாயனருடைய வரலாற்றினைக் கூற முற்பட்ட சேக்கிழார் பெருமான் முதலாவதாக அவருடைய திருவவதாரத்தின் சிறப்பினைக் கூறுகிறார்.

நாயனார் தோன்றினமையால் வேதநெறி தழைத்து நலிவுற்றிருந்த சைவசமயம் மீண்டும் விளக்கம் பெற்றது. வைதிக சைவசமய அடியார்களின் சந்ததி பொலிந்தது. இந்நிலையை உண்டாக்கிய நாயனாரின் திருவடிகளை உச்சிமேற்கொண்டு, சேக்கிழார் சுவாமிகள் அவரது வரலாற்றைக் கூறுகின்றார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்
துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய்
மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்
பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்
தொண்டு பரவுவாம்.

வைதிகசமயம் தழைத்தோங்கவும், மேன்மைமிக்க சைவசமயம் மேம்பட்டு விளங்கவும், தூய மெய்யடியார் பரம்பரை பொலியவுந் தனது திருவாயைத் திறந்து, "அம்மே, அப்பா" என்று அழுதவரும் குளிர்ச்சிபொருந்திய நீர்வளம் மிக்க வயல்கள் சூழ்ந்த சீர்காழியிற் பிறந்தருளியவருமாகிய திருஞானசம்பந்தப்பெருமானின் திருவடித் தாமரைகளை உச்சிமேற்கொண்டு, அவரது திருத்தொண்டின் சிறப்புக்களைச் சொல்லி வணங்குவாம்.

வேதநெறி - வைதிகசைவம். மிகுசைவம் - சித்தாந்த சைவம். பூதம்- பரிசுத்தம். பரம்பரை - சந்ததி. சீதம்- குளிர்ச்சி.

## ஆ. சேக்கிழார் நாயனார் புராணம்

திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளிய சேக்கிழார் பெருமானின் வரலாற்றைக் கூறுவதே சேக்கிழார் நாயனார் புராணம். இந்நூலை இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இவர் சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள கொற்றவன்குடியிற் பிறந்தவர். தில்லைவாழ் அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். சைவ சமய சந்தானகுரவர்களில் ஒருவர்.

இப்புராணத்தின் காப்புச் செய்யுள்களில் ஒன்று சபாநாயகராகிய நடேசப் பெருமானின் தூக்கிய திருவடியைப் போற்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்
தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந்
தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா
மீடேற
ஏராரு மணிமன்று ளெடுத்ததிரு வடி
போற்றி.

சிறப்பமைந்த நான்கு வேதங்களும், தில்லை மூவாயிரவரும், தில்லைப் பதியின் கண் வாழும் வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலிமுனிவரும் வணங்கித் துதிக்கவும், நீர்நிறைந்த கடலாற் சூழப்பட்ட உலகின் கண் வாழுமுயிர்களெல்லாங் கடைத்தேறவும், திருவருள்ஞானம் நிறைந்துள்ள அழகிய சிற்றம்பலத்தின் கண் தூக்கியருளிய நடேசப் பெருமானது திருவடியைப் போற்றுவாம்.

சீர் ஆரும் - சிறப்பமைந்த. சதுர் மறை - (இருக்கு, யசுர், சாமம், அதர் வம் ஆகிய) நான்கு வேதங்கள். பார் - உலகு ; இங்கே தில்லையைக் குறித்து நின்றது. ஏர் - திருவருள் ஞானம். மணி - இங்கே அழகைக் குறித்து நின் றது.

---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. திருப்புகழ்

முருகப்பெருமானின் புகழைக்கூறும் பாடல் திருப்புகழ் எனப்படும். அப் பாடல்களின் தொகுதியும் அப்பெயராலேயே வழங்குகிறது. திருப்புகழ் பாடியவர் அருணகிரிநாதராவர்.

அருணகிரிநாதர் ஏறக்குறைய 450 ஆண்டுகட்டு முன்பு திருவண்ணாமலையிலே பிறந்தார். இளமைப் பருவத்திலவர் நெறி தப்பி நடந்தார். அதனால் வறுமையும் பிணியும் அவரைப் பற்றிக் கொண்டது. ஆதரித்து வளர்த்த தமக்கையாரும் வெறுத்தார். இத்துன்பங்களை அவராலே தாங்கமுடியவில்லை. வாழ்க்கையை வெறுத்தார். திருவண்ணாமலைத் திருக்கோயிலின் வடக்குக் கோபுரத்திலே ஏறிக் கீழே குதித்தார். முன்னைத் தவப்பயனால் முருகன் தரிசனங் கிடைத்தது. பெருமான் அருணகிரியாருடைய தலையிலே தன் திருவடிகளைச் சூட்டி ஞானோபதேசமுஞ் செய்தருளினார். திருப்புகழ் பாடுவதற்கு "முத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தரு '' என்று அடியும் எடுத்துக் கொடுத்தார். அன்று முதல் அருணகிரி நாதர் தலங்கள் தோறுஞ் சென்று திருப் புகழ் பாடினர். மேலே வருவது இவர் கதிர்காமத்திலே எழுந்தருளியுள்ள முரு கப்பெருமான் மீது பாடியதாகும்.

தனன தான தத்த தனதான
தனன தான தத்த தனதான

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தானி னைப்பை யிருபோதும்

இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே

கதிர காம வெற்பி னுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா

மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமானே.

கதிரமலையின் கண்ணே எழுந்தருளி யிருப்பவனே ; பொன்மயமான மேரு மலையை ஒத்த தோள்களையுடையவனே, இனிய புகழ் சேர்ந்த வீரக்கழலை யணிந்த திருவடிகளை உடையவனே, பாண்டிய னின் கூன் நிமிர்த்திய பெருமானே, ஒப் பில்லாத பத்தியினை அடையப்பெற்று, தேவரீரது இனிய திருவடிகளைக் காலை மாலையாகிய இருபொழுதுகளிலும் எனது நெஞ்சமாகிய பெருங்கடலிலே தொடர்பு படுத்தி, அவை எனதுள்ளே சிறந் தொளிர அருள் புரிவீராக.

எதிர் - ஒப்பு. இருபோதும் - காலை, மாலை ஆகிய இரண்டு நேரமும். வாரிதி - கடல். கனகம் - பொன். மதுரம் - இனிமை. வாணி - சொல் ; இங்கே புகழை உணர்த்தியது. வழுதி - பாண் டியன். கூன் - இங்கே கூன் முதுகை உணர்த்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. குமரகுருபரர்

இந்தியாவில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்திற் கைலாசபுரம் என்னும் ஓர் ஊர் உண்டு. அங்கே சண்முகசிகாமணிக் கவிராயர் என்ளெருரு புலவர் இருந்தார். அவர் சைவ வேளாள குலத்தைச் சேர்ந்தவர். அவருடைய மனைவியார் பெயர் சிவகாம சுந்தரியம்மையார். கவிராயருக்கு ஓர் ஆண்குழந்தை இருந்தது. குழந்தையின் பெயர் குமரகுருபரன்.

குமரகுருபரர் பிறந்தநாளிலிருந்து ஊமையாயிருந்தார். வருந்திய பெற்றோர் அவருக்கு ஐந்து வயதாயிருக்கும் பொழுது அவரைச் செந்திலாண்டவன் சந்நிதியில் வளர்த்திவிட்டுப் பிரார்த்தித்தனர். ஆண்டவனருளால் அவருக்குப் பேசுந்திறன் கிடைத்தது. தனக்குத் திருவருள் செய்த செந்திற் பெருமான்மீது '' கந்தர் கலிவெண்பா ' என்ற ஒரு நூலைப் பாடியருளினார்.

அவர் காலத்தில் மதுரையிலே திருமலை நாயக்கன் என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவனுடைய அவைக் களத்திலே ' மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் ' என்னும் நூலைப் பாடியரங்கேற்றினார். அரங்கேற்றம் நடக்கும்பொழுது மீனாட்சியம்மையாரே குழந்தை வடிவாய் வந்திருந்து நூலைக்கேட்டு மகிழ்ந்து, பின் தன் கழுத்திலிருந்த மாலையைக் குமரகுருபரருக்கு அணிந்து மறைந்தார்.

ஒருமுறை திருவாரூருக்குச் சுவாமி தரிசனஞ் செய்யச் சென்றபொழுது அங்கே வன்மீகநாதர்மீது ' திருவாரூர் நான்மணிமாலை ' என்ற பிரபந்தத்தைப் பாடியருளினார்.

பின்பு சிதம்பரஞ் சென்று அங்கே நடேசப் பெருமானையும், சிவகாமசுந்தரியம்மையாரையும் வணங்கிச் ' சிதம்பரச் செய்யுட்கோவை ', ' சிதம்பர மும்மணிக்கோவை ', ' சிவகாமியம்மை இரட்டை மணிமாலை ' என்னும் நூல்களைப் பாடியருளினார்.

குமரகுருபரர் தருமபுர ஆதீனத்துக்குச் சென்று அங்கே அப்போது நாலாம் பட்டத்திலிருந்த மாசிலாமணித் தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்றார். தமது ஞானகுருவை வழிபடும் முகமாகப் 'பண்டார மும்மணிக்கோவை ' பாடியருளினார்.

பின்னர் சிவத்தலங்களை வணங்கியவாறே காசிக்குச் சென்று, காசிவிசுவநாதரை வணங்கிக் ' காசிக்கலம்பகம் ' அருளினார். அக்காலத்தில் காசிநகர், தில்லி மொகலாய மன்னன் ஆட்சிக்குட்பட்டிருந்ததனால், சைவ சமயத்தவரும் சைவத்தைச்சார்ந்த சமயத்தவரும் மிகவும் நலிவுற்றிருந்தனர். சைவசமயத்தை மேலும் மிளிரச் செய்யவேண்டுமென்பதற்காகத் தில்லிபாதுஷா சக்கரவர்த்தியை நேரிற் காண விரும்பினார். அரசன் அவையிற் சென்று, தங்காரியத்திற் சித்தி பெற்று மீளும்பொருட்டு இந்துத்தானிமொழியை நன்கு அறியக் கலைமகள் அருளை வேண்டிச் சகலகலாவல்லி மாலை என்னும் நூலைப் பாடியருளினார்.

கலைமகளின் திருவருளாற் சுவாமிகள் ஓர் உயிர்ச் சிங்கத்தின் மீதேறிச் சென்று தில்லிமொகலாய மன்னனைக் கண்டு, அவனுடைய இசைவு பெற்றுக் கேதார மந்திரம், கேதாரத்துறை, தருமசாலை, குமாரசாமி மடம் எனும் நிலையங்களை அமைத்தார். இன்றும் இவை காசியில் நிலை பெற்றுச் சிறப்பாகக் காசித் தலயாத்திரை செய்யும் தமிழர்களுக்குப் பேருதவியாகவிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் குமாரசாமி மடத்தில் நீண்டகாலந் தங்கியிருந்து இந்துத்தாணியிலும், தமிழிலும் புராணப் பிரசங்கம் செய்து வந்தார்.

காசியிலிருந்த நாளில் ஒருமுறை தருமையாதீனத்துக்குச் சென்று தமது ஞானசாரியாரை வணங்கி ஆசி பெற்றுச் சென்றூர். பின்பு காசியிலேயே முத்தியடைந்தார்.

சைவசமய வழிபாட்டுக்குந் தமிழ் மொழி வளர்ச்சிக்குஞ் சுவாமிகள் செய்துதந்த நூல்கள் பெருமைமிகுந்த கருவூலங்களாகும். கலைமகள் மீதுபாடியருளிய சகல கலாவல்லிமாலையைப் பொருளறிந்து பாடி நாடோறும் வழிபடுவோர் கல்வியும் ஞானமுமெய்துவர் என்பது பெரியோர் முடிபாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. சகலகலாவல்லி மாலை

### 1. காக்குங் கருணைக் கடலே

இப்பாடலிலே சொற்சுவைதோய் வாக்குவன்மை வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றார். அது, தம் கொள்கைக்கு நட்பாய் ஏற்றுக்கொண்டவரைப் பின் மாறுபடாத வண்ணம் வசப்படுத்தும் தன்மைகளைப் பொருந்தி, மற்றை மாறுபட்ட எதிரியாய் ஏற்றுக்கொள்ளாத கட்சியினரும் பின் அம்மாறுபாடொழிந்து நட்பினை விரும்பும் வண்ணம் சாதுரியமாகப் பேசும் பேச்சு வல்லமையை எனக்கு அருள்வாய் என்பது.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

சகல மொழிகளினறிவையும் எல்லாக் கலை ஞானங்களையும் ஈந்தருளும் இறைவியே! கடல்போலப் பல துறைகளால் விரிந்து பரந்த வடமொழி நூல்களையும் அரும் பெரும் நிதியங்கள் போன்ற இனிய தமிழ் நூல்களையும் அடியார்களின் நாவில் வீற்றிருந்து பயின்று வளரும்படி, பெருங் கருணை கொண்டு காப்பவளே! எம்மவரால் ஆராயப்படும் வடமொழி, தமிழ் மொழிக் கலையறிவும், அம்மொழிகளிற் பேச்சு வன்மை ஆகியவற்றையும், மற்றும் பல துறைப்பட்ட நூல்களின் அறிவையும், அம்மொழியறிவையும், சொல்லும் சொற்களைக் கேட்போர்க்கு அவற்றைக் கேட்டலிலே சுவை பொருந்தும்படியான வாக்கு வன்மையையும் எனக்குப் பெருக வழங்கியருள்வாயாக.

### 2. கல்விப் பெருஞ் செல்வம்


தில்லிப் பாதுஷாவின் அரண்மனைக்குச் செல்லவிருந்த சுவாமிகள், அங்கே நிகழக் கூடியவற்றை நினைத்து, தம் மதம் நிறுவ இன்றியமையாதவற்றை இப்பாடலாற் சகலகலாவல்லியிடம் வேண்டுகின்றார். தில்லிப் பாதுஷாவின் அவைப் புலவர் தங்கள் மொழியிலுள்ள எந்த நூலுக்காவது பொருள் விரித்துரைக்க வினவலுறல் நேர்ந்தாலும் அந்நூற் பொருளை விரித்துச் சொல்லவல்ல அறிவாற்றலும் வேண்டும் என்ற கருத்தையும் கொண்ட வேண்டுகோளையுடையது இச் செய்யுள். மேலும், அட்டாவதானம் முதலியவற்றைச் செய்து தம்மை வெல்ல வரும் புலவர் எதிர்ப்பட நேர்ந்த காலத்தில் அவ்வாற்றலும் வேண்டுமாதலின் அதன் பொருட்டு அதனையும் இப்பாடலிலே வேண்டிக்கொண்டார்.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே!

சகலகலாவல்லியே, செந்தாமரை மலராசனியாகிய இலக்குமிக்கு (தான் ஈந்தருளும் செல்வப் பொருளானது கல்விப் பொருள் போல அழியா நிலைமையதாகக் கொடுத்தற்கு) இயலாதது என்று சொல்லத் தக்கதாயிருக்க, ஒரு காலத்தும் அழியாத நிலைமையுடையதாகக் கொடுக்கப்படும் மேம்பட்ட கல்விச் செல்வத்தை வேண்டுவார் பெறும்படியாக அருளுந் தன்மையுடையவளே; என்னோடு சொற்போர் செய்வோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப் போரில் வெல்லுதற்குரிய ஆற்றலையும், என்னிடத்தே கலைகளைக்கற்க விரும்பி வந்தடைந்தோர்க்கு அவர் விரும்பிய கலைகளைப் போதிக்கவல்ல ஆற்றலையும் எனக்கு ஈந்தருளுக.

நளினம் - தாமரை மலர். செல்வி - செல்வத்தைத் தரும் தெய்வமாயுள்ளவள். அரிது - ஈண்டு இல்லை என்னும் பொருள் தந்தது. பேறு - பெறுதல், பெறப்படுவதாகிய பொருள் ; ஈண்டு பேற்றுக்குக் காரணமாய்த் தருபவள். அட்டாவதானம் (அட்ட அவதானம்)- எட்டுவகை அவதானங்கள்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11—13531

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தர் பெருமான்

விசாக போயா நாள் பற்றி நீங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள். சென்ற விசாக தினத்திலே கண்டவை எல்லாம் உங்கள் நினைவில் இருக்கின்றனவா? அன்று எங்கும் அலங்காரம்! எவ்விடத்திலும் ஒளிவெள்ளம்! ஒவ்வொரு பௌத்தரின் வீட்டிலும் ஒரு வெளிச்சக் கூடாவது இருந்ததை அவதானித்திருப்பீர்கள். விசாக நாளிலே எங்கும் அமைதி நிலவும். வளர்ந்தோர்களும் பாலர்களும் இந்நாளைச் சமாதானமும், புனிதமும் நிறைந்ததாய் ஆக்கப் பெரிதும் முயல்வர்.

புத்தர் பெருமானின் ஞாபகத்தினை இவ்வாறு பௌத்தர்கள் கௌரவிக்கின்றார்கள். பெருமைப்படுத்துகின்றனர். இவற்றிற்காகவே இந்நாளை இவர்கள் ஒதுக்கி வைத்திருக்கின்றனர். ஏனெனில் பௌத்த சமயத்தின் தாபகர் புத்தர் பெருமானின் வாழ்க்கையிலே குறிப்பிடத்தக்க மூன்று முக்கிய சம்பவங்கள் இத்தினத்திலே தான் நிகழ்ந்தன.

சுமார் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளின் முன்பு இந்தியாவின் வடகிழக்கிலே, இமாலயப் பெருமலையின் தென் சாரலிலே ஓர் அரசு விளங்கியது. இதனைச் சாக்கிய குலத்தவர் ஆண்டனர். சாக்கிய குலத்தலைவன்பெயர் சுத்தோதனன். இவனது தலைநகர் கபிலவஸ்து. இவனுக்குப் பட்டத்தரசியாய் விளங்கியவள் மகாமாயாதேவி. அவள் பிள்ளைப்பேற்று நிலையில் இருந்தாள். அக்கால வழக்கப்படி, மகாமாயாதேவி தன் பெற்றோரின் நகரமாகிய தேவதாகத்திற்குப் பேரூர்வலத்தோடு அனுப்பப்பெற்றாள். செல்லும் வழியிலே விசாக பௌர்ணமி தினத்தன்று, லும்பினி (தற்கால லுமின்தேய்) என்ற அழகிய சால மரச்சோலை ஒன்றிலே, தன் முதற் குழந்தையைப் பெற்றெடுத்தாள். பெற்றோர் இக்குழந்தைக்குச் சித்தார்த்தர் என்று பெயரிட்டனர். இக்குழந்தையின் குடும்பப் பெயர் கௌதமர் என்பது. எனவே சித்தார்த்தர், சித்தார்த்த கௌதமர், எனப் பெயர் பெற்றார்.

அரச வாழ்க்கையின் ஆடம்பரங்களுக்கும், வசதிகளுக்குமிடையே, இளவரசரான சித்தார்த்தர், வளர்ந்தார். அவர் வளர வளர அரசர்க்குரிய கலைகள் யாவும் கற்பிக்கப்பெற்றன. யாவிலும் அவர் மிகச் சிறந்தார். பதினறு வயதானதும், இந்திய வழக்கத்திற்கிசைய, அவர் இளவரசி யசோதரையை மணந்தார். எனினும் காலம் செல்லச் செல்ல தன் தகப்பனின் மாளிகையின் ஆடம்பர வாழ்க்கையில் அவருக்குச் சலிப்பேற்பட்டது. எந்த நேரமும் சிந்தனையில் மூழ்குவது வழக்கமாயிற்று. ஆனல், சித்தார்த்தர் ஒருநாள் அரசராதல் வேண்டும் என்ற அவாவினல், சுத்தோதனன் தன் மகனை இளவரசருக்குரிய வாழ்க்கையிலே ஈடுபடுத்தப் பெரிதும் முயன்றான். ஆனல் சித்தார்த்தரோ வாழ்க்கையின் இயல்புகளைப் பற்றி அதிகம் சிந்திப்பதிலேயே ஈடுபட்டார்.

இதுவரையும் ஆடம்பர வாழ்க்கையில் வளர்ந்த சித்தார்த்தர், மக்களின் துன்பங்களைக் கண்டார் அல்லர். ஆனல், குறுகிய காலத்தில், ஒன்றன் பின் ஒன்றாகப் பல துன்ப நிகழ்ச்சிகளைக் காண நேர்ந்தது. முதலில், மெலிந்த பலவீனன் ஒருவனையும், அடுத்து நீண்ட நாள் நோய் வாய்ப்பட்டோன் ஒருவனையும், இறுதியில் பிணம் ஒன்றையும் அவர் கண்டார். இவற்றின் பயனாக இவ்வுலகம் எவ்வளவு துன்பங்களால் பீடிக்கப்பட்டிருக்கின்றது, என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை அவருக்குத் தெளிவாயிற்று. முடிவில்லாத இக்கவலைகளிலிருந்து மனிதன் விடுபடல் கூடுமோ என்று அவர் திகைத்தார். இதற்குப் பின் வீடுவாசல் துறந்து, அலைந்து திரியும் புனிதத் துறவி ஒருவரைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அத்துறவி அமைதியும் சாந்தமும் உருவாகக் காட்சி அளித்தார். அவரைப் போலவே தாமும் இல்லற வாழ்க்கையைத் துறந்து, வெளியேறுவதற்கு. சித்தார்த்தருக்கு அவா உண்டாயிற்று. இவ்வாறு திரிந்தால், தாமும், தம்போன்ற மக்களும் கவலைகளிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் விடுதலைபெற வழி கிடைக்கும் என்று அவர் எண்ணினார்.

இவ்வேளையில் அவரின் மனைவி தன் முதற் குழந்தையைப் பெற்றாள். இளவரசரான சித்தார்த்தர், மாளிகையிலேதான் தொடர்ந்து தங்கினால், " தம் மனைவியிலும் மகனிலும் பாசம் மேலும் மேலும் உறுதியாய் வளர்ந்துவிடும் ; அப்பாசம் மனித துன்ப துயரங்களினின்றும் நீங்குதற்கு வழிகாணும் தன் நோக்கத்திற்குத் தடையாகி விடும் " என்பதை உணர்ந்தார். ஆகவே, அரச பதவியைத் துறப்பது என்ற நிறைவுறுதியோடு அதனையும், தம் மனைவியையும், குழந்தையையும் விட்டு நீங்கி, வீடற்ற புனித மனிதராய் வாழ்க்கையின் உண்மையை உணர சித்தார்த்தர் புறப்பட்டார். பதவிகளையும், பாசத் தளைகளையும் துறந்த இம்மாபெருஞ் செயல், " மகா முற்றத் துறத்தல் " என வழங்கும். இப்போது இவருக்கு வயது இருபத்தொன்பது.

இளவரசர் வீடற்று ஆறு ஆண்டுகள் இருந்தார். அதாவது இவர் இடத்திற்கு இடம் அலைந்து சென்றார். ஞானிகளின் அறிவுரைகளைக் கேட்டார். தாமாகவே, தம்மிலே பல பரிசோதனைகளை நிகழ்த்தினார். பலவிடயங்களை அவதானித்தார். எனினும், தாம் தேடிய உண்மையை அவர் கண்டாரல்லர்.

ஆறு ஆண்டுகள் இந்த தீவிர தேடுதலின் பின்னர், அவர் ஆழ்ந்த சிந்தனையோடு, பெருமரம் ஒன்றின் நிழலில் அமர்ந்திருந்த ஒரு தினம், அவர் தேடிய வாழ்வியல்பின் உண்மை புலனாயிற்று. அவர் உணர்ந்து கொண்டவை (1) நாம் அறிந்தவரை, வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நோவையும் துன்பத்தையும் அடைய வேண்டியே இருக்கிறது. (2) இதற்கு திட்டவட்டமான காரணம் உள்ளது. (3) அக்காரணங்களை அகற்றினால் கவலை நீங்கும். (4) துன்பத்திலிருந்து அவர் விடுதலைபெறும் வழி உண்டு. விசாக போயா நாளில் புத்தர் பெருமான் கண்ட இம்மெய்யுணர்வு, இவ்வாறு நாலு பிரிவுகளைக் கொண்டிருந்தது. எனவே இது ' மகத்தான நாலு உண்மைகள் ' என வழங்கலாயிற்று. மெய்யுணர்வு பெற்ற இக்காலத்திலிருந்து இவர் மெய்ஞானி (புத்தர்) என விளங்கப் பெற்றார். மெய்ஞானம் பெற்ற வேளையில் அவர் அமர்ந்திருந்த இடத்திலுள்ள மரம் வெள்ளரசு எனத் தெரிகின்றது. அவர் மெய்யுணர்வு பெற்ற இடம் " புத்தகயா " என இன்று வழங்குகின்றது.

இசபத்தானம் (தற்கால காசியின் அண்மையில்) என்ற அழகான சோலை உண்டு. புத்தர்பகவான் முதல் முதல் தமது ஞான உண்மையினை எடுத்துரைத்த இடம் இதுதான். தம்மோடு முன் உண்மையைத் தேடித் திரிந்த ஐவருக்கு உரையாற்றினார். இவ் ஐவருமே இவர்தம் முதற் சீடர்கள். இந்த முதற் பிரசங்கம் " தர்ம சக்கரத்தின் சுழற்சி ஆரம்பம் " என்பர். இப் பிரசங்கத்தில் " ஒருவன் அதிக ஆடம்பரத்தையும் சொகுசையும் வாழ்க்கையில் தேடினால் தீங்கு நேரிடும். அதே அளவு தீங்கு, தன் வாழ்க்கையை, தானாகவே அதிக கஷ்டப்படுத்தினாலும் நேரிடும். ஆகையால் மிகைப்பட்ட போக்குகளுக்கும் இடையிலான ' நடுநிலை நெறி தேடுதல் திறம் ' என அறிவுரை வழங்கினார்.

ஞானம் அடைந்த பொழுது புத்தர் பிரானுக்கு வயது முப்பத்தைந்து. மேலும் நாற்பத்தைந்தாண்டுகள் அவர் வாழ்ந்தார். இக்காலம் முழுவதையும் தமது சகாக்களின் நல்வாழ்விற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்றே அவர் அர்ப்பணித்தார். வாழ்வின் பல நிலைகளிலும் இருந்த மக்கள் பலரையும், தனது தேசாந்தர காலத்தில் அவர் சந்தித்தார்; தீமைகளையும், இழிவுகளையும் கைவிடுமாறும், நல்லதும் புதினமானதுமான வாழ்வை நடாத்துமாறும் அவர்களுக்கு உபதேசித்தார்; வறியவர், செல்வர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், நல்லவர், தீயவராகிய யாவருக்கும் உண்மைகளை எடுத்துரைத்தார்; எப்பொழுதும் ஞானமும், கருணையும் உடையவராய் விளங்கினர். மிக விரைவிற் பலரும், தம்மை அவர்களின் சீடர்கள் என்று சொல்லிக்கொள்ளத் தொடங்கினர். ஐவரிலே தொடங்கிய அந்தச் சீடர் கூட்டமானது இன்று ஐம்பத்தைந்து கோடியாக வளர்ந்துள்ளது.

புத்தர்பகவான் தாம் கண்டுணர்ந்த உண்மையினை, உலகிலுள்ள ஒவ்வொருவரும், ஆணோ பெண்ணோ, முயன்றால் தாமாகவே பெற்றுவிடலாம்; பெறல் வேண்டும் என்று உபதேசித்தார். மனிதராயிருத்தலின் மேம்பாட்டைச் சுட்டிக் காட்டினர். மனிதர் யாவரும் சமமென்பதைப் போதித்தார். சாதிக் கொள்கைகளுக்கு எதிரான பிரசாரம் செய்தார். நோயாளரைப் பேணினர். வறியோர்க்கும் உதவியற்றோர்க்கும் உதவுவதின் முக்கியத்துவத்தை, அவர் தன் வாழ்க்கையால், எடுத்துக்காட்டாய் விளக்கி வழிப்படுத்தினர். பல சந்தர்ப்பங்களில், தனது அதிக கருணை காரணமாக, அவர் தாமாகவே வறியோரையும், நோயாளிகளையும், கவலைப்படுவோரையும் நாடிச் சென்று உதவினர். சாதியிலிருந்து தள்ளப்பட்டவனும் துயரடைந்தவனுமான சிறுவன் சுனீதனுக்கு அவர் குருத்துவப்பட்டத்தை வழங்கினர். அழுக்கும், தீராத நோயுமுள்ளமையால் தன் தோழர்களாலே கைவிடப்பட்ட பித்தகத்தனதிச என்போனின் புண்களைத் தன் கையாலேயே கழுவிக் கட்டி ஆதரித்தார்.

அகிம்சை, அன்பு, கருணை, பிறர்க்குத் தொண்டு செய்தல், அவர்களின் நல்வாழ்வினைக் கருதுதல், நோயாளரைப் பேணல் என்பன புத்தர் பிரானின் வாழ்வின் முக்கிய அம்சங்களாகும். அவரின் உதாரணத்தைப் பின்பற்றி, அவர் வழியிற் சென்றோர் இந்தியாவெங்கணும், பிற்காலத்தில் பிறநாடுகளிலும், வைத்திய சாலைகள் நிறுவினர். அவரின் உபதேச மொழிகள் கவலையும், நோவும் கொண்ட பலர்க்குச் சாந்தத்தையும் சமாதானத்தையும் ஈந்தன. இவர்களில் ஒருவர், தன் ஒரே பிள்ளையின் மரணத்தினல் பித்தடைந்த கிசாகோத்தமியாவர்.

விசாக தினம் ஒன்றிலேதான் புத்தர் பெருமான் குசிநார (தற்கால குசி நகரம்) என்ற இடத்திலுள்ள சால மரச்சோலையிலே வாழ்வை நீத்தார். அப்பொழுது அவருக்கு வயது எண்பது. சிங்கள சாகியத்தின் தாபகரான விஜய இளவரசன் இதே தினத்திலேதான் ஸ்ரீலங்காவை அடைந்தான் என்று சொல்லப்படுகிறது. ஆகவே விசாக தினம் சிங்கள சாகியத்தின் தோற்றத்துக்கும் முதன்மையான வருடாந்த கொண்டாட்ட நாளாகும்.

உலகிலுள்ள பௌத்தர்கள் யாவரும் கருணைநிறை புத்தமகானின் பிறந்த, ஞானம் பெற்ற, பரிநிர்வாணமடைந்த நாள் என்பதாலேயே விசாக நாளில் பெருவிழா எடுத்துக் கொண்டாடுகின்றனர்.

புத்தர் பெருமானின் வாழ்க்கை வரலாறும் உபதேசங்களும் பெருந்தொகையான மக்களுக்கு ஆசிகளை அளித்தன, அளித்துக் கோண்டேயிருக்கின்றன.



12—13531

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்)

அரேபியர்

தென்மேற்கு ஆசியாவில் உள்ள அரேபியா என்னும் பிரதேசத்தில் வதியும் மக்கள் அரேபியர்கள் எனப்படுகின்றனர்.

பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த அரேபியர் மிகக் கொடிய மனிதர்களாக விளங்கினர். இவர்கள் இழிவான பாடல்களைப் பாடுவதிலும் மது அருந்துவதிலும் தம் காலத்தைக் கழித்தனர். அந்நாட்களில் அரேபியர் தம் விருப்பப்படி பல பெண்களை மணந்தனர். ஆண்களின் பிறப்பின்போது மகிழ்வு கண்ட அரேபியர், பெண் மகவு கிடைக்கும்போது துக்கமடைந்தனர். சிலர் தமக்குப் பிறந்த பெண் குழந்தைகளைக் கொலை செய்தும் உயிருடன் புதைத்தும் வந்தனர். அரேபியர் அநேக தெய்வங்களை வழிபட்டதுடன், விக்கிரகங்களையும் வணங்கினர். மனிதர்களையும் தெய்வங்களுக்குப் பலியிட்டனர். இத்தகைய முறைகளால் தெய்வங்களை மகிழ்விக்கலாம் என்று நம்பினர். விலங்குகள், தாவரங்கள், கற்பாறைகள், கற்கள் போன்ற பலவற்றைத் தம் தெய்வங்களாகக் கருதினர்.

அரேபியாவிலுள்ள மக்கா நகரில் ஓர் ஆலயம் இருந்தது அது கஃபா என்று அழைக்கப்பட்டது. ஒரே தெய்வ வழிபாட்டுக்காக அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் அரேபியர் தம் விக்கிரகங்களை வைத்து வணங்கினர். அங்கே முந்நூற்று அறுபது விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்தன.

பிறப்பும் பால்யமும்

அரேபியர் பல குலங்களாகவும் கிளைகளாகவும் பிரிந்து வாழ்ந்தனர். இக்குலங்களில் ஒன்று '' குறைஷ் '' என்று அழைக்கப்பட்டது. இக்குலத்தவரே கஃபா எனும் ஆலயத்தைப் பரிபாலித்து வந்தனர். இக்காரணத்தால் குறைஷ் குலம் ஏனைய குலங்களிடம் மிக்க மதிப்பைப் பெற்றது.

குறைஷ் குலத்தில் அப்துல்லாஹ் எனும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் ஆமினா எனும் பெண்ணை மணந்தார். ஆமினா கர்ப்பவதியாயிருந்த போது, வெளியூர் சென்றிருந்த அப்துல்லா வழியில் மரணமடைந்தார். மரணித்து மூன்று மாதங்களின் பின் ஆமினா ஆண் மகவொன்றைப் பெற்றெடுத்தார். இக்குழந்தைக்கு முஹம்மத் என்று பெயர் சூட்டப்பட்டது. முஹம்மத் எனும் அறபுச் சொல்லுக்குப் புகழப்பட்டவர் என்பது பொருள்.

இக்குழந்தை எழுதவோ வாசிக்கவோ வேண்டிய கல்வியறிவைப் பெறாது வளர்ந்து வரலாயிற்று. முஹம்மதின் ஆறும் வயதில் தாயார் ஆமினாவும் இறந்துவிட்டார். அநாதையான இப்பிள்ளை பாட்டனாரின் பாதுகாப்பில் விடப்பட்டது. பாட்டனாரும் பிள்ளையின் எட்டாம் வயதில் இறந்து விட்டார். இதனால் இப்பிள்ளையைப் பராமரிக்கும் பொறுப்பை இவருடைய பெரிய தந்தை அபூதாலிப் ஏற்றார்.

முஹம்மத் தமது பிள்ளைப் பருவத்தை ஏனைய ஏழைச் சிறுவர்களைப் போன்றே கழித்தார். சாதாரண பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் மந்தை மேய்ப்பவராக விளங்கிய இவர், பின்னர் வர்த்தகம் புரியும் நோக்காகச் சிரியாவுக்கும் வேறு நாடுகளுக்கும் சென்றார். எத்தொழிலையும் இழிவான தொழிலாகக் கருதவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையும் நேர்மையும் கொண்டவராய் வாழ்ந்த முஹம்மத் எல்லோரின் நம்பிக்கைக்கும் உரியவரானார். மக்கள் தம் பணத்தையும் ஏனைய பொருள்களையும் பாதுகாப்புக்காக இவரிடம் ஒப்படைத்தனர். இவரும் அவற்றைக் கவனமாகப் பாதுகாத்து உரியவரிடம் திருப்பிக் கொடுத்தார். இதனால் இவரை ' அல் அமீன் ' என்று மக்கள் அழைத்தனர்.

முஹம்மதின் அருங்குணங்களையும் நாணயத்தையும் கேள்வியுற்ற கதீஜா எனும் செல்வப்பெண் தமது வர்த்தகப் பொறுப்பை ஏற்றுச் சிரியாவுக்குச் சென்று வருமாறு இவரை வேண்டினார். இவர் அப்பொறுப்பை ஏற்றுச் செவ்வனே நிறைவேற்றினார். இதனால் மகிழ்வடைந்த கதீஜா சீமாட்டி இவரைத் திருமணம் செய்ய விரும்பினார். எனவே இரு குடும்பங்களின் விருப்பத்தோடு இவர்களிருவருக்கும் விவாகம் நடைபெற்றது. அப்போது முஹம்மதுக்கு வயது இருபத்தைந்து. கதீஜா சீமாட்டிக்கு வயது நாற்பது.

தீர்க்கதரிசியாதல்

வாலிபரான முஹம்மத், மக்காவுக்குப் பக்கத்தில் இருந்த ஒருமலைக் குகையில் தனிமையாக இருந்து சிந்தனை செய்து வந்தார். இறைவனைப் பற்றியும் அவருடைய படைப்புக்களைப் பற்றியும் அவற்றின் இரகசியங்களைப் பற்றியும் சிந்தித்து வந்தார். ஒரு நாள் அல்லாஹ்வின் தூதரான ஜிப்ரீல் அங்கே தோன்றி, '' முஹம்மதே, ஓதுவீராக '' என்றார், '' எவ்வாறு எதனை ஓதுவேன்? '' என்று முஹம்மத் கேட்டார். '' யாவற்றையும் படைத்த உம் இறைவனின் பெயரால் ஓதுவீராக '' என்றார் ஜிப்ரீல். எனவே முஹம்மத் நபியும் ஓதினார்.

இந்நிகழ்ச்சியால் அதிர்ச்சியுற்ற முஹம்மத் நபி தம் வீட்டுக்குத் திரும்பினார். நடந்தவற்றைத் தம் மனைவியிடம் கூறினார். இதைக் கேட்ட கதீஜா சீமாட்டி தம் கணவரைத் தம் பெரிய தந்தையின் மகனிடம் அழைத்துச் சென்றார். விவிலிய நூலையும் ஏனைய புனித நூல்களையும் அறிந்திருந்த அவர் முஹம்மதை நோக்கி, '' உம்மிடம் வந்தவர் ஜிப்ரீல் அவர்களே. நீர் இறைவனின் தூதராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர் '' என்றார். தம் கணவரின் நற்குணங்களை நன்கு அறிந்திருந்த கதீஜா சீமாட்டி அவர் கூறியவற்றை நம்பினார். முஹம்மத் நபியின் பெரிய தந்தையின் மகனான அலியும் இதை நம்பி இஸ்லாத்தை ஏற்றார். இவ்வாறே முஹம்மத் நபியின் சமயபோதனை ஆரம்பமானது.

இதன் பின் அவர்கள் அடிக்கடி முஹம்மத் நபியிடம் வந்து அல்லாஹ்வை வணங்கவும், நோன்பு நோற்கவும், ஏனைய நற்கருமங்களைச் செய்யவும் கற்றுக்கொண்டனர்.

முஹம்மத் நபி பெற்ற தூதுகள் அனைத்தும் அவரது சீடர்களால் மனனம் செய்யப்பட்டன. எழுதியும் வைக்கப்பட்டன. இவை யாவும் கோவை செய்யப்பட்டு அல்குர்ஆன் என அழைக்கப்படுகின்றன. இதுவே முஸ்லிம்களின் வேதநூல்.

முஹம்மத் நபியின் புகழ் நாடு முழுவதும் பரவலாயிற்று. அவரது போதனைகளைக் கேட்பதற்காக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வரலாயினர். பலர், அவரைத் தமது வழிகாட்டியாகவும் நபியாகவும் ஏற்றுக்கொண்டனர்.

மக்கா வாழ்க்கை

முஹம்மத் நபி அவர்கள், அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், தாம் அல்லாஹ்வின் இறுதித் தூதர் என்றும், விக்கிரக ஆராதனை தவறானது என்றும் போதித்தார்கள். '' எல்லார்க்கும் அன்பு காட்டுங்கள் ; ஏழைகளுக்கு உதவுங்கள் ; பிணியாளரைப் பேணுங்கள்; பெண்களின் உரிமைகளைப் பேணுங்கள்'' என்றார்கள். '' பொய் சொல்லாதீர்கள்; களவு செய்யாதீர்கள்; சூதாடாதீர்கள் ; மதுவருந்தாதீர்கள் '' என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கொடிய அரேபியர் தாம் கைக் கொண்டு வந்த தீச் செயல்களை விட விரும்பவில்லை. முஹம்மத் நபியின் நற் குணங்களையும் நல்ல வேலைகளையும் மறந்து அவருக்குத் தீங்கிழைக்க முனைந்தார்கள். அவருக்குக் குறிசொல்வோன் மாந்திரீகன், பித்தன் எனப் பல்வேறு பட்டங்களைச் சூட்டினர். கற்கள் தடிகள் கொண்டு அவரைத் தாக்கியதுடன் புழுதியையும் குப்பைகளையும் அவரின் தலையிற் போட்டனர். அவரைக் கொலை செய்யவும் விரும்பினர். அவரை இறைவணக்கத்தில் ஈடுபடவிடாமல் பல இடையூறுகளையும் விளைவித்தனர்.

முஹம்மத் நபி அவர்களைப் பின்பற்றியவர்களையும் அரேபியர் துன்புறுத்தினர். சிலரைக் கால்களையும் கைகளையும் கட்டிக்கொதிக்கும் மணலில் விட்டனர். உணவும் நீரும் கொடுக்காமல் வாட்டினர். சிலரைக் கொன்றும் விட்டனர். இத்தனை துன்பங்களையும் அனுபவித்தபோதும் தம் நம்பிக்கையையோ, தாம் கைக்கொண்ட சமயத்தையோ கைவிடவில்லை. இவர்கள் அடையும் துன்பங்களைக்கண்டு நபியவர்களின் இளகிய உள்ளம் பாகாய் உருகியது. ஆகவே சிலரை அயல் நாடான அபிசீனியாவுக்குச் செல்ல அனுமதித்தார்கள். ஆனால் நபியவர்கள் எதற்கும் அஞ்சாமல் தம் போதனையைச் செய்தார்கள். அரேபியத் தலைவர்கள் இலஞ்சம் கொடுத்தேனும் நபியவர்களின் போதனையை நிறுத்த முனைந்தனர். பணமும், தலைமைப் பதவியும், அழகிய பெண்ணும் கொடுத்து இப்போதனையை விடுமாறு வேண்டினர். ஆனால் நபியவர்கள் அவற்றை எல்லாம் ஏற்கவில்லை.

இதனால் கோபமுற்ற அரேபியர் நபி பெருமானாரை மேலும் பல வழிகளில் துன்புறுத்தினர். கருமங்களைப்புரிய விடாது அவர்களை தடுத்தனர். அவரைக் கொலை புரியவும் திட்டமிட்டனர். இத்திட்டத்தை நபியவர்கள் ஜிப்ரீல் மூலம் அறிந்து கொண்டார்கள். மக்காவை விட்டு மதீனா நகருக்குச் செல்லுமாறு அல்லாஹ்வின் உத்தரவும் வந்தது. எனவே நபியவர்கள் ஏறத்தாழ முந்நூறு மைல் தொலைவில் உள்ள மதீனா எனும் நகருக்குச் செல்ல முடிவு செய்தார்கள்.

நபியவர்கள் தமது தோழர் அபூபக்கருடன், ஒரு நாளிரவு மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள். நெடு நேரம் பிரயாணஞ் செய்து களைப்புற்று சூரிய உதயத்துக்கு முன்னர் ஒரு குகைக்குள் தஞ்சமடைந்தார்கள்.

மறுநாட் காலை மக்கா வாசிகள், நபியவர்கள் மக்காவை விட்டு நீங்கியதை அறிந்து கொண்டனர். முஹம்மதைக் கொண்டு வந்து ஒப்படைப்பவருக்கு நூறு ஒட்டகங்களைப் பரிசளிப்போம் என்று மக்காத் தலைவர்கள் அறிவித்தனர். எனவே நபியவர்களைத் தேடியலைந்த சிலர், நபியவர்கள் ஒளித்திருந்த குகை வாயிலருகே வந்தார்கள். நபியவர்களுடனிருந்த தோழர் அபூபக்கர் அவர்கள், தேடிவந்தவர்களின் ஒலியைக் கேட்டு அச்சமடைந்தார்கள். ''அல்லாஹ்வின் தூதரே, எதிரிகள் பலர் நம்மைப் பிடிக்க வந்து விட்டார்கள். நாம் இருவர் தாமே இருக்கிறோம்'' என்றார்கள். இதைக் கேட்ட நபியவர்கள் ''அபூபக்கரே அஞ்சாதீர்; நாம் மூவர் இருக்கிறோம். ஏனெனில் அல்லாஹ்வும் நம்முடன் இருக்கிறான்'' என்று நம்பிக்கையோடு கூறினார்கள். தேடிவந்தவர்கள் குகை வாயிலை எட்டிப்பார்த்தபின் வேறு இடங்களில் நபியைத் தேடிச் சென்றனர். பின்னர் மூன்று நாட்களுக்குப் பிறகு இருவரும் மதீனாவுக்குப் புறப்பட்டார்கள்.

நபியவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவை அடைந்த நிகழ்ச்சி ஹிஜ்ரா என்று கூறப்படுகிறது. இந்நாளிலிருந்தே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகின்றது.

## மதீனா வாழ்க்கை

மதீனாவில் தீவிரமாக இஸ்லாம் பரவத் தொடங்கியது. மக்காக் குறைஷியர் முஸ்லிம்களை (இஸ்லாத்தைப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுவோரை) மதீனாவிலும் அமைதியுடன் வாழவிடவில்லை. எல்லா முஸ்லிம்களையும் கொன்று இஸ்லாத்தை ஒழிக்க விரும்பினர். இதற்காகப் பெரும்படையைத் திரட்டிக்கொண்டு மதீனாவை நோக்கிச் சென்றனர். நபியவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் பொருட்டு, படைக்கலமேந்திப் போரிட முடிவு செய்தார்கள். அரேபியருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே பலமுறை போர்கள் நடைபெற்றன. ஈற்றில் முஸ்லிம்களே வென்றனர். மக்கா நகரும் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டது. நபியவர்கள் பெரும் படையுடன் மக்கா நகரில் நுழைந்த போது முழு நகரும் அவர்களிடம் சரணடைந்தது.

வெற்றியின் உச்சக்கட்டத்தில் இருந்தபோதும் நபியவர்கள் கருணையும், தாராள சிந்தையும் கொண்டவர்களாகவே விளங்கினார்கள். குடிகளை நன்றாக நடத்தியதுடன் தம் வீரர்கள் எதிரிகளைக் கொலை செய்யவோ அவர்களின் உடைமைகளைக் கொள்ளையிடவோ அனுமதிக்கவில்லை. குறைஷியர்க்கும் அவர்களின் தலைவர்களுக்கும் கருணை காட்டினார்கள். தாம் கொல்லப்படுவோம் என்ற அச்சத்துடன் குறைஷியர்கள் நபியவர்களை அணுகிய போது ''எனக்குப் பலவகையிலும் இன்னல் விளைத்த நீங்கள் என்னிடமிருந்து எதனை எதிர்பார்க்கிறீர்கள்'' ? என்று அவர்களிடம் கேட்டார்கள். அதைக் கேட்ட அம்மக்கள் '' நீர் மேன் மக்கள் வழி வந்த மேன் மகனாயிற்றே '' என்றார்கள். '' உங்கள் யாவருக்கும் மன்னிப்பளித்து விட்டேன் ; நீங்கள் சுதந்திர மக்களாகச் செல்லலாம் '' என்று கூறி எல்லோரையும் அனுப்பினார்கள் நபியவர்கள்.

நபியவர்களின் தாராள சிந்தையைக் கேள்வியுற்ற அரேபியர் திரள் திரளாக வந்து இஸ்லாத்தைத் தழுவலாயினர். நபியவர்கள் மதீனாவை அடைந்து பத்து வருடங்களுக்குள் அரேபியாவின் பெரும்பான்மையான மக்கள் இஸ்லாத்தை ஏற்றனர்.

## நபியவர்களின் மறைவு

நபியவர்கள் மதீனாவுக்கு வந்து 11 ஆண்டில் தமது சேவை பூர்த்தியானதும் தமது 63ஆம் வயதில் நிம்மதியாக உயிர் நீத்தார்கள். இது கிறீத்துவுக்குப் பின் 632ம் ஆண்டு ஜூன் மாதம் எட்டாந் திகதி மதீனாவில் நிகழ்ந்தது. அங்கேயே அடக்கஞ் செய்யப்பட்டார்கள்.

## நபியவர்களின் வாழ்க்கை முறை

நபியவர்கள் எளிமையான வாழ்க்கையைக் கைக்கொண்டிருந்தார்கள். கனமான உடைகளையே அணிந்தும், சாதாரண உணவு வகைகளையே உண்டும் வந்தார்கள். தமது உடைகளையும் பாதணிகளையும் தாமே செப்பனிடுவதை இழிவாகக் கருதவில்லை. வீட்டைச் சுத்தம் செய்தலையும் கால் நடையிலிருந்து பால் கறத்தலையும் தாமே செய்தார்கள். அநாதைகளையும் சிறுவர்களையும் நேசித்தார்கள். பேரீந்து வாற்கோதுமை ஒட்டகப்பால் போன்றவற்றை அதிகம் உண்டு வந்தார்கள். முதியோருக்கு மரியாதை செலுத்தினார்கள். '' ஏழைகளை நேசித்து அன்பு காட்டுங்கள். அவர்களை உங்கள் பக்கத்தில் அழையுங்கள் ; அல்லாஹ் உங்களைப் பக்கத்தில் அழைத்துக் கொள்வான் '' என்று ஒரு முறை கூறினார்கள்.

நபியவர்கள் எல்லா மனிதர்களுக்கும் எல்லாப் பிராணிகளுக்கும் கருணை காட்டினார்கள். '' பிராணிகளுக்குத் துன்பம் செய்யாதீர்கள் '' என்றார்கள். அவர்கள் எவரையும் நிந்திக்கவோ, திட்டவோ இல்லை. தமக்கு எல்லையற்ற தீமை செய்த பரம விரோதியையும் சபிக்கவில்லை.

> முஹம்மதே, உலகங்களுக்கெல்லாம் அருட்கொடையாகவே உம்மை அனுப்பினோம் ''
>
> (அல்குர்ஆன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்த மறையை ஏற்படுத்தியவர் இயேசுக்கிறிஸ்து

பலஸ்தீன் நாட்டின் கலிலேயாக் கிராமத்திலே ஒரு நாள்! அஃது ஒளிமயமான நன்னாள். அன்று திரளான மக்கள் குழுவினரால் அறியப்பட்டவரும், எவருக்கும் இணையற்றவருமான ஒரு போதகரின் அறிவுரைக்குச் செவிசாய்க்க ஒரு மலைப் பாங்கான இடத்தை அண்மினர். அவரின் இயல்பான போக்கும், அவர் அளித்த செய்திகளும் மக்களை நன்கு கவர்ந்தன. அவர் அன்பையும், அமைதியையும் பற்றி அழகாகப் பேசினார். அவர்களது அயலார் பகைவர்களாக இருந்தாலும், அவர்கள் சகோதரர்களாக இருக்கிறார்களென்றும், எல்லாருக்கும் இறைவன் தந்தையாக இருக்கிறாரென்றும் தெளிவாகக் கூறினார். இந்த மனிதன் யாராக இருக்கலாம்? சிலர் அவரை இறைவாக்கினர், முன்பு வந்தவர்களைப் போன்ற ஒருவரென்றும் ஏனையோர் உரோமை ஆளுநர்களிடமிருந்து தம்மை விடுவித்து தமக்கு விடுதலை அளிக்க வந்த மீட்பர் என்றும் கருதினார்கள். உண்மையாகவே இவர் இறைவாக்கினரும் மீட்பருமாக இருக்கிறார். இன்னும் கிறிஸ்த மறையை ஏற்படுத்திய இயேசுக்கிறிஸ்துவும் இவரே.

இவர் பெத்தலெகேம் என்னும் சிற்றூரில் எளிய ஏழைக் குடிசையில் யூத குலத்தில் பிறந்தார். என்றும் கன்னியான மரியாளே இவருடைய தாயானாள்; அவளிடத்தில் இவர் அற்புதமாக உற்பவித்தார். மரியாளுக்கு மண ஒப்பந்தமான தச்சனான சூசை என்பவர் இயேசுவின் பிறப்பிலிருந்தே அவருக்கு வளர்ப்புத் தந்தையானார். நசரேத்து என்னும் ஊரிலேயே இவர் தமது இளமைப் பருவத்தைக் கழித்தார். இதனாலேயே இவர் நசரேயனாகிய இயேசு என்று பலமுறை அழைக்கப்பட்டார்.

இவர் வளர்ந்து வரும் நாட்களில் இவரை அறிந்தவர்களால் மிகவும் புகழப்பட்டார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக அமைதியிலும், அயரா உழைப்பிலும் ஆசையோடு வாழ்ந்து வந்தார்.

இந்நாட்களிலே ஸ்நாபக அருளப்பர் என்னும் இறைவாக்கினர் ஒருவர் உலகம் எதிர்பார்த்திருந்த மீட்பர் இறுதியாக வந்துவிட்டார் என்று மக்களுக்கு அறிவித்தார். யோர்தான் ஆற்றங்கரையில் தம்மிடம் வந்தவர்களுக்கு திருமுழுக்கு அளித்து தீய வழிகளை விட்டு விலகும்படி அவர்களை ஏவினார். இந்த திருமுழுக்கானது அவர்களைப் புதிய வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் ஓர் உறுதியான மனநிலையின் வெளி அடையாளமாக இருந்தது. இவ்வாழ்வை விரும்பி நிற்கும் சகலரையும் தம்மோடு இணைத்துக் கொள்வதற்காகவே பாவமில்லாதவராகிய இயேசு ஒருநாள் அருளப்பரிடம் வந்து திருமுழுக்கைப் பெற்றார். பலகாலமாக மக்களால் எதிர்பார்க்கப்பட்ட மீட்பர் இவர்தாமென்று அருளப்பர் அறிந்து கொண்டார். இதற்குப் பின்பு அவர் அமைதியாக ஓர் இடம் தேடி செபத்திலும் தவத்திலும் சிலகாலம் செலவழித்து கடவுளால் தமக்கு அளிக்கப்பட்ட திருப்பணிக்குத் தம்மை ஆயத்தப்படுத்தினார்.

இயேசு தமது பகிரங்க வாழ்வைத் தொடங்குவதற்கான ஓய்வு நாளிலே யூதரின் செபக் கூடத்தில் அவர்களுடைய வேத நூலை எடுத்து வாசித்தார். "நீங்கள் கேட்ட இந்த மறைநூல்வாக்கு இன்று நிறைவேறிற்று," என்று கூறலானார்.

அவருடைய வார்த்தையும் செயலும் நிறைந்த திருப்பணியானது இறைவனிலே நம்பிக்கைகொண்டு அயலவனை அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து மன்னித்து வாழவேண்டுமென்று தெளிவாகக் காண்பித்தது. ஏழைகள் துயரப்படுவோர் சோர்வுற்றோருக்கு உதவி செய்தார். வெளிவேடக்காரரைச் சுட்டிக் காண்பித்தார். மற்றவர்களால் ஒதுக்கப்பட்டவர்களுக்குச் சாதகமாக நின்றார். பாவிகள் மட்டில் ஆழ்ந்த அனுதாபம் கொண்டார். வியாதிகளைக் குணமாக்கினார். குருடருக்குப் பார்வை அளித்தார். ஊமையர் பேசவும் செய்தார். அசுத்த அரூபிகளைத் துரத்தினார். இவரது வல்லமையால் கடலில் எழுந்த புயலை அமர்த்தினார். மரித்தோருக்கு உயிர் கொடுத்தார். வியப்புக்குரிய வாழ்வுக்கு ஊற்றாக அமைந்தது அவர் இறைவனோடு கொண்டிருந்த ஒன்றிப்பேயாகும்.

தமக்கு உதவி செய்ய யேசு பன்னிருவரைத் தேர்ந்து கொண்டார். அவர்கள் செல்வந்தரும் அல்லர், கல்விமான்களும் அல்லர். சிலர் இராயப்பரைப் போன்று மீனவர்கள். ஒருவர் வரி வசூலிப்பவர், மற்றவர் தீவிரவாதி. அவர் தமது மாதிரிகையாலும் போதனையாலும் அவர்களைப் பயிற்றித் தமது சீடராக்கிக் கொண்டார். '' நான் உங்கள் மேல் அன்பு கூர்ந்ததுபோல் நீங்களும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கூருங்கள் '' என்று தாம் இறப்பதற்கு முதல்நாள் கூறினார். எல்லோரும் தம்மைப் பின் செல்லும்படியாகத் தமது சீடருக்கு இரு கட்டளைகளைக் கொடுத்தார். '' உன் கடவுளாகிய ஆண்டவரை முழு உள்ளத்தோடும் அன்பு செய். உன்மீது அன்பு காட்டுவது போல் உன் அயலான் மீதும் அன்பு காட்டு. ''

அவர் ஊரெல்லாம் சென்று வரும் போது தம்மைப் பின் சென்ற திரளான மக்களுக்கு சிறிய கதைகளாலும் உவமைகளாலும் தமது நற் செய்தியை எடுத்துரைப்பார். அவருடைய போதனை எல்லோருக்கும் எளியதாக அமைந்தது. '' தன்னலம் தேடும் மனப்பான்மையை மாற்றிப் புதுவாழ்வுக்காகத் தாழ்ச்சியையும் அன்புள்ளங்களையும் கொண்டிருங்கள். என்னைப் பின் செல்பவனுக்கு எல்லாம் ஆகும் '' என்று குறிப்பாகத் தமக்குச் செவிசாய்க்க மறுத்த ஆணவக்காரருக்கும், வெளி வேடக்காரருக்கும் எடுத்துரைத்தார். குழந்தைகளின் மத்தியில் இருப்பதில் யேசு எப்போதும் தனி இன்பம் கண்டார் என்று கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய வேதாகமம் கூறுகின்றது. ஒருமுறை சிறுவர்கள் அவரிடம் சென்றபோது சீடர்கள் அவர்களை அதட்டினர். யேசுவோ அவர்களிடம் '' குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். ஏனெனில் கடவுளின் அரசு இத்தகையோரதே '' என்றார்.

உண்மையாகவே அவரை விரும்பாத மக்களும் சிலர் இருந்தனர். அவர் கண்டனம் செய்ததால் அவரை விரும்பாத தேவாலயக் குருக்களும் அதிகாரிகளும் அவர்களுள் இருந்தனர். அவர்களால் அடக்கி ஆளப்பட்ட பொதுமக்களும் யேசுவின் வார்த்தைகளால் தாக்கப்பட்டமையால் அவர்களும் பயந்திருந்தனர். எனவே அவருக்கெதிராகக் குற்றச் சாட்டுக்களைக் கொண்டுவந்து அவரைத் தண்டனைக்குள்ளாக்கினர். உரோமை ஆளுநராகிய போஞ்சியோ பிலாத்துவிடம் அவரைக் கையளித்து அவருக்கு மரண தண்டனை அளிக்குமாறு வற்புறுத்தினர். அவர் மரணத் தீர்ப்பிடப்பட்டார். யேசு சாட்டைகளால் அடிக்கப்பட்டு, ஏளனம் செய்து முள்முடி தரிக்கப்பட்டுச் சிலுவை சுமந்தவராய் யெருசலேமுக்கு வெளியே உள்ள கொல்கொத்தா என்னும் குன்றில் சிலுவையில் அறையப்பட்டார். குற்றவாளிகளுக்கென்று உரோமானியர் விதிக்கும் தண்டனை முறைகளில் சிலுவையில் அறையப்படுதலும் ஒன்றாகும். அவர் அற்புதம் புரிந்து தன்னை விடுவித்திருக்கலாம்; ஆனால் தியசக்திகளை அழிப்பதற்காகவே, எல்லாவற்றையும் நன்மனதுடன் ஏற்றுக்கொண்டார்.

இயேசு ஒரு வெள்ளிக்கிழமை அன்று உயிர் நீத்தபடியால் கிறிஸ்தவர்கள் ஆண்டு தோறும் இச்சம்பவத்தை நினைவு கூர்ந்து வழிபாடு செய்வர். அத்தினத்துக்குப் '' பெரிய வெள்ளி '' என்று பெயர். தாம் வாக்குரைத்த படியே யேசு ஞாயிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் மாலை நேரம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். இதனாலேயே கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிற்றை பெருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். அன்றியும் ஒவ்வொரு ஞாயிறு வாரமும் அவர்களுக்குச் சிறப்பான நாளாகவும் அன்று எல்லாரும் ஒன்றுகூடிப் பொது வழிபாடு நடத்துகிறார்கள். யேசு மரணத்தை வென்று உயிர்த்து தமது சீடருக்கும், தம்மைப் பின் செல்பவர் அனைவருக்கும் தாம் உண்மையான கடவுளும் உண்மையான மனிதனுமாக இருக்கிறார் என்று சான்று பகர்ந்தார்.

இயேசுக்கிறீஸ்து இவ்வுலகில் தீய சக்திகளை ஒழித்தார். ஒவ்வொருவரும் தன்னலப்பற்றுக்களில் இருந்து தாம் விடுதலை பெறுவதற்கு வழிவகைகளையும் திறந்து வைத்தார். '' உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன், நான் உங்கள் மேல் அன்பு கூர்ந்தது போல் நீங்களும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கூருங்கள், நீங்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டிருந்தால்தான் என்சீடர் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வார்கள் '', என்றார். அவர் உயிர்த்த பிற்பாடு தமது சீடர் சிநேகிதர்களுக்குத் தோன்றி தமது பணியைத் தொடர்ந்து செய்யுமாறு அதிகாரம் கொடுத்தார்.

'' நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் என் சீடர் ஆக்குங்கள், உலக முடிவு வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்,'' என்று யேசு அவர்களுக்குக் கூறினார்.

இயேசுக்கிறிஸ்து இன்றும் மனிதரோடு இருந்து, தம்மைப் போன்று தமது பணியைத் தொடர்ந்து செய்யும்படி தங்களுக்கு அருள்புரிந்து வருகிறார் என்று கிறிஸ்தவர்கள் விசுவசிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org